# தமிழரசு

1-7-1982 75 காசு



# மாவட்டங்களில் தந்தை பெரியார் நூற்றாண்டு

# நினைவுத் தூண்

















இதுவரை. திருச்சி, பெரியார்,
செங்கற்பட்டு. தஞ்சை, நெல்லை,
நீலகிரி, கோவை ஆகிய மாவட்டங்க
நினைவுத் தூண்கள் திறக்கப்பட்டுள்



# விளையும் பயிர்

"வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல எதிர் கால வயலுக்கு ஏற்ற நாற்றங் கால் பயிராக பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

"நாற்றங்கால் பயிர் - பார்ப்பதற்கு பச்சைப் பசேல் என்று பசுமையாக இருப்பது மட்டுமல்ல - அதை நன் றாக வளர்த்து விரிவான வயலில் முறையாக நட்டு - ஒழுங்காக வளர்த்தால் - தரமான பயன் கிட் டும்."

பேரறிஞர் அண்ணா

தமிழரசு
ர்: 13 இதழ்: 1
1—7—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — ஆனி 17



# நம் கடமை

''ஒரு வேளை கஞ்சிகூட இல்லாமல் 50 இலட்சம் முதல் 60 இலட்சம் குழந்தைகள் பட்டினியால் வாடுகிறார்கள். மூன்று வேளையும் பட்டினி கிடக்கும் இந்தக் குழந்தைகளுக்கு, ஒருவேளை உணவாவது அளிக்க வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தின்-எண்ணத்தின் அடிப்படையில்தான் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிவித்திருக்கிறோம்.

''இரண்டு வயது முதல் பத்து வயதுள்ள குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

''இந்தத் திட்டம் பற்றி இந்தியா முழுவதும் பேசப்படுகிறது; பாராட்டப்படுகிறது. ஏழைகளுக்கு ஏற்ற திட்டம் என்று பத்திரிகைகளும் பாராட்டுகின்றன.

''பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஒருவேளை உணவாவது அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தைப் பாராட்டாமல், சிலர் இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்ற முடியும்? என்று கேட்கிறார்கள். நாங்கள் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோதும், இப்படித்தான் ''இதை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? இதற்குப் பணம் எங்கே ஒதுக்கியிருக்கிறார்கள்?'' என்றெல்லாம் கேட்டார்கள். நாங்கள் அவற்றையெல்லாம் சிறப்பாக நிறைவேற்றிய பிறகு, 'அது போதாது' என்றார்கள்.

''அதுபோலவே இந்தத் திட்டத்தையும் சிறப்பாக நடத்திக் காட்டுவோம். எப்படிச் செயல்படுத்துவோம் என்பதை அப்போது பாருங்கள்.

''நான் ஏழ்மையை உணர்ந்தவன். எனக்கு மூன்றரை வயதாக இருக்கும் போது நான், எனது அண்ணன், எங்கள் தாய் மூவரும் மூன்று நாட்கள் பட்டினி கிடந்தோம். அப்போது பக்கத்து வீட்டில் இருந்த பெண், முறத்தில் அரிசியைக் கொண்டுவந்து கொடுத்தார். 'நாங்கள் பட்டினி கிடந்து சாவோமே தவிர, அந்த அரிசியை வாங்கமாட்டேன்' என்று என் தாய் கூறினார். 'உங்களுக்காக இந்தப் பிள்ளைகள் ஏன் சாகவேண்டும்' என்று அந்தப் பெண் கேட்டார். பின் அந்த அரிசியை வாங்கி என் தாய், காய்ச்சிக் கொடுத்த கஞ்சியைக் குடித்த நாட்கள் இன்னும் நினைவில் இருக்கின்றன.

''அம்மா பசிக்கிறது'' என்று நான் கூறியபோது, என் தாயார் கண்ணீர் வடித்த நாட்கள் என் நினைவில் இருக்கின்றன.

''அதுபோல் மற்றத் தாய்மார்கள் கண்ணீர் விடக்கூடாது, குழந்தைகள் பட்டினி கிடக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தேன்.

''அதிகாரிகளைப் பழக்கப்படுத்தி அதன் பிறகு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதால் 4 ஆண்டுக்காலம் பொறுத்திருந்து இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

''இந்தத் திட்டத்தை வெளியிடுவதற்கு முன் என் நண்பர்களிடம் கூடச் சொல்லாமல், மனத்தில் வைத்து இருந்தேன். தேர்தல் அறிக்கையில் கூட, தாய்மார்களின் கண்ணீரைப் போக்குவோம் என்றுதான் குறிப்பிட்டோமே தவிர, என்ன திட்டம் என்பதைக் குறிப்பிடவில்லை.

''பட்டினியால் எத்தனையோ கிராமங்களில் உள்ள மக்கள் அவதிப்படுகின்றனர். 63 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டின் கீழே தங்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதமின்றி வாழ்கிறார்கள்.

''அந்த உத்தரவாதத்தை அரசால் தரமுடியுமா? நாம் அனைவரும் சேர்ந்துதான் தர வேண்டும். அது நம் கடமை.''

— மாண்புமிகு முதல்வர்



# புரட்சித் திட்டம் புனிதத் திட்டம்



'பண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'-

என்று முன்னோர்கள் கூறினர்.

'எல்லாரும் ஓர் குலம் ; எல்லாரும் ஓர் நிறை', 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள்' என்ற மக்களாட்சிக் காலத்தில் வாழும் நாம்,

''எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்எனப்பாவேந்தர் பாரதிதாசன் போற்றிய சமதர்ம நெறி தழைத்திடப் பாடு படுகின்றோம்.

இந்நிலையிலும் வருங்கால மன்னர்களான இளஞ்சிறார்கள்- பிஞ்சுக் குழந்தைகள் ஒருவேளை உணவுமில்லாமல் வாடுவது கொடுமையல்லவா ?

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்றார் கவியரசர் பாரதியார். 'கொடிது கொடிது இள்மையில் வறுமை' என்பதும் நாம் அறிந்த மொழியே. வறுமையும் பசிக் கொடுமையும் இளஞ்சிறார்களின் பிஞ்சு உள்ளத்தைத் தைத்திட வேண்டுமா? தமிழகத்தின் கிராமப்புறங்களிலும் பிற நகரப் புறங்களிலும் வாழும் ஏழை, எளிய, மக்களின் குழந்தைச் செல்வங்கள் ஒரு வேளையேனும் உண்டு மகிழும் வாய்ப்பை அளித்தால் அது வருங்காலத்தில் சீரிய குடிமக்களாகும் இன்றைய தலைமுறையினருக்கு நாம் செய்யும் பெரும் தொண்டு ஆகாதா? இக்கருத்து, மாண்புமிகு முதல்வரின் இதயத்தில் வித்தாகி வளர்ந்து - இன்று மதிய இலவசசத்துணவுத் திட்டமாகமலர்ந்துள்ளது. ஏழை, எளிய, உழைக்கும் மக்கள்அமைத்ததே அண்ணாவின் அரசு, இம்மக்களின் குழந்தைச் செல்வங்கள் ஒருவேளை உணவு - உறுதியாகப் பெற்றிடும் நிலையை உருவாக்கித் தருவதே, இந்த அரிய திட்டத்தின் நோக்கம். இந்தியாவில் முதன் முதலாக ஏழை, எளியோர் மகிழ்ந்திடும் இத்தகைய திட்டத்தை அறிவித்துச் செயலாக்கிடுவது தமிழ்நாடு அரசே.

1982-83-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் ஏழைச் சிறு குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தின் குறிப்பு அறிவிக்கப்பட்டது.

''ஏழ்மைக் கோட்டுக்குக் கீழேயுள்ள பல குடும்பங்களில் குழந்தைக்குப் பிசைந்து ஊட்டுவதற்குச் சோறு இல்லாமல், கை பிசைந்து, கண்கலங்கி அன்னைகள் நிற்கும் அவல நிலையைப்போக்கச்சிறிதேனும்முயற்சி செய்வது அரசின் அவசர, அவசியக் கடமை என்பதை இந்த அரசு உணர்கிறது. இந்த அடிப்படையில் 2 முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதற்கு வகை செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 1982 சூலைத் திங்கள் முதற் கொண்டு தமிழ்நாடு முழுவதிலுமுள்ள, ஒரு வேளை உணவுக்கும் வழியின்றித் தவிக்கும் மிக ஏழ்மையிலுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.''

இவ்வாறு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இத் திட்டத்திற்கு ரூ. 100 கோடி செலவாகுமெனவும் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், வரலாறு காணாத வகையில் அறிவித்த ஏழைப்பிள்ளைகட்கு ஆண்டு முழுதுக்குமான மதிய உணவுத் திட்டம், தமிழகத்தில் இவ்வாண்டு ஜூலை 1 முதல் தொடங்குகிறது.

இத்திட்டம் இருபிரிவுகளாகச் செயல்படும். முதல் பிரிவு சமூகநலத்துறை கண்



காணித்து நடத்துவது. இவர்கள் 2 முதல் 5 வயது வரை உள்ள சுமார் 25 இலட்சம் பிள்ளைகட்குக் கிராமங்களில் அதற்காக அமைக்கப்படும் சமையற் கூடங்களிலும் ஏற்கெனவே இருக்கும் குழந்தைகள் காப்பகங்களிலும் சத்துணவு அளிப்பார்கள்.

இத்திட்டத்தின் பெரிய பிரிவு 36,000 பள்ளிகளில் சுமார் 40 இலட்சம் பிள்ளைகட்கு உணவு அளிப்பது. இத்திட்டம் பள்ளிக் கல்வித்துறையின் கண்காணிப்பில் தமிழக ஆசிரியப் பெருமக்களின் மேற்பார்வையில் நடைபெறும்.

இவை தவிர உணவு அருந்தும் 40 இலட்சம் குழந்தைகட்கும் இலவசமாக உணவுத் தட்டு, குவளை போன்றவை பள்ளிகளிலேயே வழங்கப் பெறும். சமையல் செய்யப் பாத்திரம் அரசின் செலவிலேயே பள்ளிகளுக்கு அளிக்கப்படும்.

அரிசி, பருப்பு, எண்ணெய் இவை தமிழக நுகர்பொருள் வழங்குதுறை, கூட்டுறவுத் துறை இவைகளால் பள்ளிகளிலேயே அளிக்கப்படும்.

மற்றும் சமையலுக்கு வேண்டிய விறகு, காய்கறி, மசாலா போன்றவற்றைப் பள்ளித் தலைமையாசிரியர் வாங்க, மாவட்டக் கல்வி அதிகாரி முன் மானியம் அளிப்பார். பள்ளியின் தலைமையாசிரியரே எல்லாச் செலவினங்களும் செய்து பொறுப்பாகக் கணக்கு வைத்துக் கொள்வார்.

பள்ளியில் மாணவர் சாப்பாட்டை மேற்பார்க்கும் ஆசிரியப் பெரு மக்களும் மாணவருடன் சேர்ந்து உணவருந்தி மகிழுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

**45 காசு, ஒரு பிள்ளைக்கு, ஒரு நாளைக்கு :**

இந்தப் பள்ளி உணவுக்கு ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 45 காசு செலவாகும். சத்து நிரம்பிய உணவாக இது இருக்கும். ஆண்டு முழுவதும் இது வழங்கப்படும். விடுமுறை நாட்களிலும், பள்ளி இல்லா நாட்களிலும் கூட உணவு உண்டு.

**கிராம உணவு ஆலோசனைக் குழு :**

இப்பள்ளி உணவைஎல்லா இடங்களிலும் சீருடன் நடத்த, பள்ளியின் தலைமையாசிரியரைச் செயலாளராகக் கொண்டு பள்ளி உணவு ஆலோசனைக்குழு ஊர்ப் பிரமுகர்கள் 10 பேரைக் கொண்டு இயங்கும்.

**பழைய திட்டம் :**

பழைய மதிய உணவுத் திட்டத்தில் 10 காசு அரசு மானியமும் 5 காசு ஒன்றிய மானியமுமாக 15 காசு ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு என்று இருந்தது. பல ஒன்றியங்கள் இந்த 5 காசைத் தர முடியவில்லை. எனவே 10 காசில்தான் பழைய உணவுத் திட்டம் 'கேர்' உதவியுடன் நடந்து வந்தது.

**புதிய திட்டம்-சீர்மிகு திட்டம் :**

இன்று வந்துள்ள புதிய உணவுத் திட்டமோ 45 காசு ஒரு மாணவனுக்கு என்று



**ஊட்டை சொல்லும் செய்தி**

எல்லாம் முழுதுமாக அரசு மானியமாக அளிப்பதால் பழைய திட்டத்தை விட இது ஐந்து மடங்கு சிறந்து விளங்குகிறது என ஆசிரியர்கள் மகிழ்ச்சியுறுகின்றனர். தவிர பொதுமக்கள் நன்கொடை, ஊராட்சி நன்கொடை என இனி எவரையும் போய் ஆசிரியர்கள் தேடி அலைய வேண்டியதில்லை. அரசின்கொடையே பெரும் கொடையாகி உள்ளது. இது ஆசிரியப் பெருமக்கட்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

ஒவ்வொரு பள்ளியிலும் இனி எந்த ஆசிரியரும் சமையல் செய்ய வேண்டியதில்லை. சமையலுக்கென்று அரசின் சம்பளத்துடன் கூடியவரை பெண்களும் அவர்களுக்கு உதவியாட்களும் ஒவ்வொரு பள்ளியிலும் இனி உண்டு.

## 10 முதல் 14 வயதிலான ஏழைக் குழந்தைகளுக்கும் ஆண்டு முழுவதும் இலவச உணவு

**5 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே ஓர் ஆண்டிலுள்ள 365 நாட்களிலும் நாள்தோறும் இலவச மதிய உணவு வழங்கும் வகையில் ஏற்கெனவே தமிழ்நாடு அரசு, ஆணைகள் பிறப்பித்துள்ளது. நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் உணவானது மற்ற செலவுகளைத் தவிர்த்து 45 காசாகும். 10 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றில் 200 நாட்களுக்கு உணவளிக்கும், ஏற்கெனவே நடைமுறையிலிருந்துவரும் திட்டத்தைத் தொடர்வதற்கும் அந்த ஆணையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.**

**தற்பொழுது நடைமுறையிலிருந்துவரும் 10 முதல் 14 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கான திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கும் 5லிருந்து 9 வரையிலான பிரிவிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவே வழங்கப்படும். இதன்படி உயர்தர ஆரம்பப் பள்ளியில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் 10 முதல் 14 வயது வரையிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு 10 காசு செலவில் ஆண்டொன்றில் 200 நாட்களுக்கு வழங்கப்படும் தற்போதைய இலவச உணவு வழங்கும் முறையானது 1-7-'82 முதல் 5 வயதிலிருந்து 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு வழங்கப்படுவது போல இவர்களுக்கும் 45 காசு செலவில் ஆண்டு ஒன்றின் 365 நாட்களுக்கும் இலவசச் சத்துணவு வழங்கப்படும்.**

## வகைவகையான இலவச உணவு

தமிழகத்தில் உள்ள ஏழை எளிய குழந்தைகளுக்கு வழங்கப்படும் இலவச உணவு தினமும் ஒவ்வொரு வகையான சத்துணவு தயாரித்து அளிக்கப்படும். இதைப் பற்றி அரசு அறிவித்துள்ள உணவு வகைகள் விவரங்கள்:

1) பருப்பு சாதம், காய், முளைக்கீரைப் பொரியல், பப்பாளிப்பழம்.
2) பொங்கல், காய், முளைக் கீரை, தக்காளிப்பழம்.
3) பருப்பு சாதம் - கத்தரிக் காய், கீரைப் பொரியல், தக்காளிப்பழம்.
4) எலுமிச்சை சாதம், கீரைப் பொரியல், பப்பாளிப்பழம்
5) பருப்பு சாதம், கீரைப் பொரியல், தக்காளிப்பழம்.
6) கலவை சாதம், முள்ளங்கி கீரைப் பொரியல், கொய்யாப்பழம்.
7) கோதுமை உப்புமா, காய், தண்டுக்கீரைப் பொரியல், தக்காளிப்பழம் ஆகிய உணவு வகைகள்,

இந்த இலவச மதிய சத்து உணவுத் திட்டத்தைக் கண்காணிக்கவும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வழிகாட்டிடவும் ஓர் உயர்மட்டக் குழு மாண்புமிகு முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் வருமாறு:

1. மாண்புமிகு நிதியமைச்சர்.
2. மாண்புமிகு கல்வியமைச்சர்.
3. மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர்
4. திரு. ஜி. சுவாமிநாதன் எம்.எல்.சி.
5. திருமதி தாரா செரியன் எம்.எல்.சி.
6. திருமதி டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ்
7. டாக்டர் மு. அறம் (துணைவேந்தர் கிராம பல்கலைக்கழகம்) காந்தி கிராமம்.
8. திரு சிவந்தி ஆதித்தன்.
9. தலைமைச் செயலாளர்.
10. நிதித்துறைச் செயலாளர்.
11. கல்வித்துறைச் செயலாளர்.
12. சமூகநலத்துறைச் செயலாளர்
13. ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறைச் செயலாளர்
14. உணவு - கூட்டுறவுத்துறைச் செயலாளர்
15. திட்டம்-வளர்ச்சித் துறைச் செயலாளர்
16. மதிய உணவுத் திட்டச்சிறப்பு அலுவலர்
17. சமுகநலத்துறை இயக்குநர்.
18. பள்ளிக் கல்வி இயக்குநர்.

இது தவிர 'அலுவலர்கள் குழு' ஒன்று தலைமைச் செயலாளர், தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் நிதித்துறைச் செயலாளர், கல்விச் செயலாளர், சமூகநலத் துறைச் செயலாளர், ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறைச் செயலாளர். உணவு கூட்டுறவுத் துறைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறைச் செயலாளர், மதிய உணவுத் திட்டச் சிறப்பு அலுவலர், பள்ளிக் கல்வி இயக்குநர், சமுசநலத்துறை இயக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளார்கள்.

ஐந்து வயதிற்கு மேற்பட்டு 14 வயதுக்கு உட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களிலும் இரண்டு வயதிற்கு மேற்பட்டு ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு குழந்தைகள் நல மையத்தின் மூலமும் இலவசச் சத்துணவு வழங்கப்படும்.

விடுமுறை நாட்களிலும் பள்ளிக் கூடங்களில் இலவசச் சத்துணவு வழங்கப்படும்.

இலவசச் சத்துணவுத்திட்டம் எதிர்கால இளைஞர்கள் வாழ்வில் ஒளியேற்றிடும் ஒப்பற்ற திட்டமாகும்.

'எல்லா மாநிலத்தவரும் ஏற்றிப் போற்றிடும் வகையில் உருவாகியுள்ள இந்தத் திட்டம்,

இல்லாமையால் அல்லலுறும் ஏழை, எளிய குழந்தைகளின் வாழ்வை மாற்றி அமைக்கும் புரட்சித் திட்டம் மட்டுமல்ல,

சமுதாய வளர்ச்சியில் ஒரு பெரும் மாற்றத்தை உருவாக்க விருக்கும் புனிதத் திட்டமுமாகும்.

ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கும் இந்தத்திட்டம் பள்ளிகளிலும் சமூக நலத்துறையின் குழந்தைகள் நல மையங்களிலும் தனித்தனியே நடைபெற்றாலும், மாவட்ட அளவில் இத்திட்டத்திற்கான முழுப் பொறுப்பினையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஏற்பர்.

இந்த இலவசச் சத்துணவுத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களேநேரடிப் பொறுப்பேற்றுள்ளார் என்பதிலிருந்து இத் திட்டத்தின் முக்கியத்துவமும் பெருமையும் விளங்கும்.

ஏழை குழந்தைகளுக்குச் சத்துள்ள மதிய உணவு வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தினை நிறைவேற்ற பொதுமக்கள் பலரிடமிருந்து நன்கொடை அரசுக்கு வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு பொதுமக்கள் அனுப்பும் நன்கொடைத்தொகைகிராமப்புறத் திட்டங்களுக்கென்று குறிப்பிடப்படுமானால் வருமானவரிச் சட்டம் 35 சிசி/35 சிசிஏ. ஆகிய பிரிவுகளின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு. ஊரகவளர்ச்சித் துறை இயக்குநர் / கிராமப் புற வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஊரக மறுவடிவமைப்புச் சங்கத்தின் தலைமைச்செயல்அலுவலர் ஆவார். எனவே, இது போன்ற நன்கொடைகள் ஊரக வளர்ச்சித் துணை இயக்குநருக்கு நன்கொடை பொதுவான திட்டத்திற்கு அல்லது குறிப்பிட்ட கிராமத்திற்கு அல்லது பகுதிக்கு என்று குறிப்பிட்டு அனுப்பலாம்.

கிராமப்புறப் பகுதி அல்லாத பகுதிகளில் (சென்னை மாநகராட்சிப்பகுதியிலிருந்து 15 கி.மீ. வெளியே உள்ள பகுதி, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை நகரம் இவற்றிற்கு 10 கி.மீ. வெளியேயும் மற்ற நகராட்சிப் பகுதிகளுக்கு 8 கி. மீ. வெளியே பகுதியில் உள்ளவையும் இந்தச் சட்டத்தின்படி கிராமப்புறங்களாகும்.)

நிதி வழங்க விரும்புவோருக்காக "முதலமைச்சரின் சத்துள்ளமதிய உணவுத் திட்ட நிதி" என்ற பெயரில் நிதி அமைப்பு ஒன்றினைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இந்த நிதிக்கு நன்கொடை அனுப்புவோர் இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அலுவலருக்கு அனுப்பலாம்.



# காவல் துறையின் சீரிய பணிகள்

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மாநிலக் காவல் படைகளில் தமிழகக் காவல் படைக்கு ஒரு தனிச்சிறப்பும் மதிப்பும் உண்டு. மக்கள் தொகை, காவல் துறையினரின் விகிதாசாரம் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவு. ஓராயிரம் மக்களுக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் உள்ளது. காவலர்களின் எண்ணிக்கை உயர்த்திய போதிலும் மக்கள் தொகைப் பெருக்கின் காரணத்தினால் விகிதாசாரம் தேக்க நிலையிலேயே இருக்கும் வண்ணம் உள்ளது. எனினும் காவல்துறையினரின் செயல் திறனினால் குற்றம், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் கட்டுக்குள்ளடக்கி வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

செயல்திறன் தழைத்தோங்கியிருக்க தரமுள்ள பயிற்சி, கண்காணிப்பு அவசியம். காவல்துறையில் பணிபுரிவோரின் நல்வாழ்க்கையில் தக்க கண்ணோட்டமிருந்தால்தான் பணித்திறன் சிறப்பாக அமைந்திருக்கும். இத்துறையிலுள்ளவர்களுக்கு, நேரம் காலம் கிடையாது. இருபத்து நான்கு மணிநேரமும் கண்காணிப்புடன் செயல்பட வேண்டும். பணியில் ஈடுபடும்போது உடலுக்கும், உயிருக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்புகள் ஏராளம். பலர் உயிரிழந்திருக்கின்றனர், பலர் ஊனமுற்றுள்ளனர்.

எந்த ஒரு நடவடிக்கை எடுத்தாலும் பல கண்ணோட்டங்களில் விமரிசனத்திற்குட்பட்டு ஏச்சுக்கும், கண்டனத்திற்கும் இலக்கு ஆவதற்கு வாய்ப்புகள் கணக்கற்றவை. பணியை சர்க்கஸில் கம்பி மேல் நடக்கும் வித்தைக்கு ஒப்பிடுவதுண்டு. பல நெருக்கடிகளுக்குட்பட்ட இப்பணி பொது மக்களுக்கு அதிகபட்சம் திருப்தியளிக்கும் வகையில் அமைந்திருக்கவேண்டும். மக்கள் ஆதரவு இருந்தால்தான், காவல்படையினரின் பணி சிறப்புடன் விளங்கும். பயனுள்ளதாகவும் இருக்கும்.

பல கொள்ளை, களவுகள் திறம்படக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் நாட்டின் எந்த மூலை முடுக்கிலிருந்து வந்தாலும் தப்பித்ததில்லை. பீஹாரிலிருந்து வந்து காட்பாடி அருகே முகமூடியணிந்து பஸ்ஸை வழிமறித்து அடித்த கொள்ளைக் கோஷ்டி, சென்னை நகரில் கன்னக் களவுகள் செய்த வட மாநிலக் கொள்ளைக் கும்பல், இவற்றைக்கண்டு பிடித்தவைகள் எல்லாம் திறமைக்கு எடுத்துக் காட்டுகள். நூற்றுக்கு நூறு சதவிகிதம் கண்டுபிடிப்பு என்பது ஒரு இயலாத காரியம். அவ்வாறு மார் தட்டிக் கொண்டால், அது உண்மை நிலையைக் குறிக்காது. ஒரு கணிசமான சதவிகித அளவில்தான் இருக்க முடியும். அந்த வகையில் பார்க்கும் போது, தமிழகக் காவல் துறையினரின் சாதனை பெருமைப்படும் அளவில் உள்ளது என்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு உண்மை நிலை. அந்த நிலையை ஏற்றுக் கொள்வதற்கு ஒரு பாரபட்சமின்மைத் தன்மை தேவை.

காவல் படையினரின் பணி எப்படிப்பட்டது, செயல்திறனை வளர்க்க சூழ்நிலை, பணிச் சலுகைகள், காவலர்களின் நல்வாழ்வு, மக்களின் ஆதரவு போன்ற அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தமிழக அரசு அண்மைக் காலத்தில் செயல்படுத்திய பின்வரும் பட்டியலை நல்நோக்குடன் பார்த்தால் விளங்கும் :

இடர்ப்படி: (Risk Allowance) காவலர் நிலை 2-லிருந்து ஆய்வாளர்கள் வரை மாதம் ஒன்றுக்கு இடர்ப்படி ரூபாய் 20 வீதமும், துணைக் கண்காணிப்பாளருக்கு மாதம் ரூ. 30 வீதமும் அளிக்கப்பட்டது.

துணிப்படி: குற்றப் புலனாய்வுத் துறை, மாவட்ட தனிப் பிரிவு மற்றும் இரயில்வேயைச் சேர்ந்த காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் துணிப் படி ரூ. 1.87-லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டது.

மலிவு விலையில் இன்றியமையாப பொருள்கள் வழங்குதல்: காவலா 2-ஆம நிலை முதல் ஆய்வாளர்கள் வரை மாதந் தோறும் மலிவு விலையில் அதிகபட்சம் 4பேருக்கு மட்டும் இன்றியமையா பொருட்களை 1-10-80 முதல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

வீட்டு வாடகைப்படி: வாடகையின்றிக் குடியிருப்புகள் வழங்கப்படாத காவல்துறைப் பணியாளர்களுக்கு, சென்னை மாநகரம் உட்பட எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும் வாடகைப்படி ரூ. 50 ஆகவும், மாவட்டத் தலைமையிடம் இல்லாத ஏனைய இடத்தில் உள்ளவர்களுக்கு ரூ. 30 ஆகவும் கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளது.

சீருடை மானியம்: ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், இளநிலை உதவி ஆய்வாளர்கள் சீருடை மானியம் ரூ. 15 முதல் ரூ. 25 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரை மாவட்ட சேமப் படைக்கு மாற்றம் செய்தல்: தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் 10 ஆண்டுகள் பணிபுரிந்து மாவட்ட சேமப்படைக்கு மாறுதல் ஆவதற்கு விருப்பம் தெரிவிப்போருக்கு மாற்றுதல் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்புப் பிரிவினருக்குசிறப்பு ஊதியம்: குற்றப் புலனாய்வுத் துறை சிறப்புப் பிரிவைச் சார்ந்த அலுவலர்களுக்கு 1-5-81 முதல் ரூ.10 முதல் ரூ. 25 வரை சிறப்பு ஊதியம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

சீருடை பராமரிப்புப் படி: காவல்துறையிலுள்ள எல்லாக் காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும், இளநிலை உதவியாளர்களுக்கும் சீருடைப் பராமரிப்புப் படி ரூ.10-லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டது. இந்தியக்காவல் பணியைச்சேராத காவல்துறை கண்காணிப்பாளருக்கும், கூடுதல் கண்காணிப்பாளருக்கும், துணைக் கண்காணிப்பாளருக்கும் மாதம் ரூ. 30 வீதமும் மற்றும், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்களுக்கு ரூ.20 வீதமும் சீருடை பராமரிப்புப் படியை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

சமையற்காரரின் பணியினை ஒழுங்கு படுத்துதல்: சிறப்புக்காவல் படையைச்சார்ந்த சமையற்காரர்களுடைய பணியை 26-9-81 முதல் வரைமுறை செய்து அவர்களுக்கும் அடிப் படை அரசு ஊழியர்களுக்குரிய எல்லாச் சலுகைகளும் வழங்கப் பட்டுள்ளன.

அறிவுரைப் படி: வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள காவல் பயிற்சிப்பள்ளிகள் மற்றும் சென்னையிலுள்ள காவல் பயிற்சி கல்லூரியில் பணி புரியும் அறிவுரையாளருக்கு அறிவுரைப் படி ரூ. 25 முதல் ரூ. 150 வரை புதிதாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

காவல் துறையை நவீனப் படுத்தும் திட்டங்கள்: செய்தித் தொடர்பு இதுவரை பெறாத தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கும், மற்றும் காவல் நிலையங்களுக்கும், மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு வசதிகளுக்கு வகை செய்ய 350 மீவுயர் மின்னலை செய்தித் தொடர்புக் கருவிகளுக்கும் மற்றும் 1800 இருவழி செய்தித் தொடர்புக் கருவிகளும் மற்றும் துணைப் பொருள்களும் வாங்க ரூ. 1,98,45,000 நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது. இவை சிறிது சிறிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

மாவட்டத் தலைமை இடங்களிலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 15 சிறப்புப் பிரிவுகளும் ரூ. 120 இலட்சம் செலவில் மிகை உயர் மின்னலை செய்தித் தொடர்புக்கு வகை செய்ய அனுமதித்துள்ளது.



வீரமரணம் எய்திய காவல்துறை அதிகாரியின் துணைவியாரிடம் விருது வழங்குகிறார் மாண்புமிகு முதல்வர்

வேலூரில் ஒரு குற்றத்தடய அறிவியல் ஆய்வுக்கூடம் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட காவல் நிலையங்கள் மற்றும் புதிய அமைப்புக்கள்: 1980-81-ல் 17 புதிய காவல் நிலையங்களும், 8 புறக்காவல் நிலையங்களும் திறக்கப்பட்டன. 3 புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்கும் ரோந்து பணியில் 350 முன்னாள் இராணுவ வீரர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

1981-82-ல் 29 புதுக் காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இரண்டு புதிய புறக்காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இரண்டு புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

காவல்துறை அமைச்சுப்பணியாளர்கள் வேலைப் பளுவைக் குறைக்க 1981-82-ல் 90 புதிய பதவிகள் தோற்றுவிக்கப்பட்டன.

இரண்டு புதிய தமிழ்நாடு சிறப்புக் காவல்படை அணிகள் தோற்றுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இந்தியாவிலேயே மிகக் கூடுதலான எண்ணிக்கையுடன் இயங்கும் பெண் போலீஸ் பிரிவு தமிழகத்தில்தான் உள்ளது. அரசு 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 60 பெண் உதவி காவல் ஆய்வாளர்கள், 60 பெண் தலைமைக் காவலர்கள், 600 பெண் காவலர்கள் நியமித்தது மிகக்குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பெண் போலீஸ் பிரிவினரில் இரண்டு யூனிட்டுகள் சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்திலும், பொது மக்கள் தொடர்ப்புப்பணிக்காக நியமிக்கப்பட்டிருப்பது, பெண் பயணிகளுக்குப் பேருதவியாக இருக்கிறது.

1982-83 நிதி ஆண்டில் காவல் துறையில் இருந்த 245 துணை ஆய்வாளர் பதவிகளை ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தியும், 825 இளம் உதவி ஆய்வாளர்கள் பதவிகளை உதவி ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தியும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னையில் உள்ளது போலவே, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களிலும் குதிரைப்படை அமைக்க அரசு அனுமதித்துள்ளது.



1982-83 நிதி ஆண்டில் தமிழகத்தில் கூடுதலாக 30 காவல் நிலையங்கள் திறக்கப்பட இருக்கின்றன.

நெடுங்காலமாக இத்துறையில் காவலர்களை அதிகாரிகளின் இல்லங்களில் ஏவலர்களாக பணியமர்த்தி வந்த முறை 15-8-'80 முதல் ஒழிக்கப்பட்டு விட்டது. அவர்களுக்குப் பதிலாக அடிப்படை ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் காவல்துறையினருக்கு உதவுகின்ற பொதுமக்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வரை பரிசு அளிக்க வகை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளில் வழிப்பறிக் கொள்ளை ஆகியவற்றைத் தடுப்பதற்கு நெடுஞ்சாலை ரோந்து குழு சென்னை-வேலூர், சென்னை நெல்லூர், சென்னை-விழுப்புரம் ஆகிய வழித்தடங்களில் பணியாற்ற கூடுதல் பணியாளர்கள், தேவையான வாகனங்கள் ஆகியவற்றிற்கு அரசு அனுமதித்துள்ளது,

மாவட்டங்களில் மதுவிலக்குப் பிரிவுப் படைகளின் களப்பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆய்வாளர் -1, துணை ஆய்வாளர்-1, உதவி ஆய்வாளர் -4, இளநிலை உதவி ஆய்வாளர்-4, தலைமைக் காவலர்கள் -4, முதல்நிலைக் காவலர்கள் -2. காவலர்கள்-24- அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 1 ஜீப்பும், 1 பிக்-அப் வேனும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

காவல்நிலையங்களில் பணிபுரியப்பெண் உதவி ஆய்வாளர்களுக்கு 50 மொபட் மோட்டார் சைக்கிள்களும், 200 மோட்டார் சைக்கிள்களும் காவல் நிலையங்களுக்கும் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

காவலர் குடியிருப்புத் திட்டம்: காவலர் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 1980-82-ஆம் ஆண்டில் 72 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் காவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 363.29 இலட்சங்களாகும்.

1981-82-ஆம் ஆண்டில் மொத்தம் 292 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் காவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 211.34 இலட்சங்களாகும். இந்த ஆண்டில் மேலும் 620 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கும், கட்டுமானப்பணிகளுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை ரூ. 204 இலட்சங்களுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது.

மார்ச் 31, 1982 வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் மொத்தம் 22036. கட்டி முடிக்கப்பட்ட 22036 குடியிருப்புகளை காவல்துறை அதிகாரிகளின் எண்ணிக்கையான 52507-உடன் ஒப்பு நோக்குகையில் எட்டியிருக்கும் சாதனைக் குறியீடு 41.97 சதவிகிதங்களாகும். திறமை வாய்ந்த காவல் துறையினரை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு ஆண்டுக்கு இருமுறை குடியரசு தினத்தின்போதும், சுதந்திர தினத்தின்போதும் பதக்கங்கள் வழங்குகிறது. மேலும் தமிழக அரசும் முதலமைச்சர் பதக்கம் என ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று பதக்கங்கள் வழங்குகிறது. இவை அதிகாரிகளுக்கும் காவலருக்கும் பொதுவானதால், ஒரு ஆண்டில் பத்துக் காவலருக்கு மேல் பதக்கம் பெற வாய்ப்பில்லாமலிருந்தது. இந்த ஆண்டு முதல் பொங்கல் பரிசாக தமிழக அரசு ''முதலமைச்சர் காவலர் பதக்கம்' என ஒரு புதிய பதக்கம் ஒன்று துவக்கப்பட்டு ஆண்டுதோறும பத்து ஆண்டுகளுக்கு மேல் குற்றம் குறையின்றிப் பணியாற்றியுள்ள 1500 காவலர்களுக்கும் தலைமைக் காவலர்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கம் பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்குக் கூடுதல் ஊதியமாக ரூ. 20-லிருந்து ரூ. 25-கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இதுவன்றி, ஓய்வு பெறுமுன் அகால மரணமடைந்த காவல் துறையினரின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் அவர்கள் குழந்தைகளில் ஒருவருக்கு, விதிகளைத் தளர்த்தி, உடனடியாக வேலை வாய்ப்புக் கிடைக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



# உணவுத் துறையில் ஒப்பற்ற பணிகள்

**பொ**துவிநியோக முறைக்குத் தேவையான கொள்முதல் இருப்பு வைத்துக் கொள்வதற்காக வர்த்தகர் அல்லது உற்பத்தியாளர் மீது லெவிமுறை 1981, சனவரிக்கு முன்னர் இருந்ததில்லை. 1980 ஆம் ஆண்டு இறுதியிலும், 1981 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலும் தமிழ்நாட்டில் கடும் வறட்சி நிலை வாட்டியது. எனவே, உணவுநிலை எவ்வாறுள்ளதென்பதை அரசு ஆய்ந்தது. அரசிடம் உள்ள அரிசியின் மூடை இருப்பையும் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அதிகரித்த அரிசித் தேவையையும், அரிசி வெளிச்சந்தையில் அதிக விலைக்கு விற்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, மொத்த வியாபாரிகள் வாங்கும் நெல், அரிசி மீது 40 சதவீதம் லெவியை விதிக்க அரசு முடிவு செய்தது. 1981 சனவரி 20ஆம் தேதி முதல் லெவி விதிக்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. எனினும், உற்பத்தியாளர்கள் மீதோ, சில்லறை வர்த்தகர்கள் மீதோ இனி லெவி எதையும் அரசு விதித்திடவில்லை.

பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு அரிசி அல்லது நெல் கொண்டுவரப்படுவதை ஊக்குவிப்பதற்காக, அத்தகைய இருப்பிற்கும் லெவி விதிக்கப்படாது விலக்களிக்கப்பட்டது. 1981,, சம்பா அறுவடைப் பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1,20,108 டன் நெல்லும், 44,538 டன் அரிசியும் கொள்முதல் செய்தது. 1981ல் தமிழகத்திற்கு ஏற்பட்ட நிலையைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் இத்தகைய இடர்ப்பாடுகள் நேராவண்ணம் தவிர்க்கவும், மாநிலங்களில் கொள்முதல் செய்வதை அதிகப்படுத்த வேண்டுமென்றும், பொதுமக்கள் தேவைகளுக்கு மத்திய அரசையே நம்பி இருக்கும் நிலையைத் தவிர்க்க வேண்டுமென்றும், மாநிலங்களில் அரிசி மூடையிருப்பு அதிகமான அளவிற்குச் சேமிக்கப்படவேண்டுமென்றும் இந்திய அரசு மாநில அரசுகளை வலியுறுத்தி வந்தாலும், 1981 குறுவை அறுவடைப் பருவத்திற்கு லெவியை 40 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்தது. இம்முறை 1982 சம்பா பருவத்திற்கும் கடைப்பிடிக்கப்பட்டது. பல பருவங்களில் 1981-82-ஆம் ஆண்டுகளில் கொள்முதல் செய்த அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

மெட்ரிக் டன்களில்

| | நெல் | அரிசி |
|---|---|---|
| 1. சம்பா (81) | 1,20,108 | 44538 |
| 2. குறுவை(81) | 2,23,977 | 8365 |
| 3. சம்பா 1982 முதல் 27.5.82 வரை | 3,11,037 | 104189 |

குறுவை நெல் அறுவடை, பொதுவாக வடகிழக்குப் பருவ மழையின்போது நடைபெறுவதால், நெல் அதிக அளவில் ஈரப்பதமுள்ளதாக இருக்கும். ஈரப்பதமுள்ள நெல்லை வாங்குவதில் வர்த்தகர்கள் பொதுவாகவே தயக்கம் காட்டுகின்றனர். மேலும் அவர்கள் விலையைக் குறைப்பார்கள். உற்பத்தியாளர்கள் நெல்லைக் குறைந்த விலையில் விற்பதைத் தடுக்கும் பொருட்டு இந்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைக்குக் கிராமங்களிலேயே விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்குவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் நேரடியாகக் கொள்முதல் செய்யும் நிலையங்களை நூற்றுக் கணக்கில் திறந்தன.

இந்த நிலையங்களில் அரசின் கொள்முதல் விலைக்கு நெல்லை விற்க முன்வரும் உழவர்களுக்கு வசதி செய்ய, சம்பாப் பருவத்திலும் இவை செயல்பட்டன. நெல் கொள்முதலில் அரசு தலையீட்டினால், தனிப்பட்ட மொத்த வியாபாரிகளிடம் உற்பத்தியாளர்கள் மிகக் குறைந்த விலைக்கு நெல்லை விற்கும் நிலை தடுக்கப்பட்டுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. மேலும், இந்திய அரசின் நிர்ணயக்குறிப்பின்படி, 18 சதவீதத்திற்கு மேற்பட்டு ஈரப்பதம் உள்ள நெல்லைக் கொள்முதல் செய்யக்கூடாது. எனினும் தமிழ்நாட்டிலுள்ள நிலைமையைக் கருதி, மத்திய அரசிடம் அணுகி 22 சதவீதம் வரையில் ஈரப்பத

முள்ள குறுவை நெல்லைக் கொள் முதல் செய்யவும் மத்திய அரசின் இசைவைப் பெற்றுள்ளது. 25 சதவீதம் வரையில் ஈரப்பதமுள்ள குறுவை நெல்லை வாங்குவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த முறையில், மாநில அரசு நடவடிக்கை எடுக்காமல் போயிருந்தால் குடியானவர்கள் ஈரப்பதமான நெல்லை விற்க முடியாத வகையில் பேரிழப்பை அடைந்திருப்பார்கள்.

தமிழ்நாட்டில் இரண்டொரு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களும் 1980-81ல் இரண்டாவது அரையாண்டுக் காலங்களில், கடுமையான வறட்சி நிலையைச் சந்தித்தன. பொது விநியோக முறையில் குடும்பக் கார்டுகளுக்கு மாதத்திற்கு 10,000 முதல் 12,000 டன்கள் வரை வழங்கும் அரிசியின் அளவு 1981 ஆகஸ்ட் மாதத்தில் 78,000 டன்கள் வரை உயர்ந்தது. இவ்வாறு குடும்பக் கார்டு பெற்றுள்ளவர்களுக்கான அரிசியின் தேவை உயர்ந்து கொண்டே போகும் நிலையில், மாநில அரசு அரிசி விநியோகிக்கும் அளவை மிகுதியாக்கப் பல்வேறு முறைகளை மேற்கொண்டது. அது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்தும், டெண்டர் முறையில் தனி விற்பனையாளர்களிடமிருந்தும் அரிசியை வாங்கியது. மத்தியக் கிடங்கிலிருந்து அரிசியின் அளவை மாதத்திற்கு 1 இலட்சம் டன் வீதம் உயர்த்தும் அளவிற்கு இந்திய அரசும் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால், இந்திய அரசு மாதத்திற்கு 60,000 டன்கள் வீதம் வழங்கியது.

மத்திய அரசு வழங்கிய அரிசியின் பெரும் அளவு, ஆந்திர மாநிலத்திலிருந்து வந்ததால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இருப்புக்களைச் சாலை வழியாகவும், இருப்புப்பாதை வழியாகவும் கொண்டுவருவதற்காகவும், தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இப்படியாக மாநில அரசு பிற மாநிலங்களிலிருந்து பொது விநியோகத்திற்காக அரசுக்குத் தேவையான அரிசியை வாங்குவதில் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது. பொது விநியோக முறை தடைபெறாமல் நடைபெறவும் வழிசெய்தது.

பொது விநியோக முறையின்கீழ் அரிசி வழங்குவது உறுதிப்படுத்தப்பட்டதையொட்டி, வெளி மார்க்கெட்டில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடிந்தது. கார்டு பெற்றுள்ளவர்களுக்கு 1981 ஜனவரி முதல் 1981 டிசம்பர் வரை மொத்த அளவாகிய 6.71 இலட்சம் டன் அரிசி வழங்கப்பட்டது. 1977 ஜூன் மாதம் ஆட்சி மேற்கொள்ளப்பட்டது முதல் நாட்டுப்புறங்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் வசதிகளை அதிகப்படுத்தும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடையைத் திறக்கும் திட்டத்தை அரசு அறிவித்தது. நியாயவிலைக் கடைத் திட்டத்தின் மூலமாக மாநிலத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் பயன்பெற்றன.



மாநிலத்தில் 17,536 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. அக்கடைகள் பங்கீட்டுப் பொருள்கள் மட்டுமில்லாமல், பிற அத்தியாவசியப் பொருள்களான சமையல் எண்ணெய், மிளகாய், புளி, தனியா ஆகியவற்றையும் கூட விற்பனை செய்கின்றன. 1981ஆம் ஆண்டில் கிராமப்புற நியாயவிலைக் கடைகளின் மொத்த வியாபாரம் 115 கோடி ரூபாய் ஆகும். கடைசியாக 1975ஆம் ஆண்டில் பொதுக் கணக்கெடுப்பு நடந்து குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டன. புதுக் குடும்பக் கார்டுகளை வழங்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தவண்ணம் இருந்தன. பழைய குடும்பக் கார்டுகள் மிகவும் பழசாகிவிட்டன. புதுக் கார்டுகள் தேவைப்பட்டன. போலிக் கார்டுகளின் நடமாட்டமும் தெரியவந்தது. ஆகவே, மாநிலம் முழுவதும் பொதுக் கணக்கெடுப்பு நடத்தி புதுக் குடும்பக் கார்டுகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்த வேலை நிறைவு செய்யப்பட்டு சென்னை, புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் புதுக் கார்டுகள் வழங்கப்பட்டன. மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்த வேலை முன்னேற்றம் அடைந்து வருகின்றது. மேலும் 1982 ஜூலை 31 முடிவுக்குள் எல்லா மாவட்டங்களிலும் புதுக் கார்டுகள் வழங்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# மீனவர் நலத் திட்டங்கள்

வேட்டையாடுதல், கால்நடைப் பராமரிப்பு, விவசாயம் ஆகிய தொழில்களைவிட மிகவும் தொன்மையான தொழில் மீன் பிடி தொழிலாகும். இத்தொழில் தற்சமயம் மிகுந்த முன்னேற்றம் அடைந்து வருகிறது. இத்தொழிலை மேற்கொண்டுள்ள பரதவர்கள் எனப்படும் மீனவர்கள் கடலைச் சார்ந்த இடங்களிலும் உள்நாட்டு நீர்நிலைகளை ஒட்டியும் வாழ்கின்றனர். கடலைச் சார்ந்த இடங்களில் வாழும் மீனவர்களின் எண்ணிக்கை 3,37,713 எனவும் இவர்களில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 80,035 எனவும் உள்நாட்டு மீனவர்களின் எண்ணிக்கை 1,20,000 எனவும், 1978-ல் கணிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் முயற்சிகளாலும், மீன்துறையின் பல திட்டங்களாலும் கடந்த 1981-82-ல் 4.10 லட்சம் டன்கள் மீன்பிடிக்கப்பட்டு தமிழ்நாடு இந்தியாவிலேயே மீன்பிடிப்பில் முதல் இடம் வகிக்கும் பெருமை பெற்றுள்ளது. புரதச்சத்து மிகுந்த மீன் உணவு மக்களுக்குக்கிடைக்க வழி செய்வதில் முக்கியமாக விளங்கும் மீனவர்களின் நலத்தைப் பேணுவதில் தமிழக அரசும், மீன் துறையும், மீன் வளர்ச்சிக் கழகமும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளன. இதற்காகப்பல நலத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களால் மீனவர்களின் பொருளாதார நிலை உயரவும், மீன் பிடிப்பு அதிகரிக்கவும், மீனவர்களுக்கு, சமுதாயத்தில் கிடைக்கும் மதிப்பு உயரவும்



நவீன மீன்பிடிப்பின் தொழில் நுணுக்கங்களை அறியவும், வேலைவாய்ப்புக்கள் பெருகவும் வாய்ப்புகள் உள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து மீனவர்களை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவிப்பது, மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உதவிகள் அளித்தல் நவீன மீன்பிடி சாதனங்களை வாங்குவதற்கு நிதி

உதவி (அரசாங்க வங்கிகள் ஏனைய உதவி நிறுவனங்கள்) பிடிபட்ட மீன்களைக் கெடாமல் பாதுகாக்க வசதிகள், மீன்களுக்கு சரியான விலையை நிர்ணயித்தல் மீனவர்களுக்கு வீட்டு வசதிகள், மீனவர் கிராமத்திற்குச் சாலை வசதிகள், புயல் காலங்களில் தங்குவதற்குப் புகலிடம் கட்டுதல், தொழில் செய்யும் போது இறக்கும் மீனவர்களுக்கு நிதி உதவி, இரவு நேரங்களில் கரை சேர உதவும் வழிகாட்டி விளக்குகளை அமைத்தல், மீனவர்களுக்கு நவீன மீன் பிடிப்பு முறைகள், இறால் வளர்ப்பு—உள்நாட்டு மீன் வளர்ப்பு முறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல் ஆகியவை முக்கியமான நலத்திட்டங்களாகும்.



## மீனவர் கூட்டுறவுத் திட்டம்

மீனவர்களை இடைத்தரகர்களிடமிருந்து விடுவிக்கவும், கடன் சுமைகளிலிருந்து காப்பாற்றவும் வங்கிகள் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் உதவிகள் கிடைப்பதற்கு வழி வகுக்கவும் மொத்தம் 515 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 476 முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் (289 கடலோரச் சங்கங்கள்; 187 உள்நாட்டுச் சங்கங்கள்) வேலை வாய்ப்புத் திட்டச் சங்கங்கள், 8 கூட்டுறவு மீன் விற்பனை ஒன்றியங்கள், 9 கூட்டுறவு சம்மேளனங்கள் அடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் மாநில அளவில் ஓர் மீனவர் கூட்டுறவு சம்மேளனம் உருவாகவில்லை. இச் சங்கங்களுக்குப் பதிவாளர் மீன் துறை இயக்குநர் ஆவார். இச் சங்கங்கள் 1961-ம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவு விதி 53-ன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. இச் சங்கங்களின் நிருவாகத்தை மீன் துறை உதவி இயக்குநர்களும், துணை இயக்குநர்களும் மேற்பார்வை செய்து சங்கங்களின் சீரிய நடைமுறைக்கு வழி வகுக்கின்றனர். இச்சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு நீண்ட காலக் கடன், மத்திய கால்க் கடன், குறுகிய காலக் கடன், முதலீட்டுக் கடன் ஆகியவை வழங்கப்படுகின்றன. கடந்த திட்ட காலங்களில் ரூ. 73.44 லட்சம் இதற்காக வழங்கப்பட்டுள்ளது. 1981-82-ல் செயல் பாட்டு முதலீட்டுக் கடனாக (Working Capital Loan) ரூ. 5 லட்சம் 76 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் 1982-83-ல் 38 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.5 இலட்சம் (Working Capital Loan) வழங்கப்படும். இதன் மூலம் நியாய விலையில் கடைகளைத் திறந்து மீன்பிடி சாதனங்களை வாங்கி மீனவர்களுக்குச் சகாய விலையில் விற்கப்படும்.

மீனவர் கூட்டுறவுச்சங்கங்களுக்குப் புத்துயிர் அளித்து ஊக்குவிப்பதற்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகங்களின் மூலம் நிதிஉதவி பெற்றுத்தரப்படுகிறது. இதுவரை 35 கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல லட்சம் மீன் பிடி சாதனங்கள் வாங்குவதற்கும் கிடங்கு கட்டுவதற்கும் மீன் விற்பனை செய்வதற்கும் வழங்கப்பட்டுள்ளது.

## தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உதவிகளின் முக்கிய அம்சம்

கடன் திருப்பித் தர வேண்டிய காலத்திற்கு நான்கு ஆண்டுகள் கழித்து செலுத்திய பங்கு முதலீட்டுத் தொகையைப் பத்துத் தவணைகளில் திரும்பப் பெறலாம். மேலும் படகுகள் மற்றும் வலைகள் வாங்குவதற்காக வழங்கப்படும் கடன்களில் 20 சதம் மானியமாக வழங்கப்படுகிறது. கிடங்கு கட்டுவதற்கும், மீன் விற்பனை நிலையங்கள் கட்டுவதற்கும், மீன்களைக் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் வாங்குவதற்கும் வழங்கப்படும் கடன்களில் 50 சதம் மானியமாக வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 1981-82-ல் ரூ. 68.67 லட்சம் மானியமாக தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டுச் சங்கங்களுக்கும், மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன் பண்ணைகள் அமைக்க வழங்கப்பட்டுள்ளது.

மீனவ மகளிரின் மேம்பாட்டிற்காக திருச்சினாங்குப்பம் (செங்கை மாவட்டம்), கரையூர் தெரு (தஞ்சை மாவட்டம்), தருவைக்குளம் (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 484 அங்கத்தினர்கள் உள்ளனர். இவற்றிற்குச் செயல் முதலீட்டுக் கடனாக (Working capital loan) ரூ.70,000 வழங்கப்பட்டுள்ளது.

## மீனவர் வீட்டு வசதித் திட்டம்

மீனவர்களுக்கு வசதிகள் மிகுந்த நவீன வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் இதற்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்படுகிறது. மொத்தம் 9,931 வீடுகள் கட்டுவதற்கு 1981-82 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மீனவர் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள்

மீனவர் கிராமங்கள் மீன் விற்பனையாகும் நகர்ப் புறங்களிலிருந்து தொலைவில் இருப்பதால் பிடிபட்ட மீன்களைத் துரிதமாக எடுத்துச் செல்ல நல்ல சாலைகள் தேவைப்படுகின்றன.

ஆகவே 52 இணைப்புச்சாலைகள் ஏற்படுத்த ரூ 130.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 24 சாலைகள் முடிக்கப்பட்டுள் ளன. 52 இணைப்புச் சாலை களின் மொத்த நீளம் 98.25 கிலோ மீட்டர்களாகும்.

**தண்ணீர் வசதி**

தமிழ்நாடு தண்ணீர் மற்றும் வடிகால் வாரியத்தின் உதவி யுடன் குடிதண்ணீர் வசதியற்ற கிராமங்கள் கணக்கெடுக்கப் பட்டு குடிதண்ணீர் வழங்க ஏற் பாடுகள் நடந்து வருகின்றன.

**மீனவர் துயர் துடைப்பு நிவாரண நிதி**

மீனவர்கள் தொழில் செய்யும் பொழுது கடலில் இறக்க நேரிட் டால் இறந்தவரின் குடும்பம் பிழைக்க வழிவகை செய்யும் வகையில் குடும்பத்திற்கு ரூபாய் 5,000 வழங்கப்படுகிறது. இத் தொகையில் ரூ. 2,000 உடனடி யாக ஒரே தவணையில் வழங்கப் படுகிறது. மீதி ரூ. 3,000, 30 மாதங்களில் மாதம் ரூ. 100 வீதம் வழங்கப்படுகிறது. 1981-82-ல் ரூ. 1,55,000 இதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 7,39,113.05 வழங்கப்பட் டுள்ளது. 138 குடும்பங்கள் இத னால் பலனடைந்துள்ளன.

**மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஆண்டுதோறும் மழை மற்றும் பலத்த காற்றுக் காலமாகிய மூன்று மாதங்களுக்கு முறையான வருவாய் கிடைப்பதில்லை. புயல் காலங்களில் மீன்பிடிப்புக்குச் செல்ல முடியாததாலோ கன்னியா குமரி போன்ற மாவட்டங்களில் பருவங்களில் மீன் பிடிப்பு இல் லாததாலோ இந்த நிலை ஏற் படுகிறது. 1982 ஜூன் முதல் செயல் படுத்தப்பட்டுள்ள இத் திட்டத்தின் கீழ், முறையாக வரு வாய் கிடைக்கும் 9 மாதங்களி லும் மாதந்தோறும் ரூ. 10 வீதம் செலுத்தும் மீனவர்களுக் குத் தலா ரூ. 90 வீதம் அரசாங் கம் ஒதுக்கீடு செய்யும். இவ் வாறு சேமிக்கப்படும் ரூ. 180-ம் (ரூ. 90 + ரூ.90) முறையான வருவாயில்லாத மூன்று மாதங் களுக்கும் ஒவ்வொரு மீனவருக் கும் மாதந்தோறும் ரூ. 60 வீதம் வழங்கப்படும். மீனவர்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாதந்தோறும் ரூ.10 வீதம் வசூலிக்கப்பட்டு இத் தொகை மீன்துறை உதவி இயக்கு நர் இயக்கும் தனி நிதியின் கீழ் இருப்பு செய்யப்படும். மாதந் தோறும் தரப்படும் ரூ. 60மீன் துறை அலுவலர்கள் மூலம் வழங் கப்படும். இந்த ஏற்பாடு மீனவர் களின் தேவைகளுக்குப் பொருத்த மானதோர் திட்டமென்பதுடன் மீனவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்தும்.



மீனவர் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டி விளக்கு

**மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டம்**

மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை நிறை வேற்றுவதன் மூலம் சிறிய அள வில் மீன்பிடி தொழில் புரியும் மீனவர்களுக்குக் கூடுதல் நிதி உதவி கிடைக்க வழி வகுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மீனவர்கள் கூட்டு றவுச் சங்கங்களுக்கு 50 சதவீதம் மானியமும், தனிப்பட்ட மீனவர் களுக்கு 33 1/3 சதவீதம் மானிய மும் இயந்திரப் படகுகள், கண் ணாடி இழைப்படகுகள், நாட்டுப் படகுகள் மற்றும் மீன்பிடி விற் பனை சாதனங்கள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட் டில் உள்ள கடற்கரைப்பகுதிகளில் உள்ள 25 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் அங்கத் தினர்களுக்கும் 55 நாட்டுப் படகுகள், 100 கட்டு மரங்கள், 47 கண்ணாடி இழைப் படகுகள் மற்றும் போதிய மீன் பிடிவலைகள் குளிர் பதனப் பெட்டிகள், மீன் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் இன்னும் பிற சாத னங்கள் வழங்க ஏதுவாக இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் மாநில அளவான இணைப்புக் குழு, அண்மையில் நடைபெற்ற கூட் டத்தில் ரூ. 80.54 இலட்சம் செலவில் இத்திட்டத்தை அமல் படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கி யுள்ளது. இத்திட்டச் செலவில் ரூ. 42.43 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, ஏழு மாவட்டங் களில் உள்ள 25 மீனவர் கூட்டு றவுச் சங்கங்களில் உள்ள உறுப் பினர்கள் பயனடைவர்.

இதைத் தவிர மாநில அளவான இணைப்புக் குழு, கீழ்க் கண்ட திட்டங்களுக்கும் நிதி உதவி அளிப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளன.

மீன் விற்பனைக்கான அடிப்படை வசதிகளைப் பெருக்கு வதற்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 21.65 இலட்சத் திட்டம். மீனவர்களுக்கு, இத்திட் டத்தினால், அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு, நியாயவிலை கிடைக்க வாய்ப்புள்ளது.

மதுரை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மீன் முட்டை உற்பத்திப் பண்ணைகள் அமைக்க ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு.

மீனவர் கிராமங்களை, நகரங்கள், மற்றும் சந்தை உள்ள இடங்களுடன் இணைக்கும் வகை யில் சாலைகள் போடப்பட்டு வரு கின்றன. 1979-80 ஆம் ஆண்டி லிருந்து ரூ. 1.30 கோடி மதிப் புற்ற 52 சாலைகள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக, 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 35 லட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும், தன் னிறைவுத் திட்டத்தின் கீழும், தேசிய கிராமிய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழும் மீனவர் கிராமங் களை இணைத்துச் சாலைகளை அமைக்க, மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இரவு நேரங்களில் மீனவர்கள் கடலில் மூழ்கியிருக்கும் பாறைகளினின் றும் விலகி நன்முறையில் கரையை அடைய, மீனவர் கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும்திட்டத்தை,



அரசு செயற்படுத்தி வருகிறது. 1980-81-ஆம் ஆண்டில் அத்தகைய ஒன்பது விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1981-82-ஆம் ஆண்டின் மேலும் 10 கிராமங்களில் அத்தகைய விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1982-83-ஆம் ஆண்டில் 11 கிராமங்களில் அத்தகைய விளக்குகள் அமைக்கப்படும்.

## படகுகளும் வலைகளும் வழங்குதல்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டுமரங்கள், நாட்டுப் படகுகள் - இவற்றின் மீன்பிடி திறனை அதிகரித்து மீனவர் வருமானத்தைப் பெருக்க வெளிப்புறம் (Out board) மற்றும் உள்புறம் (In board) பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இருபது வெளிப்புற மோட்டார்களும் 40 கண்ணாடி இழை கொண்டு வலுவூட்டப் பெற்ற பிளாஸ்டிக் படகுகளும் மீனவர்களுக்கும் 137 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இவை நிதி உதவியில் 20 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. இதே போல், 1982-83லும் ரூ. 8 லட்ச மதிப்புள்ள நைலான் வலைகள், கட்டுமரம், மற்றும் நாட்டுப்படகு மீனவர்களுக்கு 20 சதம் மானியத்தில் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

## மீனவர்களுக்குப் பயிற்சி நிலையங்கள்

சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில் மீனவர்களுக்கு நவீன மீன்பிடிப்பு முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலம் ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை பத்து மாதங்களாகும். ஒரு வருடத்தில் மண்டபம் பயிற்சி நிலையத்திலிருந்து 60 மீனவர்களுக்கும் மற்ற நிலையங்களில் 50 மீனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 75 பயிற்சிக்கால ஊதியமாக வழங்கப்படுகிறது. இதுவரை 41869 மீனவர்கள் பயிற்சிபெற்றுள்ளனர். கடலுக்குச் சென்று மீன்பிடித்து அனுபவம் உள்ள 18 லிருந்து 35 வயதுக்குள் உள்ள மீனவர்கள் இப்பயிற்சியில் சேரத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். தமிழ்நாடு மீனவர் பயிற்சி நிலையம் வழங்கும் இயந்திரப் படகுகளில் இந்தப் பயிற்சியில் தேறிய மீனவர் ஒருவரை வேலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதால் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டுகிறது.

இத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகள் பாதி விலையில் (50 சதம் மானியத்தில்) வழங்கப்படுகின்றன. மேலும் குளங்களையும், நாற்றங்கால்களையும் பராமரிக்கவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1980-81 வரை இத்திட்டத்திற்காக ரூ 3 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் அதாவது செங்கை, தஞ்சை, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்தம் 100 ஹெக்டேர் அளவிற்கு, சிறிய குளங்களை ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் தீவிர மீன் வளர்ப்புக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கான செலவில் 75 சதம் அரசைச் சார்ந்ததாகும். 25 சதம் ஊராட்சி ஒன்றியங்களால் செலவிடப்படும்.

பெரிய மற்றும் சிறிய பாசன நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் உரிமை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக்குத்தகை மூலம் ஐந்து வருடங்களுக்கு அளிக்கப்படுகிறது. குத்தகைத் தொகையை கடந்த மூன்று வருட சராசரியை விட 20 சதம் கூடுதலாக வைத்து நிர்ணயிக்கப்படுகிறது.

## புயல் காலங்களில் உதவி

புயல் காலங்களில் புயல் வருவதை மீனவர்கள் முன்கூட்டியே தெரிந்து கொள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இந்திய செஞ்சிலுவை நிறுவனத்தாரின் உதவியுடன் கடலோரப் பகுதிகளில் புயல் புகலிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

## அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

மீன்பிடி துறைமுகங்கள், மீன்பிடி தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானவை. சென்னையில் ரூ. 11 கோடி செலவில் மீன் பிடி துறைமுகம் கட்டி முடிக்கப்படும் தறுவாயில் உள்ளது. இத்துறைமுகத்தில் 500 மீன் பிடிபடகுகளும் 50 ஆழ்கடல் மீன் பிடிக் கலன்களும் நிறுத்த வசதிகள் செய்து தரப்படும். மேலும் தஞ்சையில் உள்ள கோடிக்கரை என்னுமிடத்தில் படகுகள் நிறுத்தி வைக்க ரூ. 14 லட்சம் செலவில் இறக்கு மேடைகள் அமைக்கும் வேலை துவக்க நிலையிலுள்ளது. கன்னியாகுமரியிலுள்ள சின்னமுட்டம் என்ற இடத்தில் ரூ. 234 லட்சம் செலவில் துறைமுகம் கட்டப்படும். இதைத் தவிர வாலிநோக்கம் ரூ. 77 இலட்சம் செலவிலும் மேலும் தஞ்சையில் பழையாறு மற்றும் இராமநாதபுரத்தில் தொண்டியிலும், புதுக்கோட்டையில் கோட்டைப் பட்டினத்திலும் இறக்கு மேடைகள் அமைக்கப்படும்.

# மின் வளர்ச்சியில் தன்னிறைவு காண.



எழுபதாம் ஆண்டுகளுக்கிடைவரை, 25 சதம் முதல் 75 சதம் அளவுக்கு விட்டு விட்டு மின்வெட்டை அனுபவித்ததன் விளைவாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரமே அடிப்படைத் தேவை என்பதை ஏற்று, மாநில அரசு மின்சார வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் ஈந்து, மாநில அரசின் வளர்ச்சித் திட்டத்தில் 35 சதம் அளவுக்கும் அதிகமான தொகையை மின் துறை வளர்ச்சிக்கு ஒதுக்கியது. 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மின்துறை வளர்ச்சிக்கென மொத்தம் 1230 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 572.3 கோடி ரூபாய் மின் உற்பத்தித் திட்டங்களுக்கும், 325.0 கோடி ரூபாய் மின் செலுத்துகை - மின் பகிர்வுத் திட்டங்களுக்கும், 115.0 கோடி ரூபாய் ஊரக மின்மயமாக்குத் திட்டத்திற்கும் ஆகும். 1982-83-ஆம் ஆண்டுக்கான மின் துறை முதலீட்டுச் செலவு கீழே பிரித்துக் காட்டியுள்ளபடி 220 கோடி ரூபாயாகும்.

| | | (ரூபாய் கோடி) |
|---|---|---|
| மின் உற்ப்த்திக்காக | ... | 126.5 |
| மின் செலுத்துகை— மின் பகிர்வுக்கென | ... | 63.5 |
| ஊரக மின் மயமாக்கத்திற்கென | ... | 29.0 |
| இதர வகைகளுக்கென | ... | 1.0 |
| மொத்தம் | ... | 220.0 |

**மின் வளர்ச்சித் திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு:**

1975-76-ஆம் ஆண்டில் 45 கோடி ரூபாயாக இருந்த மின்துறைக்கான முதலீட்டுச் செலவு, 70-ஆம் ஆண்டுகளில் அதிகரிக்கத் தொடங்கி, 1981-82-ஆம் ஆண்டில் 167 கோடி ரூபாய் அளவுக்கும், 1982-83-ஆம் ஆண்டில் 220 கோடி ரூபாய் அளவுக்கும் வளர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கீழே குறிக்கப்பட்டுள்ள அட்டவணையில் இது ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது:

4-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சராசரி :

| | | கோடி. |
|---|---|---|
| 1969—74 (சராசரி) | ... | 42.8 |
| 1974—75 முதல் 1976—77 வரை (சராசரி) | ... | 54.13 |
| 1977—78 முதல் 1978—79 வரை [சராசரி) | ... | 106.56 |
| 1979—80-ஆம் ஆண்டில் | ... | 152.00 |
| 1980—81-ஆம் ஆண்டில் | ... | 160.94 |
| 1981—82-ஆம் ஆண்டில் | ... | 167.06 |

**என்றுமே அதிகரித்து வரும் உச்ச நேரத் தேவை அளவும் தினசரித் தேவையளவும்**

10-12-81 அன்று உச்ச நேரத் தேவையளவு எப்பொழுதுமில்லா உயர் அளவான 2101 மெகாவாட்டை எட்டியது. இதேபோல் தினசரிப் பயனீட்டின் அதிக அளவும் 38,548 மில்லியன் யூனிட்டை 23-1-82 அன்று எட்டியது.

**நிறுவு திறனை அதிகரிக்கும் முயற்சிகள்**

31.3.1979 இறுதியில் 2509 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் நிறுவு திறன், தற்பொழுது 3139 மெகா வாட் அள

வுக்கு உயர்ந்துள்ளது. 210 மெகாவாட் கொண்ட மூன்று அனல் மின் உற்பத்தி நிலையங்கள் தூத்துக்குடியில் செயலுக்குக் கொணரப்பட்டதே இந்த உயர்வுக்குக் காரணம். குறித்த காலத்தில் தூத்துக்குடி அனல் மின் திட்டம் செயலாக்கி வழங்கப்பட்டது தமிழ்நாட்டின் மின்துறை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கதாகும்.

## நிறைவேறி வரும் திட்டங்கள்

மாநிலத்தின் மின் உற்பத்தியளவை அதிகரிக்கப் பல புதிய திட்டங்கள் அண்மைக் காலத்தில் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை கீழ் மேட்டூர் புனல் மின் திட்டமும், மேட்டூர் அனல் மின் திட்டமும் ஆகும். நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களின் விவரங்களைக் கீழே காணலாம்:

| | செயலுக்குக் கொண்டு வர நிர்ணயிக்கப்பட்டுள்ள கால இலக்கு |
|---|---|
| அ. மேட்டூர் அனல் மின் திட்டம் 420 மெ.வா. | 1985-86 |
| ஆ. சேர்வலாறு புனல் மின் திட்டம் 20 மெ.வா. | 1983-84 |
| இ. காடம்பாறை நீரேற்று புனல் மின் திட்டம் 400 மெ.வா. | 1983-84 |
| ஈ. குந்தா 5-ஆவது மின் நிலையத்தில் 2வது பிரிவு 20 மெ.வா. | 1984-85 |
| உ. கீழ்மேட்டூர் புனல் மின் திட்டம் 120 மெ.வா. | 1985-86 |

## புதிய அனல் மின் திட்டங்கள்

மாநிலத்தை மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதாக ஆக்க வேண்டும் என்ற நோக்கோடு புதிய அனல் மின் திட்டங்களும் ஏற்கெனவே உள்ள அனல் மின் நிலையங்களை விரிவாக்குவதற்கான திட்டங்களும் தீட்டப்படுகின்றன. தமிழ்நாடு மின்சார வாரியம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனல் மின் திட்டங்களைப் பரிந்துரை செய்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| வடசென்னை அனல் மின் திட்டம் | 1050 மெ.வா. | ரூ 614.65 | கோடிகளில் |
| தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம் | 710 மெ.வா. | ரூ 410.77 | ,, |
| மேட்டூர் அனல் மின் நிலைய விரிவாக்கம் | 420 மெ.வா. | ரூ 215.70 | ,, |
| கியாஸ் சுழலித் திட்டம் | 300 மெ.வா. | ரூ 117.00 | ,, |
| | 2480 மெ.வா. | ரூ 1359.12 | ,, |

மேற்கூறிய திட்டங்களுக்கான அறிக்கை இந்திய அரசினருக்கு மிகக் குறுகிய கால அளவில் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும். இவற்றிற்கு விரைவில் அனுமதி பெற தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசினரின் தீவிர முயற்சிகள் காரணமாக மேட்டூர், அனல் மின் நிலைய விரிவாக்கத்திற்கு மத்திய மின்சார அதிகார மன்றத்தின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. மற்ற இரண்டு திட்டங்களுக்கான அனுமதியும் கூட கிடைத்துவிடும் என்று அரசு நம்பிக்கையோடு காத்திருக்கிறது. இவை 1990-ஆம் ஆண்டுவாக்கில் பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்றும், அவ்வாண்டுகளில் மின் தேவையின் அளவை ஈடுகட்டக் கூடிய அளவிற்கு மின் உற்பத்தியானது இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்கள் என்பது, படிப்படியாக நீண்ட காலத் தேவையைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டியதாகும். இல்லையெனில், தமிழ்நாடு மின் பற்றாக்குறையைச் சந்திக்கவேண்டியிருக்கும். அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகள் காரணமாக, 70-ஆம் ஆண்டுகளில் தொடக்கத்தில் இருந்த மின் பற்றாக்குறை நிலையானது படிப்படியாக அகற்றப்பட்டு வருவதும், அடுத்த வரவுள்ள பத்தாண்டுகளில் இறுதியில் தமிழ்நாடு மின் தேவையைப் பொறுத்தவரை தன்னிறைவு பெறக்கூடும் என்பதும் பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

## நலிவுற்ற பிரிவினரும் மின் வசதி பெறுகின்றனர்.

சாதாரண மக்களுக்கும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கும் மின்சக்தியின் பயன் சென்றடைய வேண்டும் என்பதில் மாநில அரசு தீவிரமாயுள்ளது.

அரசினரின் ஊரக மின்மயமாக்குத் திட்டத்தில் தீவிர பங்கு வகிப்பது குடிசை வாழ்வோர்க்கு மின் வசதி அளிப்பதே. கிராமப் புறங்களிலுள்ள குடிசைகளுக்கு 40 வாட்டு





டன் கூடிய மின்சார பல்பு பொருத்தப்பட்ட மின் இணைப்பை வழங்கும் திட்டம் ஒன்றை அரசு தொடங்கியுள்ளது. மாதமொன்றுக்கு மிகக்குறைந்தமின் கட்டணமாகரூ.2.50 மட்டுமே ஒவ்வொரு குடிசைவாசியிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. 1979-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம் மிகத் தீவிரமாகியது. இன்று கிட்டத்தட்ட 4.6. இலட்சம் குடிசைவாசிகளால் இதன் பயன் நுகரப்படுகின்றது. ஆண்டுதோறும் மின் இணைப்பு வழங்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கையைக் கீழே காணலாம்:

| ஆண்டுகள் | மின்னிணைப்பு வழங்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1979-80 | 1,67,297 |
| 1980-81 | 1,28,153 |
| 1981-82 | 1,54,662 |
| 1982-83 (4/82விலும் 5/82விலும்) | 12,629 |
| மொத்தம். | 4,62,741 |

**ஆதிதிராவிடர், குடியிருப்புகள் அனைத்திற்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளன.**

இன்று தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் (25,872) மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி தமிழ்நாட்டிற்குப் பெருமை அளிக்கக் கூடியதாகும். இத்தகைய பெருமையைப் பெற்றுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்.

**பெருமளவிலான விசையேற்றங்கள் மின்னிணைப்புப் பெற்றுள்ளன.**

புதிய விவசாய விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்குவதைத் தமிழ்நாடு மின்சார வாரியம் தீவிரப் படுத்தியதன் விளைவாகக் கடந்த இரு ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கீழே காணலாம்:

| ஆண்டுகள் | மின்னிணைப்பு பெற்ற விசையேற்றங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1980-81 | 31,935 |
| 1981-82 | 26,358 |

1982-ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி அன்றுள்ள நிலவரப்படி ஏறக்குறைய 9.5 இலட்சம் விவசாய விசையேற்றங்கள் மின்சாரத்தினால் இயங்கி வருகின்றன. மின் இணைப்புக் கோரிக் காத்துக் கிடக்கும் விண்ணப்பங்கள் எல்லாவற்றிற்கும் மின்சாரம் வழங்க, 31.3.1976க்கு முன்பு வந்துள்ள எல்லா இணைப்புக்களுக்கும் மின்சாரம் வழங்குவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. 31.3.1976க்கு முன்பு வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை சுமார் 55,445 ஆகும். இவை எல்லாவற்றிற்கும் 31.3.1983க்கு முன்பு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுவிடும்.

**தன்னிறைவுத திட்டத்தில் அடைந்துள்ள முன்னேற்றம்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம் சுமார் 1523 மேல்நிலை நீர்த்தொட்டிகளுக்கும் தரைநிலை நீர்த் தொட்டிகளுக்கும் மின் இணைப்பு வழங்கியுள்ளது.

**விவசாயிகளுக்கு அதிகச் சலுகைகள்.**

விவசாயிகளுக்கான மின் கட்டணம், நாட்டிலேயே மிகக் குறைவானதாகும். 1977 ஆம் ஆண்டு சூலை முதல் சிறு விவசாயிகளுக்கான மின் கட்டணம் 16 காசுகளிலிருந்து 14 காசுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1980- ஆம் ஆண்டு சூன் முதல் இது சிறிய விவசாயிகளுக்கு 12 காசுகளாகவும், மற்றவர்களுக்கு 14 காசுகளாகவும் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது. 1980-ஆம் ஆண்டு சூலை முதல் நாள் முதல் விவசாய இணைப்புகளுக்கு மின் அளவி வாடகைக் கட்டணம் நான்கு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாகக் குறைக்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் விவசாயத்திற்கான மின் கட்டண வீதம் எல்லா இனங்களையும் உள்ளடக்கியதாகச் சிறிய விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 12 காசுகளாகவும், மற்றவர்களுக்கு 15 காசுகளாகவும் திருத்தப்பட்டபோது, இந்த மின் அளவி வாடகைக் கட்டணம் முற்றிலும் நீக்கப்பட்டது.

நிறுவுதிறன் 3000 மெ.வா. அளவைக் கடந்து விட்டது. மின்துறை வளர்ச்சிக்கான முதலீட்டளவும் கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது, மின் உற்பத்தியைக் கூடுதலாக்கப் பல்வேறு புதிய திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் 2400 மெ.வா. அளவிற்கு ஏற்கனவே உள்ள அனல் மின் நிலையங்களை விரிவுபடுத்தவும், புதிய அனல் மின் நிலையங்களை அமைக்கவும் இந்திய அரசினருக்குப் பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்கும் மின்சாரத்தின் பயன் சென்றடைய வேண்டும் என்ற நோக்கோடு குடிசைகளுக்கு மின் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் குடியிருப்புகள் எல்லாவற்றிற்கும் மின்வசதியளிக்கப்பட்டுள்ளன. புதிய விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்குவது விரைவுபடுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மின் நுகர்வோரை மன நிறைவு கொள்ள வைக்கப் பல நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. புதிய மாற்று மின்விசை ஆதாரங்களைக் கண்டுபிடிக்கவும், ஏற்கெனவே உள்ள மின்சாரத்தைச் சேமிக்கவும், திறம்படப் பயன்படுத்தவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு, மின் வளர்ச்சியில் தன்னிறைவு நிலையை எய்த எல்லா வகையிலும் தயாராக்கப்பட்டுள்ளது.

# வெண்மைப் புரட்சி

உலக நாடுகளின்வள வாழ்வை அளவிட வேண்டுமானால் அந்த நாட்டின் தொழில் புரட்சியும், வேளாண்மைப் புரட்சியும் தான் அடிப்படையாக விளங்கும். தமிழகத்தின் வளவாழ்விலே வேளாண்மைப் புரட்சியிலே பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும்தான் மிக முக்கியமாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சியின் அடித்தளமாக விளங்குவது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமாகும்.



1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நாள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் உதயமானது. தமிழக அரசின் கொள்கை அடிப்படையில் தமிழ்நாட்டில் பால் வளத்தை மேம்பாடு அடையச் செய்ய கிராமப் புறத்தில் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கமாகவும், மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களாகவும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் இணையமாகவும் மொத்தத்தில் மூன்று அடுக்கு அமைப்புகளாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இணையத்தின் முக்கிய பணிகள்:**

இணையம், பால் வளத்தை அதிகரித்துப் பால் பண்ணைகளையும் மேம்பாடு அடையச் செய்து சிறப்பாகப் பணிபுரிகின்றது. மேலும் பாலைச் சேகரிப்பதற்கும், பல ஊர்களுக்கு ஏற்றிச் செல்வதற்கும், விற்பனை செய்வதற்கும் புதிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றது. நகர்ப்புற மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பாலை வழங்குவதும் இணையத்தின் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்று.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பால் கொள்முதல் செய்யப்பட்டு 19 குளிர் பதன நிலையங்களில் குளிர வைக்கப்பட்ட பால் இவ்விணையத்தின் பால் சேகரிக்கும் வண்டிகளின் மூலமாக மாதவரம், அம்பத்தூர், மதுரை ஆகிய பால் பண்ணைகளுக்கு அனுப்பப்படுகிறது. குளிர் படுத்தப்பட்ட பாலில் இருந்து ஒரு பகுதியினை ரயில் தொட்டிகளின் மூலமாகவும் ஈரோட்டிலிருந்து அம்பத்தூர் பால் பண்ணைக்குத் தருவிக்கப்படுகிறது. இப்படித் தருவிக்கப்பட்ட பாலுடன் ஆடை நீக்கிய பால் பொடியும் (Skim Milk Powder) ம வெண்ணெய் கொழுப்புச் சத்தும் (Butter Oil) கலந்து, தரப்படுத்தப்பட்ட பாலாக ( Standardised Milk ) (4.5·/. கொழுப்புச் சத்து 8.5./· மற்றச் சத்து நிறைந்த) பாலாக மாற்றிச் சென்னையில் உள்ள பால் விற்பனை நிலையங்கள் (டிப்போக்கள், பாலகங்கள்) மூலமாக விற்பனை செய்யப்படு



பால் விற்பனை நிலையம் ஒன்றின் திறப்பு விழாவில்



கிறது. இதைப்போன்று மதுரை மாநகரிலும் விற்பனை செய்யப்படுகிறது. மற்றும் சென்னையில் மொத்த விற்பனைப் பிரிவுகள் மூலமாகவும் தானியங்கி இயந்திரங்கள் மூலமாகவும் (Automatic Vending Machine) பால் விநியோகம் செய்யப்படுகிறது.

**கால்நடைத் தீவன உற்பத்தி:**

மாதவரம் பால் பண்ணையில் அமைக்கப்பட்டிருக்கும் கால் நடைத் தீவன உற்பத்தி ஆலையும், வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூரில் அமைந்துள்ள கால் நடைத் தீவன ஆலையும், ஒவ்வொன்றும் ஒரு மணிக்கு 4 முதல் 5 டன் உர்பத்தித் திறன் உள்ளதாக அமைந்துள்ளது. தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரி 1500 டன் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது.

1981ல் 1.2.1981 முதல் 31.12.1981 வரை 16,000 டன்களுக்குக் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது. 1982ல் 1.1.82 முதல் 31.12.82 வரை 18,000 டன்கள் உற்பத்தியை எட்டும் என்றும் திட்டமிடப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. ரூ. 10 இலட்சம் செலவில் ஒரு குளிகை வடிவில் (முறுக்கு) தீவனம் தயாரிக்கும் ஆலை (Pellitiser Plant) மாதவரத்தில் நிறுவப்பட்டுச் செயல்பட உள்ளது.

**முதல் பால் பெருக்குத் திட்டம்:**

1981 மார்ச் முடிய முடிவுற்ற முதல் பால் பெருக்குத் திட்டம் அடிப்படை வளர்ச்சிகளுக்காக நிதி உதவி 70 விழுக்காடு கடனாகவும் 30 விழுக்காடு மானியமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டின் கீழ், அம்பத்தூர் புதிய பால் பண்ணை தொடங்கப்பட்டது. பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் புதிய பால் பண்ணை தொடங்கப்பட்டது, மாதவரம், மதுரை பால் பண்ணைகள் விரிவுபடுத்தப்பட்டன. ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் பால் பவுடர் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன.



சங்கிராண்டம் பாளையம், சத்தியமங்கலம், சின்னசேலம், ஆம்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுச் செயலாக்கப் பணிகள் ஆரம்பமாகிவிட்டன. திருவண்ணாமலையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் பணி தொடங்க இருக்கிறது.

முதல் பால் பெருக்குத் திட்டத்தினால் 1972ல் பால் கொள்முதல்



நாளொன்றுக்கு 46,000 லிட்டராக இருந்தது 1982ல் 4 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. அதேபோன்று பால் விற்பனை நாளொன்றுக்கு 1972ல் 81,000 லிட்டராக இருந்தது 1982ல் 3,60,000 லிட்டராக உயர்ந்துள்ளது. 1972ல் 4,239 விவசாயிகள் பயனடைந்திருந்தார்கள். ஆனால் 1982ல் 3 இலட்சம் விவசாயிகள் முதல் பால் பெருக்குத் திட்டப் பணியில் ஈடுபட்டுப் பயன்பெற்றார்கள்.

முதல் பால் பெருக்குத் திட்டத்திற்கு ரூ. 16.83கோடி முடிவான நிதி ஒதுக்கப்பட்டது. இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் 1981 டிசம்பர் மாதம் வரை கொடுத்துள்ள நிதி 15.47கோடியாகும். இதில் 30-11-'81 முடிய உபயோகப் படுத்தப்பட்ட தொகை ரூ. 15.21 கோடியாகும்.

**2-வது பால் பெருக்குத்திட்டம்:**

தமிழ்நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக முதல் பால் பெருக்குத் திட்டத்தினைத் தொடர்ந்து 2ஆம் பால் பெருக்குத் திட்டத்திற்குச் சுமார் ரூ.42 கோடி மதிப்பீட்டில் செயல் வடிவம் கொடுத்து நிறைவேற்றும் பணியில் 9 மாவட்டங்களில் படிப்படியாகப் பால் உற்பத்தி





யாளர்கள் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டுக்குள் மொத்தம் 4,550 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் அமைக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின்கீழ் கோயமுத்தூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் புதிய பால் பண்ணைகள் அமையும். ஈரோடு, சேலம், வேலூர், மதுரை, அம்பத்தூர் ஆகிய பால் பண்ணைகள் விரிவுபடுத்தப்படும். மதுரையில் கால்நடைத்தீவன ஆலை ஒன்று நிறுவப்படும்.

பால் கொள்முதலுக்காக 13 இலட்சம் கறவை மாடுகளைச் சேர்க்கவும், இதில் 48 விழுக்காடு செயற்கை முறைக் கருத்தரித்தல் திட்டத்தின்கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் முடிவில் நாள் ஒன்றுக்குப் பால் உற்பத்தி 34.8 இலட்சம் லிட்டராக அதிகரிக்கும் பொழுது பால் கொள்முதல் நாளொன்றுக்குச் சுமார் 10.90 இலட்சம் லிட்டராக இருக்கும். முதல் பால் பெருக்குத் திட்டத்தினால் 3 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்றார்கள் என்றால் இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தினால் 1986-ல், 13 இலட்சம் விவசாயிகள்பயன்பெறுவார்கள். 1982-ல் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தினால் 1986-ல் 10.9 இலட்சம் லிட்டராக உயரும். அதேபோன்று 1982ல் பால்விற்பனை நாளொன்றுக்கு 3.6 இலட்சம் லிட்டரிலிருந்து 1986-ல் 10.8 இலட்சம் லிட்டராக உயரும். பால் விற்பனை எல்லா முக்கிய நகரங்களிலும் செயல்படுத்தப்படும்.

## 1982-83ஆம் ஆண்டின் சிறப்புத் திட்டங்கள் :

1982-83ஆம் ஆண்டில் திருநெல்வேலி, திருச்சி ஆகிய இடங்களில் புதிய பால் பண்ணைகளுக்கான ஆரம்ப வேலைகள் தொடங்கும். செங்கோட்டைப் பகுதி, நாங்குநேரிப் பகுதி, புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, சேத்தியாத் தோப்பு முதலிய இடங்களில் பால் குளிரூட்டு நிலையங்கள் அமைக்கப்படும்.



கால்நடைகளின் பாதுகாப்பிற்குத் தமிழ்நாட்டில் புதிதாகக் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கப்படுகின்றன. பால் உற்பத்தியினைப் பெருக்கிடவும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும் புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 500 அமைக்கப்படும். தஞ்சையிலும், திருச்சியிலும் மக்களுக்கு, பிளாஸ்டிக் பைகளில் தரமான பால் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.



### கிருஷ்ணகிரியில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலை :

தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியில் நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தக் கூடிய திறன் கொண்ட உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணையை வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிகள் திட்டத்தின்கீழ் அமைப்பதற்கான ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்குச் சுமார் 2.75 கோடி ரூபாய் செலவாகும்.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், விவசாயிகளை ஊக்குவிப்பதற்காகவும், 1981ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாலின் கொள்முதல் விலை ஒரு லிட்டருக்கு 42 காசு வரை கணிசமான அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.

### சென்னை நகரில் பால்விநியோகம்:

சென்னை நகரில் தற்பொது ஒரு நாளைக்கு 2.97 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. நாளொன்றுக்கு 2.5 டன் வெண்ணைய் மற்றும் நெய் விற்பனை செய்யப்படுகிறது. சென்னை நகரில் தற்போது பால் டெப்போக்கள் 448, பால் பொருட்கள் விற்பனை நிலையங்கள் (பார்லர்கள்)48. தானியங்கிப் பால் வழங்கும் நிலையங்கள் 22 செயல்பட்டு வருகின்றன.

சென்னை நகரில் பால் விநியோக முறையை அபிவிருத்தி செய்வதற்காகவும் பால் விநியோக முறையில் உள்ள முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காகவும் சென்னை மாநகர் முழுவதும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டு அவைகளில் இதுவரை 9 சங்கங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன.

### மதுரை நகரில் பால் விநியோகம்:

மதுரை நகரில் பால் விற்பனை, 122 டிப்போக்கள் மூலமும் பால், பால் பொருட்கள் 13 விற்பனை நிலையங்கள் (பார்லர்கள்) மூலமும் செயல்பட்டு வருகின்றது.

மதுரையில் நாளொன்றுக்கு 60 ஆயிரம் லிட்டர் பாலும் 1.7டன் வெண்ணெய் மற்றும் நெய்யும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறாகத் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் விவசாயிகள், நகர்ப்புற நுகர்வோர்கள் ஆகிய இரு சாரார்களுக்கும் சீரிய முறையில் நற்பணியாற்றி வருகிறது.



# வறட்சி நிவாரணப் பணிகள்

மாநிலத்தில் 1980-81-ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்து விட்ட காரணத்தால் சென்னை, நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் தவிர 13 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன. கிராமப்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டால். பயிர்கள் நீரின்றிச் சாவியாயின. உழவுத் தொழிலாளர்கள் வேலையின்றி வாடினர். இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்டு தொல்லைக்கு ஆளான மக்களின் துயர் துடைக்க 1980 நவம்பர் மாதத்திலிருந்து எல்லா நிவாரணப் பணிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டியிருந்தது.

வறட்சி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தும் விதம் பற்றி அரசுச் செயலாளர்களும் துறைத் தலைவர்களும் ஒன்று கூடி விவாதித்து முடிவு செய்தனர். இக்கூட்டம் 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் நாள் அன்று நடைபெற்றது. இதற்குத் தலைமைச் செயலாளர் தலைமை தாங்கினார். ஏற்கெனவே உள்ள குடிநீர் வாயில்களைப் பராமரித்தல், கிணறுகளில் விசையேற்றம் நிறுவுதல், இருக்கின்ற துளையிடு கருவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல், குடிநீர் பம்புகள் பராமரிக்கக் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல், வேலையின்றி வாடும் உழவர்களுக்கு வேலை அளிக்கும் பணிகளை நிறைவேற்றுதல், பொது விநியோக முறையின் கீழ், உணவு தானியங்களை வழங்குதல் ஆகியவை குறித்துக்கவனம் செலுத்தப்பட்டது. 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாளிலிருந்து 22-ஆம் நாள்வரை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குச் சென்று அங்கு நிறைவேறி வரும் பல்வேறு பணிகளைப்





பார்வையிட்டார். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ஆம் நாள் அன்று விரிவாக விவாதித்தார்.

துளைக் கிணறுகள் அமைக்கும் பணியைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், வேளாண்மைப் பொறியியல் துறையும் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நிலத்தடி நீர்ப் பிரிவும் மேற்கொண்டன. துளையிடு கருவிகள், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்டன. அவற்றுடன் நம் மாநிலத்திலிருக்கும் துளையிடு கருவிகளும் இப்பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 7,249 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நிலத்தடி நீர்ப்பிரிவுச் சோதனை அடிப்படையில் ஏற்கனவே தோண்டியுள்ள 698 துளைக் கிணறுகள் குடிநீர்க்காரியத்திற்காக ஒப்படைக்கப்பட்டன. 19,461 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. பொதுப் பணித்துறை, ஏரிப் படுகைகளில் அல்லது ஏரிகளுக்கருகாமையில் திறந்தவெளிக் கிணறுகள் தோண்டியுள்ளன. நீர் கிடைக்காத பகுதிகளுக்கு லாரிகள், டிராக்டர்கள் மூலமாகவும் நீர் கொண்டு சென்று வழங்கப்பட்டது. இவ்வாறு நீர் கொண்டு செல்லத் தேவைப்படும் உருக்குத் தொட்டிகளைத் தயாரித்து, வாங்கித் தேவையுள்ள பகுதிகளுக்கு வழங்கப்பட்டன. நகராட்சிகள், பேரூராட்சிகளில் நீர் வழங்கு பணிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும், தொடர்ந்து மின்சக்தி வழங்கும் வகையில் நீர் வழங்கும் பணிகளுக்கு மின்சக்தி வழங்கத் த்னியாக 50,00,000 ரூபாய் செலவில் மின்கம்பித் தொடர்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் நீர் வழங்கும் ஏற்பாட்டினைச் சீரமைக்க ரூ. 87 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சென்னை நகர் உட்பட வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் வழங்க அரசு மொத்தம் ரூ. 1,960 இலட்சம் செலவு அனுமதித்துள்ளது.

வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளைப் பொறுத்த வரையில் 50 ஏக்கருக்கு மேலாக உள்ள ஆயக்கட்டு உள்ள ஏரிகளைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் பணியைப்பொதுப் பணித் துறை நிறைவேற்றி உள்ளது. 50 ஏக்கருக்கும் குறைவாக உள்ள ஆயக்கட்டிற்குப் பாசனம் அளிக்கும் சிறிய ஏரிகளைச் சீரமைக்கும் பணியையும் புதிய சாலைகள் அமைத்தல், கிராமச் சாலைகள் சீரமைத்தல் பணிகளையும் நெடுஞ்சாலை - நிவாரணப் பணிகள் துறை நிறைவேற்றியது. ஏனைய சாலைகளைச் செப்பனிடும் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும், நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை நிறைவேற்றியுள்ளது. குளங்கள், ஊருணிகள் ஆகியவற்றைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் பணியையும் நெடுஞ்சாலை நிவாரணப் பணிகள் துறை நிறைவேற்றியுள்ளது. நீர் சேகரிப்புக்குட்டைகள் அமைத்தல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறையும், பொதுப் பணித் துறையும் (நீர்ப் பாசனம்) நிறைவேற்றியுள்ளன. காடு வளர்ப்புத் திட்டங்களை வனத் துறை நிறைவேற்றியுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பல பணிகளுக்கு மொத்தம் ரூ. 2,928 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நீர் வழங்கு பணிகளுக்கும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகளுக்கும் மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியையும் பணிகளின் முன்னேற்றத்தையும் காட்டும் இரு விவர அறிக்கைகள வருமாறு :



(1) மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீட்டைக் காட்டும் விவர அறிக்கை.

| மாவட்டத்தின் பெயர் | | நீர் வழக்கு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு | வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் | இலட்சத்தில்) |
| வட ஆர்க்காடு | ... | 314.85 | 520.31 | 835.16 |
| தென் ஆர்க்காடு | ... | 185.87 | 291.07 | 476.94 |
| செங்கற்பட்டு | ... | 85.00 | 198.86 | 283.86 |
| திருச்சிராப்பள்ளி | ... | 183.46 | 166.18 | 349.64 |
| மதுரை | ... | 140.53 | 186.91 | 327.44 |
| தஞ்சாவூர் | ... | 40.31 | 64.90 | 105.21 |
| இராமநாதபுரம் | ... | 201.09 | 480.20 | 681.29 |
| திருநெல்வேலி | ... | 73.98 | 70.09 | 144.07 |
| சேலம் | ... | 214.04 | 188.34 | 402.38 |
| தருமபுரி | ... | 139.41 | 281.58 | 420.99 |
| புதுக்கோட்டை | ... | 150.14 | 272.59 | 422.73 |
| பெரியார் | ... | 70.60 | 50.45 | 121.05 |
| கன்னியாகுமரி | ... | 3.47 | 7.00 | 10.47 |
| சென்னை | ... | 87.00 | ... | 87.00 |
| மொத்தம் | ... | 1,889.75 | 2,778.48 | 4,668.23 |

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| தனி மின் கம்பித் தொடர்கள் அமைத்தல் | ... | 50.00 | ... | 50.00 |
| உருக்குத்தொட்டிகள் அமைத்தல் | ... | 20.00 | ... | 20.00 |
| மண்வளப் பாதுகாப்பு | ... | ... | 60.00 | 60.00 |
| காடு வளர்ப்பு | ... | ... | 90.00 | 90.00 |
| மொத்தம் | ... | 1,959.75 | 2,928.48 | 4,888.23 |



**(2) நிறைவேற்றப்பட்ட நீர் வழங்குப் பணிகள், தொழிலாளர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை :**

| மாவட்டத்தின் பெயர் | தோண்டப் பட்ட கிணறுகள் | ஆழப்படுத் தப்பட்ட துளை கிணறுகள் | நிறைவுற்ற பாசனப் பணிகள் | நிறைவுற்ற சாலைப் பணிகள் | நிறைவுற்ற ஊருணிகள், குளங்கள் மேம்பாட்டுப் பணிகள். |
|---|---|---|---|---|---|
| வட ஆர்க்காடு | 1,153 | 6,390 | 2,551 | 1,056 | 490 |
| தென் ஆர்க்காடு | 824 | 1,946 | 1,646 | 444 | 403 |
| செங்கற்பட்டு | 380 | 1,452 | 1,183 | 345 | 516 |
| திருச்சிராப்பள்ளி | 727 | 1,591 | 1,229 | 472 | 550 |
| மதுரை | 690 | 780 | 853 | 327 | 199 |
| தஞ்சாவூர் | 79 | 61 | 303 | 112 | 123 |
| இராமநாதபுரம் | 1,053 | 1,313 | 2,975 | 713 | 695 |
| திருநெல்வேலி | 310 | 297 | 481 | 142 | 137 |
| சேலம் | 608 | 1,392 | 708 | 613 | 111 |
| தருமபுரி | 705 | 2,168 | 1,408 | 624 | 356 |
| புதுக்கோட்டை | 470 | 1,524 | 1,953 | 506 | 897 |
| பெரியார் | 250 | 431 | 187 | 206 | 238 |
| கன்னியாகுமரி | ... | 116 | 71 | 11 | ... |
| மொத்தம் | 7,249 | 19,461 | 15,448 | 5,571 | 4,715 |

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பயிர்களின் நிலைமையைக் கருதிப் பார்த்து 13 மாவட்டங்களில் 1390-ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி, தண்ணீர்த் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகிய வற்றைத்தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டது. பயிர் விளைச்சலின் மதிப்பு 50 சதவீதத்திற்குக் குறைவான அதாவது 37காசுக்கு குறைவாக இருக்கும் பகுதிகளில் வயல்களை நேரடியாகச் சென்று பார்த்து அதற்குரிய நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரியைத் தள்ளுபடி செய்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 746 இலட்சமாகும். ஒரு கிராமத்தில் உழவர்கள் வைத்திருக்கும் நிலத்தில் 50 சதவீதத்திற்கும் குறையாத நிலப்பரப்பிற்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ள இனங்களில் 1390-ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் செஸ் வரி, அரசுக் கடன் பாக்கிகளையும் வசூலிப்பது 1391-ஆம் விளைச்சல் ஆண்டுக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் கிடைக்காத இடங்களில் வைக்கோல் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. சுமார் 8,100 மெட்ரிக் டன் வைக்கோல் விற்கப்பட்டது. இவற்றை ஏற்றிச் செல்லவும் இறக்கவும் ஆன செலவை அரசு ஏற்றுள்ளது. இந்த வகையில் ரூ. 47 இலட்சத்தை உதவித் தொகையாக அரசு வழங்கி உள்ளது. கால்நடைகளுக்கு ரூ. 17.25 இலட்சம் செலவில் நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. நோயில் வாடும் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க ரூ. 50 இலட்சம் செலவில் மருந்துகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. கால்நடைகள் நீர் அருந்துவதற்குச் சுமார் 600 நீர்த்தொட்டிகள் கட்டப்பட்டன.

குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் சுமார் 3,000 நிலையங்களைத் தொடங்கிச் சத்துணவு வழங்க சமூக நலத் துறை மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக ரூ. 155.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. வறட்சிக் காலத்தில் சுமார் 6,000 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்க இத்திட்டம் வகை செய்தது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கைம்பெண்களுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும், முதியோர் உதவித்தொகை பெறுவோர்களுக்கும் 1981 ஜூலை முதல் 1981 செப்டம்பர் வரை மூன்று மாத காலத்திற்கு, வாரத்திற்கொரு முறை கூடுதலாக 1 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. இந்த வகையில் ரூ. 13.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவமனைகளுக்கு மருந்துகளும், நோய்த் தடுப்பு ஊசிகளும் வழங்க அரசு ரூ. 150 இலட்சம் அனுமதித்துள்ளது.



வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு உழவர்களுக்கும் ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் குறைந்த விலையில் விதைகள், பூச்சி கொல்லி மருந்து, இரசாயன உரம் வழங்க அரசு ரூ. 380 இலட்சம் அனுமதித்துள்ளது.

நிவாரணப் பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் செயல்படுத்த அரசு இரு குழுக்களை அமைக்க ஆணை பிறப்பித்தது. (1) மாவட்ட அளவிலான குழுவில், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரும்; (2) மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் அமைக்கப்பட்ட குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்பட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். மாவட்ட அளவிலான குழுக்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டு அவற்றிற்கு மாவட்ட ஆட்சியரும் உள்ளூர் பகுதிக் குழுக்களின் கூட்டங்களுக்குக் கோட்டாட்சியரும் தலைமை வகித்தனர்.

மாநில அளவில், வறட்சி நிவாரணப் பணிகளை வகுத்தல், செயல்படுத்தல்; ஒருங்கிணைத்தல் பணிக்குத் தனி ஆணையர் மற்றும் வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் பொறுப்பு வகித்தார். அவர் நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு அடிக்கடி சென்று பார்வையிட்டு நிவாரணத் திட்டத்தை விரைவாகவும் செம்மையாகவும் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தெரிவித்தார். நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, ஆணையரும் அரசும் வாரம் ஒரு முறை ஆய்வு செய்தனர்.

வறட்சி நிவாரணத் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதை ஆராயவும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காகவும், செயலாக்க முகவர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பதற்காகவும், வறட்சி நிவாரணக் கொள்கை குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் அரசுத் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், அரசு இரண்டாம் செயலாளர், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் உயர் அதிகாரக் குழு அமைக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தபோது வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். நிவாரணப் பணிகளை விரைவில் செயல்படுத்த மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட அதிகாரிகளுக்கும் ஆலோசனை நல்கி, தக்க உத்தரவுகளைப் பிறப்பித்தார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரும் தனது சுற்றுப் பயணத்தின்போது, நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். மாவட்ட அளவிலான குழுக்களின் கூட்டங்கள் சிலவற்றில் தலைமை தாங்கி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தும் அதிகாரிகளுக்கு நிவாரணப் பணிகளை விரைவாக முறையாகச் செயல்படுத்த ஆலோசனையும் அறிவுரையும் நல்கினார்.

கடும் வறட்சியையும் மேற்கொள்ளப்பட வேண்டிய பெருமளவு நிவாரணப் பணிகளையும் கருதி விரிவான அறிக்கை ஒன்றை அரசு தயாரித்து 1981 மார்ச் திங்களில் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. மத்திய அரசு அதிகாரிகள் குழு 1981 ஏப்ரல் திங்களில் இம்மாநிலத்திற்கு வந்து வறட்சிப் பகுதி



களைப் பார்வையிட்டு நிலைமையை மத்திய அரசுக்கு எடுத்துரைத்தது. அவர்களுடைய பரிந்துரையின் பேரில் பல நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 49.77 கோடி உச்ச வரம்புத் தொகைக்கு மத்திய அரசு இசைவளித்தது.

வறட்சி நிவாரண உச்சவரம்புச் செலவு ரூ. 49.77 கோடி என்று மத்திய அரசு நிர்ணயித்திருந்தபோதிலும் அரசு மொத்தம் ரூபாய் 57.64 கோடி செலவிட அனுமதித்துள்ளது. 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்திற்காக ரூ. 56.85 கோடி செலவு செய்துள்ளது. மேலும் தனியார் பாசனக் கிணறுகள் ஆழப்படுத்துவதற்காக கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூ. 2,500 வீதம் தக்காவிக் கடன் வழங்க ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 22,700 பேர் பயனடைந்துள்ளனர்.

வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆன செலவை, பின்வரும் அட்டவணை காட்டுகிறது :

| பணிகள்/திட்டங்கள் குறித்த விவரம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| லாரிகள், டிராக்டர்கள் முதலியவற்றின் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல். | 41.24 |
| மருத்துவம்-பொதுச் சுகாதாரம் :— | |
| நோய் தீர்க்கும் மருந்துகள் ... | |
| நோய் தடுப்பு மருந்துகள் ... | 147.32 |
| கால் நடை வளர்ப்பு : | |
| நோய் தீர்க்கும் மருந்துகள் ... | 49.99 |
| நோய் தடுப்பு மருந்துகள் ... | 17.25 |
| தீவனம் : | |
| தீவனத்தைக் கொண்டு செல்லவும் அவற்றை ஏற்றியிறக்கவுமான செலவுகள் | 46.92 |
| முதியோர்களுக்கும், ஏலாமையுற்றவர்களுக்கும் இட்ருதவி ... | 13.74 |
| குடிநீர் வழங்கல் : | |
| 1. புதிய துளைக் கிணறுகள் அமைத்தல் ... | 1,222.17 |
| 2. கிணறுகளை ஆழப்படுத்துதல் ... | 302.32 |
| 3. குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்காக நகராட்சிகள் பேரூராட்சிகளுக்கு நிதியுதவி ... | 258.07 |
| 4. தண்ணீர்கொண்டு செல்வதற்கான தொட்டிகள் அமைத்தல் ... | 27.50 |
| 5. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் ... | 90.50 |
| வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பணிகள் : | |
| 1. பாசனப் பணிகள் ... | 1,843.49 |
| 2. சாலைகள்-ஏனைய ஊரகப்பணிகள் ... | 674.44 |
| 3. மக்கள், கால்நடைகள் பயன்படுத்தும் ஊருணி, குடிநீர்க் குட்டைகள் ஆகியவற்றைப் பழுது பார்த்தல் ... | 252.35 |
| 4. மண்வளப் பாதுகாப்பு ... | 60.65 |
| 5. காடு வளர்ப்பு ... | 96.41 |
| சிறு உழவர்களுக்கும், ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் குறைந்த விலையில் வேளாண்மை விளை பொருள்களை வழங்குதல் ... | 385.64 |
| சத்துணவுத் திட்டம் ... | 155.30 |
| மொத்தம் ... | 5,685.30 |



# நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்!

நிலம், மனிதனுக்கு ஒரு மதிப்பு வாய்ந்த உடைமை ஆகும். நிலம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் அதன் எல்லைகள், அதில் தனது சுயேச்சையான அனுபோகம், அதன் மீது தகராறு ஏதும் இல்லாத தன் உரிமை ஆகியவற்றில் அக்கறை உள்ளவராக இருக்கிறார். நிலங்கள் அளக்கப் பெற்று, வருவாய்த் துறை ஆவணங்களிலும், பதிவுத் துறைப் புத்தகங்களிலும் தன்பெயரில் நில உடைமையாளன் பதிவு செய்து கொள்வதன்மூலமும் தன் பெயரில் தன்னுடைய நிலங்களுக்குப் 'பட்டா' பெறுவதன் மூலமுமே, மேலே குறிப்பிட்டவை உறுதியளிக்கின்றன.

தனி உடைமை நிலங்கள் மற்றும் கிராமங்களின் எல்லைகளை வரையறுத்தலும், உடைமை நிலங்களின் தொகுப்பான (1) நில அளவுப் புலன்களின் எல்லைகளைக் காட்டும் கிராமப் படங்கள் (2) ஒவ்வொரு உடைமை நிலத்தின் எல்லைகள், அதிலுள்ள தல விவரக் குறியீடுகள், அளவுகள் இவற்றுடன் கூடிய பெரிய அளவு வரைபடங்கள் (3) புல எண், தன்மை, உரிமை முறை, பரப்பு, தீர்வை, உடைமையாளரின் பெயர் இவற்றைக் குறிக்கும் நிலவரிப் பதிவேடுகள், ஆகியவற்றைத் தயாரித்தல், ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் பட்டா வழங்குதல் ஆகியவை வரி விதிப்புக்காகச் செயல்படும் நில அளவையின் குறிக்கோள் ஆகும்.

இன்றைய நிலைக்கேற்ற நில அளவை முறை, நிலப் பதிவுருக்கள், நிலம் பற்றிய பதிவுகள் ஆகியவற்றுக்கு, கீழ்க் குறித்த காரணங்களால் ஏற்படும் மதிப்பின் மிகுதியால் அவற்றைப் பராமரிப்பது அவசியமாகிறது.

1. குடியானவனுக்கு, நிலத்தின் உரிமைச் சாசனமாகவும், நிலஉரிமைப் பட்டயமாகவும் இத்திட்டம் மிகுந்த மதிப்புடையதாக விளங்குகிறது.
2. பயிரிடுபவர்களின் உரிமைகளையும், நிலத்தையும், பாதுகாக்க இது உதவுகிறது.
3. நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயற்படுத்த வகை செய்கிறது.
4. நம் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு, குறிப்பாக, உணவுதானியம் மற்றும் விவசாய மூலப் பொருட்களை மிகுதியாகத் தயாரிப்பதற்கு, இது அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறது.
5. சுருக்கமாகச் சொல்லப் போனால், கிராமப் புறங்களில் நெறிப்படுத்தப்பட்ட நிருவாகம் அமையவும், நில எல்லை சம்பந்தப்பட்ட நில வழக்குகளைத் தீர்த்து வைக்கவும், நிலங்களை இனம் கண்டு கொள்ளவும் இத்திட்டம் உதவுகிறது. மேலும், நாட்டின் மக்களுக்குள் ஏழ்மை நிலையிலுள்ள பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாக்க, இம்முறை உத்தரவாதம் செய்கிறது.

நிலச் சீர்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழே தரப்படுகின்றன:

1. வேளாண்மைக்கு உரிய அமைப்பின் விளைவாக எழும் விவசாய உற்பத்திப்

பெருக்கத்துக்கு ஏற்படும் தடையை நீக்குதல்.

2. விவசாய நிலத்தின் உரிமையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், சமூக அநீதிகள் போன்றவற்றிற்கான அடிப்படைகளை நீக்குதல்.

3. பயிரிடுவோரின் உரிமைக் காலப் பாதுகாப்பை நிர்ணயித்தல்; சுயமாகப் பயிரிடுவதற்கு நிலத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கும் பயிரிடுவோருக்கு உரிமையை மாற்றம் செய்து கொடுப்பதற்கும் உரிய விதிமுறைகளை முறைப்படுத்தல்.

பின்னால் திருத்தி அமைக்கப்பட்டபடி, 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலப் பதிவுருக்கள் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டப்படி, நிர்ணயிக்கப்பட்ட 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும், தன்னுடைய நிலங்களின் பரப்பளவைக் காட்டும் பட்டியல் தரவேண்டும். அவரது வாக்குமூலத்தின் துல்லியத்தைச் சரிபார்க்கவும், மேற்குறித்த அறிக்கையைத் தரத் தவறிய நபர்களைக் கண்டு பிடிக்கவும், உச்ச வரம்பை மீறிய கைப்பற்றைத் தடுக்கவும், சரியானதும் இன்றைய நிலையைப் பிரதிபலிப்பதுமான நிலப்பதிவுருக்கள் தேவையாகின்றன.

கிராமப்புற மக்களுக்கு — குறிப்பாக, நாட்டின் நலிந்த பிரிவினருக்கு, நிலப்பதிவுருக்கள் மற்றும் நிலப் பதிவுகள் இன்றைய நிலையைப் பிரதிபலிக்கும் முறை மிகவும் பயன்தரத் தக்கது. ஏனென்றால் அவர்கள் தங்களுடைய நில சொத்துரிமைகளைப் பத்திரங்களாக்கவோ, பின்னால் பதிவு செய்து கொள்ளவோ இயலாத நிலையில் இருப்பதால், அவர்கள் தங்கள் அனுபோகத்தையும் சொந்தத்தையும் நிரூபிப்பதற்கு இப்பதிவுருக்களையும், பதிவுகளையும் பெரும்பாலும் நம்பியிருக்கிறார்கள். சொல்லப்போனால், அவர்களுடைய சொந்தத்தையும் உடைமையையும் விளக்குவதற்குச் சிட்டா, நில வரித்திட்டப் பதிவேடு ஆகிய நிலப் பதிவுகள் தாம் சான்றுகளாக உள்ளன.

நடைமுறையில், தனி நபர் நடவடிக்கைகளான தானம், பரிவர்த்தனம், வாரிசுரிமை, வழியுரிமை முதலிய பல்வேறு காரணங்களாலோ, அரசுத் தரப்பில் நில ஒப்படை மற்றும் நிலக் கைப்பற்று ஆகியவற்றின் விளைவாக தரமாறுபாடுகளாலோ, ஏற்படும் உரிமை மாற்றங்கள் மிகுந்த தாமதத்திற்குப் பிறகு அல்லது குறைபாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டு, அதன் காரணமாகச் சில தவறுகள் நேர்ந்து விடுகின்றன. இந்த நிலை எங்கும் காணப்படுகிறது.

உட்பிரிவுகளிலும், பதிவு மாற்றங்களிலும் குவிந்து விட்ட நிலுவையினங்களை முடிப்பதற்காக 1.6.1979 முதல் தமிழ்நாட்டில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

**நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் தேவை**

முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுநில அளவை மற்றும் மறு நிலவரித் திட்டம் மேற்கொள்ளுதல் என்ற கொள்கை, அரசினரால் 1937-இல் தமிழ்நாட்டில் கைவிடப்பட்டது. இதன் விளைவாக, 'ரயத்துவாரி' கிராமங்களுக்கு நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட நிலவரித் திட்ட ஆவணங்கள், புல அளவைச் சுவடிகள் மற்றும் கிராமப் படங்கள் ஆகியவை வழக்கிழந்தவை ஆயின. விற்பனை, வழியுரிமை முதலியவற்றால் ஏற்பட்ட பதிவு மாற்றங்களின் விளைவான கணக்கில்லாத உட்பிரிவுகள் ஏதோ ஒரு காரணத்தினால் நில வரித் திட்டப் பதிவுருக்களில் சரிவர மேற்கொள்ளப்படவில்லை. மேலும், புலஅளவுச் சுவடிகள், நிலவரித் திட்டப் பதிவுருக்கள், கிராமப்படங்கள் போன்ற அடிப்படைக் கிராம ஆவணங்கள், பெரும்பான்மையான கிராமங்களில் அன்றாடத் தேவைக்குப் பயன்படுத்த இயலாத நிலையில் மிகவும் கிழிந்தும் மோசமான நிலையிலும் உள்ளன. பதிவுகளில் உள்ள குறைபாடுகளின்



சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற இலவச மனைப்பட்டா வழங்கு விழாவில்.

காரணமாக, தங்கள் நிலங்களை மேம்படுத்துவதற்காக நிதி உதவும் நிறுவனங்களில் இருந்து கடன் பெறுவதில் தவிர்க்கக் கூடிய சங்கடங்களுக்கும் செலவினங்களுக்கும் குடியானவர்கள் ஆட்பட்டுள்ளார்கள். ஆகவே தான், பதிவுகளை இன்றைய நிலைக்கு ஒத்திருக்கும்படி செய்து நிலவரித் திட்டப் பதிவுரு, புல அளவுச் சுவடி மற்றும் சிட்டா ஆகியவற்றைப் புதியதாகத் தயாரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**திட்டம் செயல்படுத்தப்படும் இடங்கள்**

அண்மையில் மறுநில அளவை மேற்கொள்ளப்பட்ட கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி 12 மாவட்டங்களில் சுமார் 30,000 ச.மைல்கள் (80,000 ச. கி.மீ) பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 1.6.1979 முதல் 12 மாவட்டங்களில் உள்ள 30 வட்டங்களில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

இந்தப் பணி முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டம் சமூகப் பொருளாதார ஊரக வளர்ச்சிக்கு அடிப்படையானதாகவும், கிராம அளவில் போதுமான வேலை வாய்ப்புகளைத் தருவதாகவும் உள்ளதால் 2-3 ஆண்டுக் காலங்களில் இத்திட்டத்தை முடிக்கும் வகையில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட அலகுகள் உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டுமென்று கருதினார்கள். இதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் வெற்றி, நில உடைமையாளர்கள் இதில் ஈடுபட்டுள்ள நிலஅளவை, வருவாய்த் துறை அலுவலர்களுக்குத் தங்களுடைய உரிமை, அனுபோக விவரங்களைச்சரியாகக் கொடுப்பதில்தான் இருக்கிறது.

ஆகவே, பெரும் செலவில் விரிவான முறையில் செயல்படும் இத்திட்டத்தின் பயன்களை முழுமையாகப் பெற விவசாயப் பெருங்குடி மக்கள் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கோரப்படுகிறது.

***********************

**உலகம் சுருங்கி வருகிறது: உலக நாடுகள் நெருங்கி வருகின்றன**

**—பேரறிஞர் அண்ணா**

1.5.1982 ல் உள்ளபடி நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணியின் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

1. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின்படி கீழ் வரும் மொத்தப் பரப்பு — 80,000 ச.கி.மீ.
2. (அ) முதல் கட்டமாக, 30 வட்டங்களில் நில உடைமைப் பதிவேடு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. — 3,340

   (ஆ) திட்டத்தின் முதல் கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்பு — 24,652,55 ச.கி.மீ.
3. புல அளவைப் பணிமுடிக்கப்பட்டகிராமங்களின் மொத்த எண்ணிக்கை — 1,420
4. இனம் 3-இன் கீழ் பணி முடிந்த நிலப்பரப்பு — 8,602.66 ச.கி.மீ.
5. துணிக்கையிடப்பட்ட கற்களின் மொத்த எண்ணிக்கை — 16,72,488
6. அளந்து முடிக்கப்பட்ட மொத்த உட்பிரிவுகள் — 12,07,877
7. புதுப்பிக்கப்பட்ட கற்களின் மொத்த எண்ணிக்கை — 7,13.062
8. பதிய பெற்ற ஆக்கிரமிப்புகளின் மொத்த எண்ணிக்கை — 49,415 இனங்கள்
9. அளக்கப்பட்ட தல விவரக் குறியீடுகளின் மொத்த எண்ணிக்கை — 1,52,080
10. அறிக்கைப்படி, வழக்குகளுக்கு உட்பட்ட மொத்த இனங்கள் — 3,963 இனங்கள்
11. தூய கணக்குகள் வட்டாட்சியர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கிராமங்களின் மொத்தஎண்ணிக்கை — 855 கிராமங்கள்
12. பிரிவு 13-இன் கீழ் இறுதி அறிக்கை வெளியிடப் பெற்ற கிராமங்களின் மொத்த எண்ணிக்கை — 632 கிராமங்கள்

| | தனிப் பட்டா | கூட்டுப் பட்டா | மொத்தம் |
|---|---|---|---|
| 13. நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்துக்கு முன் வழங்கப்பட்டிருந்த பட்டாக்களின் விவரங்கள் | 2,06,885 | 1,37,374 | 3,44,259 |
| 14. நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்வழங்கப்பட்டபட்டாக்களின் விவரங்கள் | 3,04,340 | 1,11,718 | 4,16,058 |

15. பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை — 6,68,681



# சமூக நலக்காடுகள் வளர்ப்பு

மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கின்படி 48.3 மில்லியன் ஆகும். மொத்த நிலப்பரப்பில் 95 விழுக்காடு கிராமப்புறங்களில் உள்ளன. சுமார் 70 விழுக்காடு மக்கள், 15,735 கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். செம்மண், கருமண், ஆற்றுமண் ஆகிய மண்வகைகள் காணப்படுகின்றன. சராசரியாக ஆண்டுக்கு 945 மில்லிமீட்டர் மழை அளவாம். அக்டோபர்-நவம்பர் மாதங்களில் சராசரியாக 945 மி.மீ. மழை கிடைக்கிறது. மொத்த நிலப்பரப்பில் சுமார் 58 விழுக்காடு அதாவது 7.45 மில்லியன் எக்டரில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பரப்பில் 1.2 மில்லியன் எக்டரில்தான் பருவமழையையும், தண்ணீர் வசதியையும் பொறுத்து இரண்டாவது போகம் பயிரிடப்படுகிறது. 3.4 -மில்லியன் எக்டர் நிலப்பரப்பில் விவ்சாயம் மழையை நம்பித்தான் நடை பெறுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 38,297 குளங்களும் 19 நீர்த்தேக்கங்களும் 11,500 கிலோ மீட்டர் நீள்முடைய கால்வாய்க்ள், பயிர்ப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

மொத்த மாநில நிலப்பரப்பில் 16.7 விழுக்காடு அதாவது 21,73,726 எக்டர் நிலப்பரப்பு தான் வனங்களின் கீழ் உள்ளது. இப்பரப்பில் காடுகள் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவாகவே உள்ளன.

1959-60-ஆம் ஆண்டில் மக்களின் எரிபொருள் தேவை, சிறு மரங்கள் தேவை மற்றும் காடுகளின் வளத்தைப் பெருக்குதல் போன்ற பல நோக்குகளுடன்வனப்பண்ணைத் தோட்டங்கள் எழுப்பும் திட்டம் ஒன்று நடைமுறையாக மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டம் பல வகைகளில் கிராமநலக் காடுகள், வனவிரிவாக்கத் திட்டம், சமூகநலக் காடுகள் என்ற பெயரில் எஞ்சிய மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டது. காப்புக் காடுகளுக்கு வெளியே, சென்ற ஆண்டு வரை சுமார் 1.99 இலட்சம் எக்டர் பரப்பில் மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த மொத்தப் பரப்பளவில் 1980-81 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் 66,000 எக்டர் பரப்பில் மரங்கள் நடப்பட்டுள்ளன. முக்கியமான குளப்படுகைகளில் அதிகமாகத் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அதாவது, இத்திட்டம் செயலாக்கப்பட்ட முதல் இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட சாதனையின் பாதி அளவு கடந்த இரு ஆண்டுகளிடையே எய்தப்பட்டுள்ளது. இயற்கைக் காடுகள் அழிந்து வருவதைத் தடுப்பதன் பொருட்டு விறகுக் கூப்புகள் வெட்டுதல் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதற்குப்பதிலாக காப்புக்காடுகளுக்கு வெளியே எழுப்பிய தோட்டங்களிலிருந்து விறகும் மரமும் வெட்டப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் ஊராட்சிகளுடன் சமமாகப் பங்கீடு செய்யப்படுகிறது.



நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எரி பொருள் தேவைக்கு காடுகளுக்கு வெளியே மரங்கள் வளர்க்கும் திட்டத்தைப் பெருமள வில் விரிவுபடுத்தினாலன்றி எதிர்காலத்தில் பெருத்த எரிபொருள்பற்றாக்குறை ஏற்படும் நெருக்கடியைத் தடுக்க இயலாது. 1980-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் விறகுத்தேவை 10.1 மில்லியன் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இத்துறையின் மூலம் கிடைக்கும் விறகோ 0.1 மில்லியன் டன் தான். வருகிற

2000 ஆண்டில் தமிழ்நாட்டில் மக்களின் தொகைசுமார் 6.4 மில்லியனாகப் பெருகும் எனவும்அவர்களின் விறகுதேவை சுமார் 12.5 மில்லியன் டன் எனவும் கணக்கிடப்படுகிறது. துறையின் மூலம் வெட்டப்பட்டு கொடுக்கப்ப டும் விறகினை கணக்கிட்டால் சுமார்0.3மில்லி யன் டன் தான் ஆகும். தற்போதைய பெரு மளவு விறகுத் தேவை தனியார் நிலங்களி லிருந்தும் பூர்த்தி செய்யப்பட்டு வரப்படுகின் றது. அண்டை மாநிலங்களிலிருந்தும் ஓரளவு பெறப்பட்டு வரப்படுகின்றது. காப்புக் காடு களில் உள்ள மரத் தோட்டங்களிலிருந்து தொழிற்சாலைக்குவேண்டியமூலப்பொருட்கள் மட்டுமே கொடுக்க இயலும். எரிபொருள் நியாய விலையில் கிடைக்காமல் மக்களுக்கு ஏற்படும் இன்னல்-கிராமங்களிலும் நகரங்களி லும் பெண்களும், குழந்தைகளும் விறகு சேக ரிப்பதில் அவர்களது பொன்னான நேரம் வீணாக்கப்படுவது, இவற்றையெல்லாம் தவிர்க்கும் பொருட்டு, வனத்துறை மூலம் மட்டும் மரங்கள் வளர்த்தால் போதாது என உணர்ந்து, பெருமளவில் மக்கள் அவர வர்கள் சொந்த நிலங்களிலும், கிராமத் தைச் சார்ந்த நிலங்களிலும் மரங்கள்வளர்த்து பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் இடங்களில் சமூகநலக்காடுகள் திட்டத்தின்கீழ் மரங்கள் வளர்க்க வாய்ப்பிருப்பதாக 1977-ஆம் ஆண் டில் எடுத்த ஒரு கணக்கு எடுப்பைக் கொண்டு, அனுமானிக்கப்படுகிறது.

1. விவசாயம் செய்யத் தகுதியற்ற தரிசு நிலங்கள் (எக்டர் 6,23,520)
2. மேய்ச்சல் புல்வெளி (எக்டர் 1,78,604)
3. குளக்கரை (எக்டர் 5,57,950)
4. கால்வாய்க்கரையோரங்கள் (கி.மீ. 15,854)
5. சாலையோரங்கள் (கி.மீ. 1,00,650
6. இருப்புப்பாதை ஓரங்கள் (கி.மீ. 3,814)

சமூக வனங்களை வளர்க்கும் திட்டத்தை தீவிரப்படுத்துவதற்கும் சமுதாய நிலங்கள், கால்வாய் ஓரங்கள், சாலையோரம், மலை தரிசு நிலங்கள் ஆகிய இடங்களில் பெருமள வில் மரங்கள் வளர்க்க வாய்ப்பிருப்பதை உணர்ந்து இந்திய அரசு மூலம், ஸ்வீடன், நாட்டு மேம்பாட்டுக் கழக உதவியுடன் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தமிழக அரசு 1981-82-ஆம் ஆண்டி லிருந்து ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 45 கோடி செலவிட உத்தேசித்துள்ளது. ஏற்கெனவே, 1981-82-ல் ரூ. 418.27 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டில் ரூ.794 இலட்சம் செலவு செய்து 43,000 எக்டர் பரப்பில் மரங்கள் வளர்க்கவும் சுமார் ஒரு கோடி மரக் கன்றுகள் மக்களுக்குக் கொடுத்து அவர்களின் மரங்கள் வளர்க்கும் பணியினை ஊக்குவிக்கவும் திட்டம் இடப்பட்டுள்ளது. சுமார் 34.75 இலட்சம் செடிகள் விலை யின்றியே மக்களுக்கு வழங்க முடிவு செய்யப் பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

சமூக வனக்காடுகள் வளர்ப்புத் திட் டத்தில் தற்சமயம் முக்கிய குறிகோள்கள்

சமூக வன வளத் திட்டத்திற்கு நிதி உதவி அளித்த சுவீடன் நாட்டுப் பிரதமர் சென்னைக்கு (13.2.82) வருகை புரிந்த போது.



யாதெனில் கிராம ஏழை மக்களுக்குத் தேவையான விறகு, விவசாயக் கருவிகளுக்கு வேண்டிய சிறு மரங்கள் கிராமக் கைத்தொழிலுக்கு குடிசைத் தொழிலுக்கு வேண்டிய மரப் பொருள்கள், மாட்டுத் தீவனத்தழை வேண்டியவற்றைத் தரும் மரத்தோட்டங்களை மக்களின் உதவியுடனும் உழைப்புடனும் வளர்த்தல் ஆகும்.

குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டம் கீழ்வரும் முக்கிய குறிக்கோள்களைக் கொண்டதாகும்.

1. கிராமப்புற மக்களை அவர்களது சொந்த நிலங்களில் மரங்கள் வளர்க்க ஊக்குவித்தல்.

2. கிராமப்புற மக்களின் தேவைக்கென விறகு மரங்கள், சில மரங்கள், தீவனம்மற்றும் பழமரங்கள் வளர்த்தல்.

3. குளப்படுகை, புறம்போக்கு நிலம், சாலையோரம் மற்றும் கால்வாய்க்கரை ஓரங்கள், தனியாரின் வேளாண்மைக்குத் தரம் குன்றிய-உபயோகமற்ற இடங்களில் மரங்களை வளர்த்து சுற்றுப்புறச் சூழ்நிலையைத் தூய்மைப்படுத்தல்.

4. மேற்கூறிய மரங்களிலிருந்துகிடைக்கவிருக்கும் விறகு மற்றும் விளைபொருளைக் கிராமங்கள் பெறுமாறு செய்தல்.

5. மரம் வளர்க்கும் பணியில் கிராமப் புறச் சமூகத்தினர்—பெண்கள், குழந்தைகள் உட்பட மற்றும் பஞ்சாயத்தினை விருப்பத் துடன் ஈடுபடச் செய்தல்.

6. பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள், நிலமற்றவர்கள், ஏழை எளியுவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பு அளித்து அவர்கள் வருமானத்தைப் பெருக்கிக் கிராமங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.



மரங்கள் வளர்க்கும் திட்டமல்லாது ஆராய்ச்சி, கல்வி, விரிவு மற்றும் சமூகமற்றும் தொழில் நுட்பக்கலைகளை வளர்க்கவும் இத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற் கூறிய பிரிவு திட்டங்களைப் பற்றி விரிவான விவரங்கள் பின்வரும் பத்திகளில் குறிப்பிடப் பட்டுள்ளன. மரங்கள் வளர்ப்பு ஊக்குவிக்கும் திட்டம் : இத்திட்ட காலத்தில் 5 ஆண்டுகளுக்கு விறகு மரங்கள், சிறு மரங்கள், மாட்டுத் தீவனம் மற்றும் பழம் தரும் மரங்கள் உட்பட 500 மரக்கன்றுகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்கப்படும். பழம் தரும் மரங்கள் ஒரு மரமாவது ஒருவீட்டிற்குத்தரப்

இத்திட்டத்தின்படி 1981-82-லிருந்து ஐந்து ஆண்டுகளில் செய்யவிருக்கும் பணிகள் கீழே கட்டமிட்டுக்காண்பிக்கப்பட்டுள்ளன:

| பிரிவின் பெயர் | இலக்கு |
|---|---|
| 1. மரங்கள் வளர்த்தல் ''ஊக்குவிப்புத் திட்டம்'' | ஆண்டொன்றுக்கு 20,000 குடும்பங்கள் என்ற கணக்கில் 126 லட்சம் நாற்றுக்களை 1,00,000 குடும்பங்களுக்கு வழங்குதல். |
| 2. சமநில புறம்போக்கு மற்றும் குன்றுகளிலும் மரங்கள் வளர்த்தல் | 14,700 எக்டர் சமநிலங்களிலும் 24,500 எக்டர் குன்றுகளிலும் மரத் தோட்டம் எழுப்புதல். |
| 3. ஏரி, குளப்படுகைகளில் மரத் தோட்டங்கள் எழுப்புதல். | 1,32,000 எக்டர் |
| 4. தொடர் வரிசைத்தோட்டம் (சாலையோரம், கால்வாய் ஓரம், ரயில்பாதையோரம்) | 6,075 கிலோ மீட்டர் தொடர் வரிசை. தோட்டம் |
| 5. மரங்கள் வளர்த்தல் ''விரிவுத்திட்டம்'' | தனி விவசாயிகளுக்கும் மற்றவருக்கும் அடக்க விலைக்கு 375 இலட்சம் நாற்றுக்கள் கொடுத்தல். |
| 6. மாட்டுத் தீவனத் தோட்டங்கள் வளர்த்தல். | 5,250 எக்டர். |

படும். மக்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு ஊக்கப்பணம் வளர்க்கப்பட இருக்கும் மரங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து முதலாண்டு முடிவிலும், இரண்டாமாண்டு முடிவிலும் கீழ்கண்டவாறு வழங்கப்படும்.

| உயிர்ச் செடிகளின் எண்ணிக்கை | ஒருசெடி வைக்கப் பணத்தின் அளவு | மொத்த தொகை |
|---|---|---|
| 1—10 | 1.00 | 10.00 |
| 11—30 | 0.50 | 10.00 |
| 31—100 | 0.25 | 17.50 |
| 101—500 | 0.10 | 40.00 |
| | | 77.50 |

ஒரு குடும்பத்தில் பெற்ற 500 செடிகளும் நன்கு வளர்க்கப்பட்டிருந்தால் கீழ்க்கண்ட அளவில் பணம் வழங்கப்படும்.

| முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மொத்தம் |
|---|---|---|
| ரூபாய் 77.50 | ரூபாய் 77.50 | ரூபாய் 155.00 |

இந்தத் திட்டகாலத்தில் அதாவது ஐந்தாண்டுக் காலத்தில் 0.1 மில்லியன் குடும்பங்கள் (ஒவ்வொரு ஆண்டும் 20,000 குடும்பங்கள் வீதமாக) பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புறம்போக்குச் சமவெளிகளிலும் மலைகளிலும் மரங்கள் வளர்த்தல் :**

இத்திட்ட காலத்தில் 14,700 எக்டர் புறம்போக்கு சம நிலங்களில் முக்கியமாக தைல (யூகலிப்டஸ்) மர வகைகள் வளர்க்கப்படும். இது தவிர சவுக்கு, பரம்பை கொடைவேலன், வேப்பமரம் முதலிய இதர மரங்களும் மண்வளத்திற்கேற்ப வளர்க்கப்படும். மேலும், நீலகிரித்தைல மரங்களுடன் சூபாபுல் (கே. 8 ஓ. கே. 28) மரங்களையும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 100 எக்டரில் தக்க வளம் வாய்ந்த இடங்களில் வளர்க்கப்படும். மரங்களுக்கிடையில் மேய்ச்சல் புல்லும் செடிகளும் வளர்க்கப்படும். மலைப்புறம்போக்குகளில் ஓடை, பரம்பை போன்ற மர வகைகள், வேப்பமரம் மற்றும் செம்மரங்களுடன் சேர்ந்து பயிரிடப்படும். மண் அரிப்பினைத் தடுக்க மண்வளப் பாதுகாப்பு வேலையும், தோட்டங்கள் எழுப்பும் வேலையும் செய்யப்படும்.

**கண்மாய்த்தோட்டங்கள் :**

பொதுப்பணித்துறை, பஞ்சாயத்தைச் சார்ந்த குளப் படுகைகளில் மரம் வளர்க்கும் திட்டம் இதில் ஒரு முக்கியப் பிரிவாகவும், கருவேல மரங்கள் அதிகமாக நடப்படும். உவர்ப்பு நிலங்களில் வெவ்வேலன் மரங்கள் வளர்க்கப்படும். மூங்கிலும் சவுக்கும் தகுந்த இடங்களில் பயிரிடப்படும். இப்பிரிவின் கீழ் சுமார் 1,32,000 எக்டர் பரப்பில் மரங்கள் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஓராண்டிற்கு 1,000 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அக்கிராமங்களில் மரங்கள் நடும் திட்டம் செயலாற்றப்படும். எரிபொருள் மரம், சிறுமரம் முதலியவைகளை வளர்த்து கிராம மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வது இப்பிரிவின் நோக்கமாகும். இத்தோட்டங்களில் இடைவெளி விட்டு மரங்களில்கிளைகளைக் கழிப்பது அடர்த்தி குறைப்பது ஆகியவைகளில் கிடைக்கக் கூடிய மிலாறு மற்றும் விறகுகளை கிராம மக்களுக்கு நியாயமான முறையில் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

சாலையோரம், கால்வாய்க் கரையோரம், இருப்புப்பாதை ஓரங்களில் தொடர்வரிசைத் தோட்டங்கள் தகுந்த மர வகைகளைக்



கொண்டு எழுப்பப்படும். இதன் இலக்கு 5 ஆண்டிற்கு 6075 கிலோ மீட்டர்.

**மரத் தோட்டங்கள் ''வனவிரிவாக்கத் திட்டம்:**

ஊக்குவிப்புத் திட்டம் எப்படி ஏழை எளியவர்களை ஊக்குவிப்பதற்காகச் செயலாற்றப்படுகின்றதோ அதுபோல் இத்திட்டம் நிறைய நிலங்கள் வைத்திருப்பவர்களுக்காகத் தீட்டப்பட்டுள்ளது. இப்பிரிவின் கீழ் மரக்கன்றுகள் பழவகை மரங்கள் உட்பட அடக்க விலையில் இவர்களுக்கு வழங்கப்படும். 37.5 மில்லியன் நாற்றுகள் இப்பிரிவின் கீழ் இத்திட்டகாலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும்.

**மாட்டுத்தீவனத் தோட்டங்கள் :**

மாட்டுத் தீவன புல் வகைகளையும், தீவனத் தழை உரத் தழை மர வகைகளையும் வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். கொழுக்கட்டைப்புல், கொளிஞ்சி போன்ற புல் வகைகள், மயில் கொன்றை, பொன்னவரை, வாத நாராயணை போன்ற மர வகைகளும் வளர்க்கப்படும். இயன்ற அளவுக்கு மாட்டுத் தீவனத் தழையையும் புல்லையும் கிராமங்களில் கிடைக்கச் செய்வதற்கான இத்திட்டத்தின் ஐந்தாண்டுக்காலத்திற்கான இலக்கு 5250 எக்டர்.

**தேவை மற்றும் வருவாயைப் பகிர்தல் :**

இந்நாள்வரை மரங்கள் ஒப்பந்ததாரர் மூலமாக வெட்டப்பட்டு அவை நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்கப்பட்டது. பஞ்சாயத்து நிலங்களில் எழுப்பப்பட்டுள்ள தோட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் 50 விழுக்காடு அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது மக்களுக்குத் தேவையான எரிபொருள், மரங்கள், சிறுமரங்கள் முதலியவைகளை அளவுடன் இரண்டாவது ஆண்டு முடி

விலிருந்து கிடைக்கும் வழியில் மரங்கள் வளர்க்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தோட்டங்கள் வளர்க்கப்படும் நிலங்கள் பஞ்சாயத்துக்கு சொந்தமான தானாலும்சரி, இதர பொதுப் பணித்துறை அல்லது மாநில நெடுஞ்சாலைத் துறையினர் போன்ற பஞ்சாயத்து நிலங்களல்லாத வேறு நிலங்களானாலும் சரி கிடைக்கும் வருவாயில் பாதித் தொகையை பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கப்படும். சமூகநலத் திட்டத்தின் கீழ் பங்கு பெறும் பஞ்சாயத்துக்களுக்கு இது ஒரு கூடுதல் ஊக்கத்தொகை ஆகும்.

இதுகாறும் வனத்துறையினர் பல்வேறு சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களில் மரங்கள் வளர்ப்புப் பணியினைத் திறம்பட செயல்படுத்தினாலும் அதில் மக்களின் ஈடுபாடு அவ்வளவு இல்லை. கிராமப்புற சமுதாயத்தைத் தற்பொழுது இத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபடுத்தவும், அவரவர் தேவைக்கான மரங்களை அவரவர்களே வளர்த்துக் கொள்ளும் பொருட்டும், மக்களின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுத்தும் பொருட்டும் கிராம மக்களைக் கொண்ட சமூக வனக் குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கிராம சமூக வனக்குழுவின் ஆலோசனையின் படி இடத்தேர்வு, பயிரிடப்படும் மரவகைத் தேர்வு முதலிய செயல்கள் வனத்துறையின் சமூகநலக் காடுகள் பிரிவு செய்யும். இத்திட்டம் செயல்படும் ஒவ்வொரு கிராமத்திலும் எழுப்பப்பட்ட செடிகளைப் பாதுகாக்க ஒரு கிராம சமூக வனப் பணியாளர் நியமிக்கப்படுவார். அந்தந்த கிராமத்தில் உள்ள தகுதி வாய்ந்தவர்களே நியமிக்கப்படுவர். இக்கிராம சமூக வன ஊழியருக்குத் தக்க பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாக ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு கருத்தரங்கு நடத்தி திட்டம் செயல்படும் விதத்தையும், திட்ட குறிக்கோள்கள் பெருமளவில் கிராமப்புற மக்களுக்குச் சென்றடைகின்றதா என்பது பற்றி முடிவெடுத்து மாறுபாடுகள் செய்து அமல்படுத்தப்படும்.

சமூகக் காடுகள் திட்டத்தின் சிறப்பு இயல்புகளைச் செயல்படுத்தும் பொருட்டு வனத்துறையின் சமூகநலக்காடுகள் பிரிவினருக்குக் கிராமநல சமூக இயல்புகளைப் பற்றி ஆலோசனை கூறவும், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது அதன் சமூக பயனை அவ்வப்போது ஆராய்ந்து அறிந்து முன்னேற்ற மற்றும் ஈடுகாட்டும் திறன் தேவைப்படுகிறது. திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் இதர வேலை செய்கைகள் வனத் துறையினால் செய்யப்படும். சிக்கன விஷயங்களைச் செயல்படுத்த, கிராமங்களில் சமூக பொருளாதார நிலையை ஆராய்ந்து அறியும் திறன் உள்ள தனியார் நிறுவனங்களைக் கொண்ட ''சமூகநலக் காடுகள் ஆலோசனைக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு :

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதின் மூலம் திட்ட காலமான 5 ஆண்டுகளில் சுமார் 390 இலட்சம் மனித சக்தி நாட்கள் அளவுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இதில் ஆதிதிராவிட மக்களும் பின் தங்கியவர்களும் மிக்க பயனடைவர். இந்நடவடிக்கைகளால் கிராம மக்களின் வருவாய் பெருகுவதுடன் அதன் மூலம் கிராமப்புறப் பொருளாதாரமும் குறிப்பிட்ட அளவில் மேம்படும்.

இது தவிர, வேளாண்மை மறு நிதி மற்றும் அபிவிருத்திக் கழகம், வங்கிகள் ஆகியவற்றின் உதவியுடன் தனியார் நிலங்களில் ஹைபிரிட் தைல மரங்கள், முந்திரி, சவுக்கு, கருவேல் ஆகியவற்றை வளர்ப்பது ஊக்குவிக்கப்படும். ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தின் கீழ் தக்க உதவிகளும் அளிக்கப்படும். மேலும், தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊரக, ஒன்றிய சாலைகளின் இருமருங்கும் மரங்கள் நடப்படும்; ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆதித் திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் மரங்கள் நட்டு வளர்க்கப்படும்.

சமூகவனத் திட்டம் ஒரு கிராம மேம்பாட்டுத் திட்டம். கிராம மக்களின் எரிபொருள் தேவையை நிறைவு செய்வது மட்டுமல்லாது, ஊரக வேலைவாய்ப்புக்களையும் இது பெருமளவு அதிகரிக்கும். இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் புதுமையான மற்றும் மாறுபட்ட முறைகள் கையாளப்படவிருக்கின்றன. சமூக வனங்களை உருவாக்கி பேணிக் காப்பதில் தமிழக மக்கள் மிக்க ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்யும் பணியில் தமிழ்நாட்டு வனத் துறை முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.







மாண்புமிகு மைய சுற்றுலா அமைச்சர் திரு ஏ. பி. சர்மா அவர்கள் மாமல்லபுரத்தில் பங்கேற்ற இளைஞர் முகாம் திறப்பு விழாவில்.

# சுற்றுலா வளர்ச்சி

தமிழகத்தின் தொன்மைமிக்க வரலாற்றுச் சிறப்பிடங்களும் அழகுமிகு இயற்கை வளங்களும் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. சுற்றுலா, சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கை நிலைமைகளில் சீரிய மாறுதல்களை ஏற்படுத்துவதோடு தேசிய ஒருமைப்பாட்டையும் அனைத்து நாடுகளிடையே ஒற்றுமை உணர்வையும் உண்டாக்க உறுதுணையாக அமைகிறது. எனவே தமிழக அரசு இவைகளை உணர்ந்து சுற்றுலா வளர்ச்சிக்கெனத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

சுற்றுலா மேம்பாட்டிற்கென அரசின் நிதி ஒதுக்கீடுகளே இதற்குச் சான்றாகும். 1975-76ல் ரூ. 22.7 இலட்சமாக இருந்த நிதி ஒதுக்கீட்டை 1980-81ல் ரூ.63.22 இலட்சமாகவும் 1981-82ல் ரூ. 115.86 இலட்சமாகவும் 1982-83ல் ரூ. 140 இலட்சமாகவும் உயர்த்தியுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கென ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தினை இவ்வரசு அமலாக்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சர்வதேச மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அழகிய கடற்கரையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமுமான மாமல்லபுரத்தை அபிவிருத்தி செய்ய ரூ. 6 கோடி மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அங்கு சுமார் ரூ.40 இலட்சம் செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் துவங்கப்பெற்றுள்ளன.

இராமேசுவரத்தின் அமைப்பு ஒரு சர்வதேசச் சுற்றுலா மையமாக அமைய எல்லா வகையிலும் தகுதி பெற்றுள்ளது. எனவே இராமேசுவரத்தின் வளர்ச்சிக்கு ரூ. 28 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ள கன்னியாகுமரி மிகவும்



சிறப்பு வாய்ந்த சுற்றுலா மையமாகும். சுமார் 16 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரிக்கென ஒரு சுற்றுலாப் பெருந்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பிச்சாவரம், மண்டபம், ஏர்க்காடு, ஒகேனக்கல் ஆகிய இடங்களை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பிச்சாவரத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 17.50 இலட்சம் செலவில் குடில்கள், படகுத்துறை ஆகியவை அமைக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மண்டபத்தில் படகுத்துறை, துயிற்கூடம் ஆகியவை அமைப்பதற்காக ரூ. 5.30 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒகேனக்கல்லில் காவேரிக்குக் குறுக்கே நடைபாலம் ஒன்று அமைக்க, கடந்த ஆண்டு ரூ.7.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்காக மாவட்டத்திற்கு இரண்டெனச் சுற்றுலா மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தின் மிக முக்கிய சுற்றுலா மையங்களிலும், ரயில் நிலையங்களிலும் 17 சுற்றுலாத் தகவல் நிலையங்களை இவ்வரசு அமைத்துள்ளது. கடந்த ஆண்டில் சென்னை விமான நிலையத்திலும், புது டெல்லியிலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. கடந்த மூன்றாண்டுகளில் சிதம்பரம் மற்றும் சென்னை நகரில் சுற்றுலா அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பணியை மேம்





முன்பெல்லாம் காசிக்குப் போகிறேன்; திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருந்த இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம் மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன் - ரஷ்யாவுக்குப் போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிறோம். நம்நாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

—பேரறிஞர் அண்ணா



படுத்த விளம்பரம் இன்றியமையாத கருவியாகும். இத்துறையின் வெளியீட்டுப் பிரிவு, கையேடுகள், சிறு வெளியீடுகள், புத்தக வடிவிலான வெளியீடுகள், வண்ணப் பட அஞ்சல் அட்டைகள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள சுற்றுலா வாய்ப்புக்களை அதிகரிக்க மாவட்டந்தோறும் நடத்தப்பெறும் அரசுப் பொருட்காட்சிகளில் சுற்லாத் துறை முக்கிய பங்கேற்கிறது.

1981-82ல் ''தென்னிந்தியாவை நோக்கி'' என்ற திட்டத்தின்கீழ் அயல்நாடுகளிலிருந்து வந்த பயண எழுத்தாளர்களுக்கும், நிழற்படம் எடுப்பவர்களுக்கும், நிழற்படத் தொகுப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள சிறப்புமிக்க சுற்றுலா இடங்களைக் கண்டு களிக்கவும் இத்துறை ஏற்பாடு செய்தது.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வர்த்தக ரீதியில் விரிவுபடுத்த வேண்டி தமிழக அரசின் நிறுவனமான சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறந்த பணிகளை ஆற்றி வருகிறது. குறைந்த கட்டணத்தில் உயர்ந்த தரத்தில் இக்கழகம் வழங்கிடும் தங்கும் வசதி மற்றும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டுமின்றி வெளிநாட்டுப் பயணிகளையும் பெரிதும் கவர்ந்துள்ளது. 1971-72ல் ரூ. 4.58 இலட்சமாக இருந்த இக்கழகத்தின் வருவாய் 1976-77ல் ரூ. 68.51 இலட்சமாகவும், 1980-81ல் ரூ. 164.51 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 223.55 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. 1982-83ல் ரூ. 308 இலட்சமாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வருவாய் உயர்வின் காரணத்தால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1-7-80 முதல் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாறியுள்ளது.

தென்னகத்தில் மிக அதிக அளவில் சுற்றுலா விடுதிகள் நடத்தும் சிறப்பு இக்கழகத்தின் தனித்தன்மையாகும். இவ்விடுதிகளின் எண்ணிக்கை 1971-72ல் 5 ஆகவும், 1976-77ல் 12 ஆகவும் 1979-80ல் 14 ஆகவும், 1980-81ல் 15 ஆகவும் 1981-82ல் 20 ஆகவும் உயர்ந்துள்ளது. ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டினையொட்டி 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், மதுரை மாநகரில் ரூ. 58 இலட்சம் செலவில் துவங்கப்பெற்ற முதல் மூன்று நட்சத்திர ஓட்டல் இக்கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். கோவையிலும் ரூ. 40 இலட்சம் செலவில் மற்றொரு மூன்று நட்சத்திர ஓட்டல் 1982ஆம் ஆண்டு மே திங்களில் மாண்புமிகு தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்டது. குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தங்கும் வசதிகள் ஏற்படுத்த, முக்கியமான சுற்றுலா மையங்களில் இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஏர்க்காட்டில் 1981ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ரூ. 4 இலட்சம் செலவில் இளைஞர் விடுதியும், 1982ஆம் ஆண்டு மே திங்களில் உதகமண்டலத்தில் ரூ. 12 இலட்சத்தில் இளைஞர் விடுதியும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ரூ. 12 இலட்சத்தில் மாமல்லபுரத்தில் இளைஞர் விடுதி, குடில்கள், கூடாரங்கள், உணவு விடுதி ஆகியவை அடங்கிய சுற்றுலாப் பயணிகள் முகாம் 1982 மே திங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மண்டபத்திலும் இராமேசுவரத்திலும், கோடைக்கானலிலும், ஒகேனக்கல்லிலும் இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டு, திறக்கும் தறுவாயிலுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள், பெருவழி ஓய்வு விடுதிகள், இளைஞர் விடுதிகள் ஆகியவற்றின் படுக்கை எண்ணிக்கை 1971-72ல் 253 ஆகவும் 1976-77ல் 818ஆகவும் 1979-80ல் 985ஆகவும் 1980-81ல் 1,059ஆகவும், 1981-82ல் 1,334 ஆகவும் உயர்ந்துள்ளது. விடுதிகளின் மூலம் வந்த வருவாய் 1975-76ல் ரூ. 14.27 இலட்சம் ஆகவும், 1979-80ல் ரூ. 30.08 இலட்சம் ஆகவும் 1980-81ல் ரூ. 46.84 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 70.04 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.

இக்கழகத்தின் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டில் மட்டுமின்றி பிற மாநிலங்களில் உள்ள சுற்றுலாச் சிறப்புப்பெற்ற இடங்களையும் கண்டு களிக்கும் வண்ணம் இந்த சுற்றுலாப் பயணத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்துகளில் பயணம் செய்தோர் எண்ணிக்கை பெருகி வருவதே இதற்குச் சான்றாகும்.

1972-73ல் பேருந்துகளின் எண்ணிக்கை 2 ஆக இருந்து 1976-77ல் 14 ஆகவும், 1980-81ல் 19 ஆகவும், 1981-82ல் 20 ஆகவும் உயர்ந்துள்ளது. மேலும் 4பேருந்துகள் இவ்வாண்டு பெறப்படவிருக்கின்றன. 1980ஆம் ஆண்டு குளிர்சாதனம் பொருந்திய பேருந்து ஒன்றும் 1981-ம் ஆண்டு குளிர் சாதனம் பொருந்திய பேருந்துகள் இரண்டும் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.






வெளிநாட்டுப் பயணிகளின் வேண்டுகோளுக்கிணங்க கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் இக்கழகம் முகவர்களை நியமித்துள்ளது. இலங்கையிலும் முகவர்களை நியமிக்க உத்தேசித்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே சுற்றுலாவிற்கென வெளிநாட்டு முகவர்களை நியமித்துள்ள முதல் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமாகும். 1975-76ல் பேருந்துகளின் மூலமாகப் பெற்ற வருவாய் ரூ. 8.7 இலட்சமாகவும், 1979-80ல் ரூ. 17.97 இலட்சமாகவும், 1980-82ல் ரூ.37.37 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 65 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்றுமொரு சிறப்பு இக்கழகம் ஆண்டுதோறும் சென்னையில் நடத்தும் சுற்றுலாப் பொருட்காட்சி ஆகும். இந்தப் பொருட்காட்சி நாட்டிலுள்ள சிறந்த சுற்றுலா இடங்களை எடுத்துக் காட்டுவதோடு மட்டுமின்றி தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் தொன்மையான பண்பாட்டினையும், கலை எழுச்சியையும் விளக்கித் தரும் வகையில் அமைந்து வருகிறது. இப்பொருட்காட்சி ஆண்டுதோறும் 25 இலட்சம் பார்வையாளர்களை ஈர்த்து வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் வசதி, சுற்றுலாப் பயணத் திட்டங்கள் அளிப்பதுடன் அவர்களின் பொழுது போக்கிற்காக படகுக் குழாம்களை உதகமண்டலத்திலும், ஏர்க்காட்டிலும் அமைத்துள்ளது. 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ரூ. 40 இலட்சம் செலவில் அமைக்ககப்பட்ட ஒலி - ஒளிக்காட்சியினை இக்கழகம் ஏற்று நடத்தி வருகிறது. மிகத் தொலைவில் உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொலை நோக்கி இல்லங்களைக் கொடைக்கானலில் இரண்டும், ஏர்க்காட்டில் ஒன்றுமாக இயக்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறப்பு, இதன் ஊழியர்களின் பணியை ஊக்குவிப்பதேயாகும். எனவே இக்கழகம் தொழிலாளர் நலனைப் பேணிப் பாதுகாக்கிறது. ஊழியர்களின் சேவை மனப்பான்மையை வளர்த்து வருகிறது. இதன் அடிப்படையில் இக்கழகம் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் 1972-73ல் ரூ. 5.37 இலட்சமாகவும், 1976-77ல் ரூ. 14.02 இலட்சமாகவும், 1979-80ல் ரூ. 26.29 இலட்சமாகவும், 1980-81ல் ரூ. 38.18 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல், உற்பத்தித் திறன் அடிப்படையில் ஊழியர்களுக்கு சிறப்பு போனஸ் அளிக்கும் திட்டம் அமலாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கென மேலும் பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டித் தமிழக அரசின் உதவியோடு செயல்படுத்தி வருகின்றது.



கோவையில் கட்டப்பட்டுள்ள ஓட்டல் தமிழ்நாடு



> **கல்விச் செல்வத்தை அளிப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் அறிவுக் கண்களைத் திறந்து வைக்கிறார்கள்.**
>
> **—பேரறிஞர் அண்ணா**

# ஆசிரியர் சமுதாயத்துக்கு அரசு நல்கிய உதவிகள்

தமிழ்நாட்டில் தற்பொழுதுள்ள 37,000 பள்ளிகளிலும் பயின்றுவரும் 94,00,000 மாணவ மாணவியரும் தரமான கல்வி பெற வேண்டுமாயின் அவற்றில் பணியாற்றி வரும் 2,70,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பெருமக்கள் மனநிறைவுடனும் ஆர்வத்துடனும் பணி செய்து வரும் சூழலை உருவாக்குவதும் இன்றியமையாத ஒன்று என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கும் இது பொருந்துவதாகும். இந்த அடிப்படையில் கடந்த சில ஆண்டுகளில் இவ்வரசு ஆசிரியர் சமுதாயத்தின் நெடுநாளைய கோரிக்கைகள் பலவற்றைப் பரிவுடன் ஆய்வு செய்து, தீர்த்து வைத்து, அவர்களுக்குப் பல்வேறு உதவிகளையும், சலுகைகளையும் நல்கி உள்ளது.

**பள்ளி ஆசிரியர் நலன், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஏற்றமை:**

தமிழகத்தில் உள்ள சுமார் 23,000 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளிலும் பணியாற்றிவந்த ஆசிரியர்கள் கடந்த பல ஆண்டுகளாகத் தங்களை அரசு ஊழியர்களாக ஆர்க வேண்டும் எனத் தொடர்ந்து கோரி வந்துள்ளனர். அக்கோரிக்கையை அரசு ஏற்று அவர்கள் அனைவரும் (ஏறத்தாழ 95,000 பேர்கள் )1.6.1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அப்பள்ளிகளில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையை ஆசிரியர் சமுதாயம் பெரிதும் வரவேற்றுள்ளது.

இடை நிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்ற இளநிலை-(ஹையர் கிரேடு) ஆசிரியர்களை அத்தகுதி பெற்றபின் அடுத்த செப்டம்பர் 1-ஆம்தேதிமுதல் உடனுக்குடன் (யாதொரு தனி ஆணையுமின்றி) இடைநிலைக்கு உயர்த்தி இடைநிலைச் சம்பளம் தரவேண்டும் என்ற நிலையான அரசாணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இளநிலை ஆசிரியர்களும், இடைநிலைத் தகுதி பெற்று இடைநிலைச் சம்பளம் பெற வகை செய்து தமிழ்நாட்டுக் கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் மூலம் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாடமுறை ஒன்றை அரசு நடத்தி வருகிறது. படிப்படியாக இளநிலை ஆசிரியர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் எட்டாம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பின்னர், இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு 1.6.1981 முதல் அவர்களுக்கு அவரவர் ஊதிய



நல்லாசிரியர் விருது வழங்கு விழா



நல்லாசிரியர் விருது வழங்கு விழா

விகிதத்தில் ஓர் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**முதல் நிலை-நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்**

முதல்நிலை (பிரைமரி) பள்ளித் தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் யாதொரு நிபந்தனையின்றிச் சிறப்பு ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

நடுநிலைப்பள்ளிகளில் இடைநிலைத் தர (செகண்டரிகிரேடு) தலைமையாசிரியராகப் பணியாற்றுபவர் பி.டி. அல்லது தமிழாசிரியர் தகுதி பெற்றால் அடுத்த செப்டம்பர் முதல் தேதியிலிருந்து பி.டி. ஆசிரியர் சம்பள விகிதத்தில் ஊதியம் பெற வகை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பதவி காலியாகும்பொழுது அந்த நிருவாகத்தின் கீழ் பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்களுள் பி.டி. தமிழாசிரியர் தகுதி பெற்றுள்ள பணி மூப்பு உடையவரை அப்பதவியில் நியமிக்கவும், அவ்வாறு தகுதி உடையவர் அந்நிருவாகத்தின் கீழ் பணி செய்து வராத பட்சத்தில் வெளியிலிருந்து தமிழாசிரியர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து பி.டி. தரத்தில் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியராக நியமித்துக் கொள்ளவும் ஆணை வெளியிடப்பட்டு உள்ளது. இப்பொழுதுதான் முதன் முதலாகத் தமிழாசிரியர்களும் நடுநிலைப்பள்ளித் தலைமையாசியர்களாக நியமனம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் பணி செய்து வரும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களின் முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிக்கு உரிய தகுதி பெற்றவர்கள் வகித்துவரும் பதவிகள் ஆண்டுக்கு ஏறத்தாழ 200 வீதம் முழுநேரப் பதவிகளாக உயர்த்தப்பட்டு வருகின்றன.

**பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் ஈட்டிய விடுப்பு நாட்கள் அதிகரிப்பு**

அனைத்து நிருவாகங்களின் கீழும் உள்ள தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப்பள்ளி முடிய அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வரும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கும் ஆண்டுக்கு ஈட்டிய விடுப்பு நாள் எண்ணிக்கையை 3-லிருந்து 10 ஆக 1982-83-லிருந்து உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

**20 ஆண்டுப் பணிக்குச் சிறப்பு நிலை**

ஆசிரியர்களில் அவரவர் நிலையில் திருப்திகரமாக 20 ஆண்டு பணியாற்றுபவர்களுக்கு (அவர்கள் தம் பதவிக்குரிய தேர்வு நிலையில் 10 ஆண்டு பணியாற்றி முடித்திராவிட்டாலும் கூட) சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1.6.81 முதல் இளநிலை, இடைநிலை மற்றும் அவற்றுக்குச் சமமான நிலை ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டு முதல், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் அதே ஊதிய விகிதத்தில் உள்ள இதர ஆசிரியர்களுக்கும் தரப்பட்டுள்ளது. ஆசிரியர் பணியின் தனித் தன்மையைக் கருதி இச்சலுகை தரப்பட்டுள்ளது.

**அரசுப் பணிகளில் ஏ. பி. சி. பிரிவுகள் இணைப்பு**

அரசுப் பள்ளிகளில் முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியிலிருந்து வந்தவர்கள் (1.4.70க்கு முன் நியமிக்கப்பட்டவர்கள்) பி. பிரிவு என்றும் மற்றவர்கள் ஏ.பிரிவு என்றும் வைக்கப்பட்டு அவ்விரு பிரி

ஒரே சீராக இல்லாதது பற்றித் தொடர்ந்து குறை தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வரசு அவ்விரு பிரிவுகளையும் நியாயமான அடிப்படையில் ஒருங்கிணைத்து 2.11.'78 அன்று ஆணையிட்டது. அவ்வாணை செல்லுபடியாகக் கூடியது என்று 1980ல் டெல்லி உச்ச நீதி மன்றமும் தீர்ப்பளித்தது. அந்த ஒருங்கிணைப்பு ஆணை தற்பொழுது செயல்படுத்தப்பட்டு இரு பிரிவினரிடையேயும் பணி நிலைமைகள் ஏறத்தாழ ஒரே சீராக்கப்பட்டுள்ளன.

அரசு ஏற்று நடத்தி வந்த நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களையும் (சி பிரிவு) அரசு ஊழியர்களாக ஒருங்கிணைக்க அரசு ஆணையிட்டு உள்ளது.

ஒவ்வொரு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளியிலும், பள்ளித் தலைமையாசிரியரும், ஒரு இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியைச் சார்ந்தவராகக் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறை அல்லாத பணிக்கான ஈட்டிய விடுப்பு வசதிகளை அவர்கள் பெறலாம்.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் துறைத் தேர்வுகளை எழுதி அவற்றில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் அவ்வாறு தேர்ச்சி பெறாதவர்கள் இரண்டாவதும் அதற்கு அடுத்த ஆண்டுக்கான ஊதிய உயர்வுகளும் பெற இயலாத நிலை இருந்தது. இந்த நிலையை மாற்றித் தகுதிகாண் பருவம் முடிப்பதற்குத் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டியதில்லை யென்றும் அவர்கள் எல்லா ஆண்டு ஊதிய உயர்வுகளும் பெற வழி செய்யும் வகையிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் துறைத் தேர்வுகளை நீக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளிகள்**

தனியார் பள்ளி ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்புக்காகவும் அவர்கள் நன்மைக்காகவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**தனியார் பள்ளிகளில் நியமன விதிகளில் கட்டுப்பாடு**

சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும்

என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை ஆதிதிராவிடர் மற்றும் மலைச் சாதியினருக்கும் 50விழுக்காடு பதவிகளைப் பிற்பட்டோருக்கும் ஒதுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளிகளில் மீண்டும் பணியில் சேர்க்க ஆணையிடப்பட்ட ஆசிரியர்களை நிருவாகங்கள் கண்டிப்பாக நியமனம் செய்வதற்கான வரன் முறைகள்:**

தனியார் பள்ளி நிருவாகங்களில் சிலவற்றால் பதவிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மேல்முறையீட்டில் பள்ளிக் கல்வி துறை அதிகாரிகள் திரும்பவும் பணியில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடும் பொழுது இந்நிருவாகங்கள் அவ்வாணையைச் செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருந்தது. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் இன்னலைக் களைந்து விதிகளைக் கண்டிப்பாக அமல்படுத்தும் நோக்கத்துடன் அப்படிப்பட்ட பள்ளிகளின் பணியாளர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வித் துறை ஆய்வு அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை அவர் பள்ளியிலிருந்து கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு அவர் பதவியோடு, சேர்த்து மாற்றிவிடவும் ஆணையிடப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் நடத்தும் தனியார் பள்ளிகள் உரிய விதிகளைப் பின்பற்றாவிட்டால் அவற்றுக்கு மானியம் தர, பள்ளிக் கல்வித்துறை மறுத்துவிடலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளிகளில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுபவர்களுக்குப் பாதுகாப்பு**

தனியார் பள்ளிகளில் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பள்ளி நிருவாகங்களால் தொல்லைப்படுத்தப்படாமல் காத்துக்கொள்ளவும், அவர்கள்மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை தற்காலிக வேலை நீக்கக் காலத்திற்குள் (பொதுவாக 2 மாதம் உரிய கல்வித்துறை அதிகாரியின் முன் அனுமதி பெற்று நீட்டித்தால் கூடுதலாக மேலும் 2 மாதம் வரை) முடிவடையும்படி பார்த்துக் கொள்ளவும் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகளுக்குத் தக்க செயல்முறைக் கட்டளைகளைப் பள்ளிக் கல்வி இயக்குநர் இட்டுள்ளார்.

**தனியார் பள்ளிச் சட்ட மறு ஆய்வுக்குழு**

தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம் 1973- மற்றும் அச்சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள் 1974 ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து திருத்தங்களை வெளியிட அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காகப் பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் வல்லுநர் குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு முன்பணங்கள் போன்றவை**

அரசுப் பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வந்த பின்வரும் சலுகைகளும் அண்மையில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன:

(அ) அரசு நிதியிலிருந்து பின்வரும் முன்பணங்களைத் தருதல்

1. விழா முன்பணம்.
2. கைத்தறி, கதர்த் துணி வாங்க முன்பணம்.
3. சைக்கிள் வாங்குவதற்கான முன்பணம்

(ஆ) சி & டி பிரிவின் கீழ்வரும் ஆசிரியர்களுள் கண்ணாடி தேவைப்படுபவர்கள் தங்கள் பணிக்காலத்தில் ஒரு முறை கண்ணாடி வாங்கும் செலவை ரூ. 40-க்கு மேற்படாமல் அரசுப் பணத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களில் சி & டி, பிரிவுகளைச்சார்ந்தவர்களுள் தேவைப்படுபவர்களுக்கு காது ஒலி வழங்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் சலுகை 1981-82ல் விரிவாக்கப்பட்டது.

**தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒரு நிருவாகத்திலிருந்து மற்றொரு நிருவாகத்திற்கு மாற்றம்**

தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒரு நிருவாகத்திலிருந்து மற்றொரு நிருவாகத்திற்குமுழுப் பணி உரிமைகளுடன் மாற்றுதலில் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**தனியார் பள்ளி குற்றேவலர் பதவிகள், அடிப்படை ஊழியர் பணியிடங்களாக உயர்வு**

தனியார் பள்ளிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணி செய்யும் குற்றேவலர் பணியிடங்களை அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் அடிப்படை ஊழியர் பணியிடங்களுக்குஈடாகஉயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

**மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்**

1978-79ல் அமலுக்கு வந்த பிளஸ் 2 கல்வியைப் பள்ளிகளில் வைக்கவேண்டும் என்று இவ்வரசு எடுத்த சீரிய முடிவின் காரணமாக மேல்நிலைப்பள்ளிக் கல்வி வசதி தமிழகத்தில் கிராமப்புறங்களுக்கெல்லாம் எளிதில் கிட்டியதோடு, பள்ளிகளில் ஏற்கெனவே பணிசெய்து வந்த ஆசிரியர்களில் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றிருந்தவர்களுள் பெரும் எண்ணிக்கையினர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியராக நியமனம் பெற்று உயர் சம்பளம் பெறவும் வழி ஏற்பட்டுள்ளது. பட்ட மேற்படிப்புத் தகுதி இல்லாதவர்களும் பலர் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து ''உட்படுத்தப் பட்ட'' ஆசிரியர்களாக மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் பெற்றனர். இவர்கள்மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு 1.7.'78-லிருந்து 5 ஆண்டுகளுக்குள் பட்ட மேற்படிப்புத் தகுதி அடைய அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இந்தத் தகுதியை அடைய அரசு சிறப்புப் பாடமுறைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளதுடன் வேறு பல உதவிகளையும்செய்து வருகிறது.

**உயர்நிலை - மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள்**

உயர்நிலை - மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கல்வி விஷயங்களை நன்கு கவனிக்க வகை செய்து அன்றாட நிருவாக விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான மாணவர் எண்ணிக்கை 750 அல்லது அதற்கு மேலுள்ள உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு பணி மூப்புள்ள ஆசிரியரை உதவித் தலைமையாசிரியராக நியமித்து அவருக்கு மாதம் ரூ. 25 படி தர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஷிப்ட்





நல்லாசிரியர் விருது வழங்கு விழா .

முறைப்படி செயல்படும் பள்ளிகளில் இரண்டாவதாக ஓர் உதவி தலைமையாசிரியரையும் நியமித்துக்கொள்ளலாம்.

**பொது (பள்ளி ஆசிரியர்கள்)**

**பள்ளி ஆசிரியர் பிள்ளைகளுக்குத் தொழிற்படிப்புப் படிக்கப் படிப்பு உதவித்தொகைகள்**

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதியிலிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குத் தொழிற்படிப்புப் படிக்க, படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள ஓய்வுபெற்ற மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப் படிப்புதவித் தொகையின் மதிப்பு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

**ஆசிரியர் சங்கங்களுக்கு அங்கீகாரம்**

ஆசிரியர் குறைகளை அவ்வப்போது அறிந்து பல்வேறு மட்டங்களில் உரிய பரிகாரம் காண்பதற்கு வகை செய்து ஆசிரியர் சங்கங்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் ஆசிரியர் சங்கங்களுக்கு அங்கீகாரம் தரப்பட்டு வருகிறது.

**மாநில – மாவட்ட ஆசிரியர் நலக் குழுக்கள்**

மாநில மட்டத்திலும் மாவட்டங்களிலும் ஆசிரியர் நலனுக்காகக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கல்லூரி ஆசிரியர்கள் நலன்:**

**பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள்**

பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்கள் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து 1977-78ல் தான் தீர்த்து வைக்கப்பட்டது. பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்கள் அரசு மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகள், சமுதாயப் பணிப்பள்ளிகள், கீழ்த்திசைப் படிப்புக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள்; சட்டக் கல்லூரிகள்; பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயிலகங்களும்; மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகிய அனைத்தின் ஆசிரியர்களுக்கும் 1.1.74 முதல் அமலாக்கப்பட்டன. பணப்பயன் 1.1.1977 முதல் தரப்பட்டது. ரூ. 700-40-1100-50-1300-இபி. -50-1600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1,100 என்ற நிலையில் பேராசிரியர்களின் தொடக்கச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 1,200-1,900 என்னும் சம்பள விகிதம் தரப்பட்டது.

**பயிற்றுநர்கள் - விளக்குநர்களுக்கு உதவிப் பேராசிரியராகப் பதவி உயர்வு**

1.12.77 அன்று, மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள் (டெமான்ஸ்ரேட்டர்) பயிற்றுநர் (டியூட்டர்) ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.காம்; போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1.12.'77 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டது. அத்தேதிக்குப் பின் இந்தத் தகுதிகளை (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்டமேற்படிப்புத் தகுதியும்) பெறுபவர்களுக்கு இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியையடையும் நாள் முதல் தரப்பட்டு வருகிறது.

**10+2+3 படிப்பு முறையினால் பாதிக்கப்படாதவாறு கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு:**

10+2+3 ஆண்டு படிப்பு முறை அமலுக்கு வந்து புகுமுக வகுப்பு நீங்கியதால் கல்லூரி ஆசிரியர்கள் பாதிக்கப்படாதவாறு பணிப்பாதுகாப்புத்தரப்பட்டது.

**உதவிப் பேராசிரியர்களுள் 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்குப் பேராசிரியராகப் பதவி உயர்வு**

உதவிப் பேராசிரியர்களில் 1.4.80 நிலவரப்படி 10 ஆண்டுகள் பணி செய்து முடித்து இருந்தவர்கள் அனைவரும் ரூ, 700-40-1100-50-1300 இ.பி. -50-1600 சம்பள விகிதத்தில் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். 1.4.80க்குமுன்

**ஆ**சிரியர்கள் நிலை உயர்ந்தாலொழிய-சமுதாயத்தில் ஆசிரியர்களுக்கு நன்மதிப்புக் கிடைத்தாலொழிய-ஆசிரியர்கள் எதிர்காலச் சிற்பிகள் என்பது மக்களால் உணரப்பட்டாலொழிய, 'நாம் குழந்தைகளைப் பெறுகிறோம்; அவர்கள் உடலை வளர்க்கிறோம்; ஆனால் உள்ளத்தை வளர்க்கின்றவர்கள் ஆசிரியர்கள்தான்' என்று பெற்றோர் உணர்ந்தாலொழிய நம்முடைய கல்விக்காக நாம் எவ்வளவு பணத்தைச் செலவழித்தாலும் அதன் முழுப் பயனும் சமுதாயத்துக்குக் கிடைப்பது என்பது இயலாத காரியமாகும்.

**–பேரறிஞர் அண்ணா**

னரே 10 ஆண்டு அல்லது அதற்கு அதிகமான காலம் பணி செய்திருந்த உதவிப் பேராசிரியர்கள் அன்றைய தேதியில் ரூ. 1100க்கு குறைவாகச் சம்பளம் பெற்று வந்தார்களானால் அவர்கள் சம்பளம் அந்நாள் முதல் ரூ. 1100 ஆக நிர்ணயிக்கப்பட்டது. அவர்கள் உதவிப் பேராசிரியர் பதவியில் பணி செய்த காலம் என்னவாயிருந்தாலும் சரி. பேராசிரியர்களாக உயர்த்தப்பட்ட பின்னரும் அவர்கள் உதவிப் பேராசிரியர்களாக இருக்கும்பொழுது விரிவுரையாற்றிய மணி நேர அளவுக்கே பணி நேரம் இருக்கும். இனிமேல் 10 ஆண்டு உதவிப் பேராசிரியராகப் பணி செய்து முடித்தவர்கள் மட்டுமே பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவர். உதவிப் பேராசிரியர்கள் இவ்வாறு பேராசிரியர்களாவதால் ஒரே துறையில் பல பேராசிரியர்கள் இருக்கும் நிலை ஏற்பட்டால் அவர்களுள் பணி மூப்பு மற்றும் தகுதி இரண்டின் அடிப்படையில் துறைத் தலைவர் நியமிக்கப்படுவார்.

### தனியார் கல்லூரி ஆசிரியர்கள் நலன்

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு முழுமையாகவும் காலத் தாழ்வின்றியும் சம்பளம் கிடைக்கச் செய்ய வகை செய்து அக்கல்லூரிகளின் சம்பளச் செலவில் நிகரப் பற்றாக் குறை முழுவதையும் அரசே ஏற்றுச் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாகப் பட்டுவாடாச் செய்யும் முறை அமலாக்கப்பட்டுள்ளது.

பின்வரும் நன்மைகளும் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளன.

(1) பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்துவிட்டால் அவர் குடும்பத்துக்கு ரூ. 10,000 தர வகை செய்யும் 'குழு ஈட்டுறுதித் திட்டம்' 2.6.1979.

(2) அரசுக் கல்லூரிகளைப் போலவே விடுப்புச் சலுகைகள்.

(3) அரசு மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவம் செய்து கொள்ளும் சலுகை.

(4) பண்டிகை முன்பணம், வெள்ளம் போன்ற நிவாரண முன்பணம் போன்றவை வழங்குதல்.

நிருவாகம் சரிவர இல்லாத தனியார் கல்லூரிகளிலும் நிர்வாகங்களைத் தாமாகவே அரசிடம் ஒப்படைக்கும் கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்துகிறது. உதாரணமாக வேலூர் தனபாக்கியம் கிருஷ்ணசாமி கல்லூரியை தற்காலிகமாகவும், சிவகங்கை ராஜா துரைசிங்கம் கல்லூரியை நிரந்தரமாகவும் அரசு ஏற்று நடத்தி வருகிறது. இந்நடவடிக்கைகளால் சம்பந்தப்பட்ட தனியார் கல்லூரி ஆசிரியர்களும் பயனடைகின்றனர்.

உபரி ஆசிரியர்கள் ஒரு தனியார் கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிக்கு மாற்றப் பணித் திட்டத்தின் கீழ் (ரீடிப்ளாய்மெண்டு) அனுப்பப்படும்போது அங்கேயே அவர்கள் நிரந்தரமாக இருக்க விரும்பினால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஒரு கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிக்கு ''மாற்றலில்'' செல்ல சம்பந்தப்பட்ட நிருவாகங்கள் ஒப்புக் கொண்டால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.




தனியார் கல்லூரி ஆசிரியர் அல்லாதோர் தகுந்த கல்வித் தகுதியைப் பெற்றால் அவர்களையும் கல்லூரி ஆசிரியராக நியமிக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

### கல்லூரிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் நூலகர்கள் சம்பள விகிதங்கள்

கலைக் கல்லூரி உடற்பயிற்சி இயக்குநர்கள் மூன்று பிரிவினர்களையும் உடற்பயிற்சி இயக்குநர் என்ற பெயரில் ஒரே பிரிவாக்கி சம்பள விகிதம் ரூ. 700-40-1100லிருந்து ரூ. 700-40-1100-50-1300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதே போன்று சலுகைகள் கல்லூரி நூலகர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

### முதுகலைப் பட்டப் படிப்புத்துறை தலைவர்கள் பதவிகள்

முதுகலைப் பட்டப்படிப்புப் பேராசிரியர் மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புத்துறைத்தலைவர் பதவியைத் திரும்பவும் ஏற்படுத்தி ரூ. 1200-1900 ஊதிய விகிதத்தில் அவர்களுக்கு ஊதியம் தர ஆணையிடப்பட்டுள்ளது.

### தொழில் நுட்பக் கல்வி நிறுவன ஆசிரியர்கள் நலன்

பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் பொறியியற் கல்லூரிகள், மற்றும் பாலிடெக்னிக்குகளின் ஆசிரியர்களில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அரசின் செலவில் உயர் படிப்பு, பயிற்சி ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையப் பணியாளர்களுக்கும் ''குழு ஈட்டுறுதித் திட்டம்'' விரிவாக்கப்பட்டுள்ளது.

பொறியியற் கல்லூரி பாலிடெக்னிக்குகளில் 1.1.1975 வரை பதவி உயர்வு பெற்ற விரிவுரையாளர்களுக்கும் ரூ. 1100 ஆரம்ப சம்பளமாக அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப்பள்ளி ஆசிரியர்கள் தனியார் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆசிரியர்கள் பிற பணியாளர்கள், ஆகியோருக்கான ஓய்வு ஊதியம் மற்றும் குடும்ப ஓய்வு ஊதிய சலுகைகள் தாராளமாக்கப் பட்டமை.

தனியார் பள்ளி ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்கள், தனியார் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்ப நிறுவனங்களின் ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் ஆகிய பல்வேறு வகையினருள் பல்வேறு குறிப்பிட்ட கால கட்டங்களுக்கு முன் ஓய்வு பெற்றவர்கள் அல்லது பணியிலிருக்கும்பொழுது இறந்து விட்டவர்கள் ஆகியவர்களுக்கு அல்லது அவர்கள் குடும்பங்களுக்கு ஓய்வு ஊதியம் அல்லது குடும்ப ஓய்வு ஊதியம் கொடுக்கப்பெறாத நிலை இருந்து வந்தது. அவ்வாறு பெறாதவர்கள் அச்சலுகைகளை தங்களுக்கும் கொடுக்கும்படி வேண்டி நெடுநாளாகச் செய்யப்பட்டு வந்த கோரிக்கைகளை அரசு பரிவுடன் ஆய்வு செய்து அவர்களுக்கெல்லாம் ஓய்வு ஊதியம் அல்லது குடும்ப ஓய்வு ஊதியம் தரத்தக்க வகையில் தாராளமான ஆணைகளை அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கானவர் பயன் எய்துவர்.

# செலவு குறைய, சிபாரிசுப்படி உரமிடுங்கள்.









நெல்லுக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு குவின்டாலுக்கான உற்பத்தி செலவு குறையும். குறுவை நெல்லைப் பொறுத்தவரை, இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| உயர்விளைச்சல் நெல் சாகுபடி செலவு (ஏக்கருக்கு) | ரூ. 960 | ரூ. 1286 |
| விளைச்சல் (ஏக்கருக்கு) | 8 குவி. | 20 குவி. |
| எனவே ஒரு குவின்டால் உற்பத்திக்கு ஆகும் செலவு | ரூ. 120 | ரூ. 64 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்து விடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது.

குறுவை நெல்லுக்கு ஏற்ற உரம் விஜய் 17-17-17. ஏக்கருக்கு 90 கிலோ விஜய் 17-17-17 உரத்தை அடியுரமாகவும் 35 கிலோ விஜய் யூரியாவை மேலுரமாகவும் இடவேண்டும். 5 கிலோ யூரியாவுக்கு 1 கிலோ வேப்பம் புண்ணுக்கு என்ற விகிதத்தில் கலந்து இட்டால் உரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

மேலும் நெல் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS



## சமச்சீர் உரமிட
## விஜய்

| விஜய் 17-17-17 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 17 |
| மணிச் சத்து | 17 |
| சாம்பல் சத்து | 17 |
| நிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 12.5 |

HTM-MPL-2831



ஆண்டுதோறும், தமிழக அரசின் வருமானத்தைப் பெருக்கித் தமிழக மக்களுக்கு வளமான வாழ்வை அளிப்பதில், தமிழக அரசு நல்ல முன்னேற்றத்தைக் காட்டி வருகிறது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால், அதாவது, 1975—76 ல் பொதுக்கல்விக்கு 141 கோடி செலவழிக்கப்பட்டது; இன்று சுமார் ரூ. 265 கோடி செலவு செய்யப்படுகிறது. மருத்துவம்-பொதுநலத்துறையின் மூலம் முன்பு ரூ. 56 கோடி செலவழிக்கப்பட்டது: மக்களுக்கு வளமான வாழ்வு அளிக்க, இன்று சுமார் ரூ. 130 கோடி செலவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர்

**டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

தமிழக அரசு செயல்படுத்தி வரும் தூத்துக்குடி அனல் மின்திட்டம், சேர்வலாறு நீர் மின் திட்டம், காடம்பாறை நீர் ஏற்று மின்திட்டம், குந்தா கடை நிலை நீர் மின் உற்பத்தித் திட்டம் ஆகியவையும் விரைவுபடுத்தப்படும். இதன் மூலம் 680 மெகாவாட் கூடுதல் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்துக் கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம், சண்முகா நதி நீர் மின் திட்டம், மேல் அமராவதி நீர் மின்திட்டம் ஆகியவற்றின் ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் 180 மெகாவாட் கூடுதல் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர்

**திரு எஸ். இராமச்சந்திரன்**





சிறு தொழில்களையும், கிராமத் தொழில்களையும் ஏராளமான அளவில் உருவாக்கிப் பெருமளவுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்பது தமிழ்நாடு அரசின்தொழில் கொள்கையாகும். கடந்த மூன்றாண்டுகளில் இவ்வகையில் சிறு தொழில்கள், கிராமத் தொழில்களின் வழியாகப் பெருமளவுக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது.

சிறிய தொழில்களைச் சிற்றூர்தோறும் வளர்ப்பதால், நாட்டின் பொருளாதாரத்தைப் பொலிவாக்க முடியும் என்ற வகையில் ஜப்பான் நாடு சீர் பெற்றுச் செழித்திருப்பதை உலகமே கண்டு வியந்திருக்கிறது. அந்த இலட்சிய அடிப்படையில் கிராமத் தொழிலை ஊரகத் தொழில்களைப் பெருக்கவும், நலிந்த எளிய கிராம மக்களின் வாழ்வில் புன்னகை அரும்பவும், புதிய திட்டங்களை நமது அரசு நாளும் வகுத்து வருகின்றது.

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர்

**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**



நிலம் வைத்திருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் நிலத்துன் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலும் அதன் பேரில் உள்ள நன்மைகளை முறைப்படி பெறுவதிலும் பலவித இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

இந்த இன்னல்களை நீக்கி விவசாயிகள் நன்மைபெற வேண்டும் என்பதற்காக தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

அந்தத் திட்டம் தான் ''நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்''

கிராம செட்டில்மெண்டு பதிவேடுகள், சிட்டாபோன்ற நிலப் பதிவேடுகள் அவற்றின் பராமரிப்பு, விவசாயிகளுக்கு அந்த நிலத்தில் உள்ள சட்ட பூர்வமான உடைமைகளை பாதுகாத்து கொடுப்பது அரசின் கடமையாகும்.

**மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்**

**திரு எஸ். டி. சோமசுந்தரம்**

''வீட்டுக்கு ஒரு மரம்'' என்பதை மாற்றி, இப்பொழுது ''குழந்தைக்கு ஒரு மரம்'' வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்.

தமிழக வனத்துறையின் மூலமும், பொதுமக்கள், பொது நிறுவனங்கள் மூலமும் கடந்த ஆண்டில் சுமார் 2 கோடி நாற்றுகள் வழங்கப்பட்டு நடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 2 கோடி நாற்றுகள் நட்டு வளர்ப்பது என்று திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் விறகுத் தேவைக்காக சமுதாயக் காடுகள்-விரிவாக்கக் காடுகள் வளர்க்கவும் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், இனிமேல் புதிதாக வீடு கட்ட அனுமதி வழங்கும் பொழுது வீட்டைச் சுற்றி, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மரங்களும் நட்டு வளர்க்க வேண்டும் என்ற விதியும் சேர்க்க வேண்டும் என்ற கருத்து ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர்**

**திரு இராம. வீரப்பன்**





14 வயது முடிய அனைவருக்கும் தொடக்கக் கல்வி வசதி அளிக்கவேண்டும் என்பது இந்திய அரசியல் சட்டத்தின் கோட்பாடாகும். ஆறாவது, ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1984-85) 6-11 வயதுத் தொகுதியில் 95% யினரையும் 11-14 வயதுத் தொகுதியில் 50% யினரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்பது அனைத்து இந்தியாவிற்கும் மைய அரசு திட்டக்குழு வகுத்துள்ள இலக்காகும். தமிழகத்தைப் பொருத்தவரையில் தற்பொழுது (1980-81) 6-11 வயதுத் தொகுதியினரில் 95.22 யினரும் 11-14 வயதுத் தொகுதியினரில் 61.42% யினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடக்கப் பள்ளிகளில் உரிய வயதுச் சிறுவர்கள் அனைவரையும் சேர்ப்பதற்கும் சேர்ந்த மாணவர்கள் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர்**

**திரு செ. அரங்கநாயகம்**



தமிழக வேளாண்மைத்துறை உருவாகி நூறு ஆண்டுகள் ஆகின்றன. நூற்றாண்டு விழாக்காணும் இவ்வாண்டிலே புரட்சித் தலைவர் அரசு இந்திய அரசின் மூலம், உலக வங்கியிடம் ரூ. 36½ கோடி நிதி உதவி பெற்று கடந்த 1.9.1981 முதல் 'பயிற்சி மற்றும் தொடர்பு வழி திட்டம்' அதாவது Training and visit system' என்னும் திட்டத்தைத் தமிழகத்தின் 8 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாவட்டம் நீங்கலாக மீதமுள்ள 7 மாவட்டங்களில் இத்திட்டம் 1.7.1982 முதல்செயல்படுத்தப் படும்.

விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்தியாவிலேயே முதன் முதலாக உயர்மட்டக் குழுவை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைப்படி ரூ. 118 கோடிக்கு வழிவகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ரூ. 26.84 கோடி அளவில் தக்காவிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இப்படி அடுக்கடுக்கான நன்மைகளை உழவர் பெருமக்களின் நலன் கருதிப் புரட்சித்தலைவர் அரசு செய்து வருகிறது.

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்**

**டாக்டர் கா. காளிமுத்து**

பொருளாதார் மேம்பாட்டில்அக்கறை கொண்டு, வாங்கிய கடனை உழவர் பெருமக்கள் குறிப்பாக பெரு விவசாயிகள் திரும்பத் தரவேண்டும். அதே நேரத்தில் குறைந்த செலவில் அதிக வருவாய் பெறும் பயிர்த்தொழில் உபதொழில் போன்றவற்றிற்கு அரசின் திட்டப்படி கூட்டுறவு அமைப்பு நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் பலனை உணரவும் உழவர்கள் முன்வரவேண்டும்.

இந்த ஏற்பாடுகளால் நிலைமையில் முன்னேற்றம் காண இயலும். கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்காக உள்ள அமைப்புகள். அவர்களால் நடத்தப்படும் அமைப்புகள் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களின்பால் தம் கடமைகளை உணர்ந்து சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகளைச் செலுத்தி வந்தால், அச்சங்கங்களுக்குப் புத்துயிர் ஏற்பட்டு மேலும் சிறப்பாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும்.

**மாண்புமிகு கூட்டுறவு-சட்டத்துறை அமைச்சர்**

**திரு சி. பொன்னையன்**





நகரங்களும் நகரையடுத்துள்ள புறநகர்ப்பகுதிகள் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளர்வது என்பதோடு நில்லாமல், கிராமங்களிலும் முறையான வளர்ச்சி ஏற்பட்டு அவை சிறுசிறு நகரங்கள் போல் மிளிர, அரசு மேற்கொண்டுள்ள அருமையான திட்டம் தான் 'தன்னிறைவுத்திட்டம்' என்பதாகும். இது மிகப்பெரிய புரட்சிகரமான திட்டமாகும். கடந்த 30 ஆண்டுகளாக, சாதிக்க முடியாததை 3 ஆண்டுகளில் சாதிக்கும் திட்டம்.

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு ப. குழந்தைவேலு**



## அண்ணா வழியில்....

பொருளாதார, சமத்துவம் மற்றும் மக்களுடைய சமத்துவம் இரண்டும் தான் அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கை. இந்த நிலையில் நின்று பார்த்தால் அண்ணாவின் கொள்கை நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், "மக்களுக்காகத் தான் கொள்கையே தவிர, கொள்கைக்காக மக்கள் அல்ல." இது தான் எனக்குத் தெரிந்தவரையில் நான் அறிந்து கொண்ட பாடம். சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண் டும். சமுதாயத்திலே பொருளாதாரத்தையும், ச்முதாய அமைப்பையும் சமத்துவ நிலைக்குக் கொண்டு வர வேண்டும். சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

"லெவலிங் அப், அண்ட் லெவலிங் டவுன்" என்று அமரர் அண்ணா அவர்கள் சொல்லி மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்களை மத்திய நிலைக்குக்கொண்டுவாருங்கள், அதே சமயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களையும் மத்திய நிலைக்குக் கொண்டு வாருங்கள், அந்த நிலை அமைய வேண்டும் என்று எண்ணிய அமரர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று, அவர்களின் கொள்கையைப் புரிந்து கொண்டு நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.





ஜெய்...



தமிழ்நாட்டில் 11,664 நிறுவனங்களில் சுமார் எட்டு இலட்சத்து இருபதாயிரத்து எண்ணூற்று தொன்னூற்று ஒன்பது தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இந்த அரசு, தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றுவதிலும், உரிமைகள் பாதுகாப்பதிலும் தீவிர கவனம் செலுத்துவதால், தொழிலாளர்கள் தேவையற்ற வேலை நிறுத்தங்களில் ஈடுபட எந்த அவசியமும் ஏற்படவில்லை. இன்று தமிழ்நாட்டில் காணப்படும் தொழில் அமைதி நிலைமை அனைத்து இந்தியாவிலும் பாராட்டப்படும் அளவிற்கு இருக்கின்றது.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
**திரு எஸ். இராகவானந்தம்**

பொதுவாகச் சென்னை போன்ற பெருநகரங்களில் கிடைக்கின்ற மருத்துவ வசதி, மற்ற இடங்களில் கிடைப்பதில்லை என்ற குறைபாடு உண்டு. இக்குறையை மாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இந்த அரசு, புதிய திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தி வருகின்றது. அதன்படி, பெருநகரங்களில் கிடைக்கும் வசதிகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் கிடைக்கவும், மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள வசதிகள், தாலுக்கா மருத்துவமனைகளில் கிடைக்கவும், தாலூகா மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால், பெருநகரங்களிலும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் ஏற்படும் கூட்டத்தைத் தவிர்ப்பதுடன், கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு ஆங்காங்கே தரமான சிகிச்சைப் பெறவாய்ப்பு ஏற்படுகின்றது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**டாக்டர் எச். வி. ஹண்டே**





சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டங்களை அடுத்த ஐந்தாண்டுகளில் நிறைவேற்ற 168 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை நம்முடைய அரசு தீட்டியிருக்கிறது. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடியும்போது இவைகளின் மூலம் 2 லட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதியைப் பெறும்.

பொதுவாக, தமிழ் நாட்டில் உள்ள விளை நிலங்கள் ஆற்றுப் பாசனம், ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற மூவகையில் பாசன வசதிகளைப் பெறுகின்றன. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 95—சதவிகித நீர் வளத்தைப் பயன்படுத்தி வருகிறோம். எஞ்சியுள்ள நீர் வளத்தையும் பயன்படுத்தவும் பாசனம் பெறும் நிலங்களுக்கு மேலும் உறுதியான பாசன வசதி அளிக்கும் வகையிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர்
**திரு க. இராசாமுகமது**



புரட்சித்தலைவரது அரசு கடந்தஒப்பந்தத்தில்போராட்டம் இல்லாமல் கணிசமாக ஊதிய உயர்வைக் கொடுத்திருக்கிறது. இந்தப் போக்குவரத்துக் கழகத்தொழிலாளர்களது நலனுக்காக இன்னும் பல நல்லத் திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ளவிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகத்திலேதான் போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாக இயங்கிகொண்டிருக்கிறதென வெளிநாட்டினரும் பாராட்டுகின்றனர். இது தொடர்ந்து நீடிக்க மக்களின், அரசியல் கட்சிகளின் ஆதரவு தொடர்ந்துத் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்**

**திரு எஸ். முத்துசாமி**

மத்திய அரசால் தொழிலில்பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள 35 வட்டங்கள் தவிர, தமிழக அரசும் 25 வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதிகளாகஏற்கனவே அறிவித்தது;இவ்வட்டங்களில் தொழில் துவங்குவோர் மானியதொகைகள் பெற்று வருகின்றனர். தமிழகத்தில் இன்றும் சில வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கவேண்டுமென தமிழக அரசு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருவதோடு, மாநில அரசும் இன்னும் சில வட்டங்களைத்தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்க தீவிரமாக பரிசீலித்து வருகிறது. பொதுக் துறையில் அரியலூரில் ரூபாய் 30 கோடி அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிமெண்ட் தொழிற்சாலை, பெரிய செவலையில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவுச்சர்க்கரை ஆலை, தனியார் துறையிலும் பல புது தொழிற்சாலைகள்-இவ்வரசின் சீரிய தொழில் முயற்சிகளால் ஏற்பட்ட பலன்கள்

**மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்**

**திரு எஸ். திருநாவுக்கரசு**





தமிழ் நாட்டில் கதர்த்துணிகள் ரூ. 7.54 கோடிக்கு உற்பத்தி ஆகின்றன. கிராமத் தொழில் பொருள்கள் ரூ. 4 கோடி அளவுக்கு உற்பத்தி ஆகின்றன. இரண்டிலும் சேர்த்து 4 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்று இருக்கிறார்கள். மேலும் 33,403 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

கதரின் தரத்தை உயர்த்தவும், வடிவமைப்புகள் தயாரிக்க பவானிசாகரில் ரூ. 5.21 இலட்சம் மதிப்பில் ஓர் ஆராய்ச்சிக் கூடம் நிறுவிட அரசு அனுமதி அளித்துள்ளது. முதன் முதலாக இப்படி ஓர் ஆராய்ச்சிக்கூடம் அமைக்கப்படுகிறது. ரூ. 5 இலட்சம் செலவில் 85 பட்டை போடும் கருவிகளும் 2 பஞ்சு உடைக்கும் கருவிகளும் பல்வேறு இடங்களில் நிறுவப்படும்.

**மாண்புமிகு கதர்-பொதுப்பணித்துறை அமைச்சர்**

**திரு எஸ். என். இராசேந்திரன்**



சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின் நலனுக்காகவும், மேம்பாட்டிற்காகவும், தனிக் கவனம் செலுத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

தமிழ் நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டு வந்த பலமுனைத் திட்டங்களின் கீழும், கல்வி, வேளாண்மை, கால் நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு, தொழில் போன்ற பல பொதுத் துறை திட்டங்களின் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறையினர் செயற்படுத்தி வரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக மேற் சொன்ன மானியக் கோரிக்கைகள் அனைத்தின்கீழும் மொத்தத்தில் 47.36 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய மக்களைப்போல் ஆதி திராவிடர், பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

**மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்**

**திரு எம். விஜயசாரதி**

குழந்தைகள் நலநிலையங்கள், இம்மாநிலத்தின் மூலைமுடுக்கிலுள்ள கிராமங்களிலும், ஆதிதிராவிட காலனியிலும், மலைவாழ்மக்கள், மற்றும் போக்குவரத்து வசதியே இல்லாத பூர்வீக பழங்குடிகள் பகுதிகளிலும், அகதிகள்காலனிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1972ம் ஆண்டு 21 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம், படிப்படியாக விரிவடைந்து, இன்று தமிழகத்தில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்**

**திருமதி கோமதி சீனிவாசன்**



## அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

தமிழக அரசு மாநில அரசு ஊழியர்களுக்கு கடந்த மார்ச்சுத் திங்கள் இறுதியில் வரலாறு காணாத வகையில் நான்கு அகவிலைப்படிகளை ஒரே சமயத்தில் அறிவித்தது.

1.12.'81 முதல் ஓர் அகவிலைப்படியும் 1.2.'82 முதல் ஓர் அகவிலைப்படியும் 1.3.'82 முதல் ஓர் அகவிலைப்படியும் 1.5.'82 முதல் நான்காவது அகவிலைப்படியும் வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் தமிழக அரசு பதவி ஏற்ற பிறகு 11 தடவை அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அளித்துள்ளது.

# பத்தும் இரண்டும் படிப்புக்கு உறுதி 10+2

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி"
"நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"

—என்பன பழகிய மொழி

ஆனால்,

"பத்தும் இரண்டும் படிப்புக்கு உறுதி"
—என்பது புது மொழி; பயன் மொழி.

மேலை நாட்டு மாதிரியைத் தழுவி ஏட்டுக் கல்வியைப் பரப்பி, ஏற்றம் பெற வழியின்றி ஏங்கித் தவிக்கும் நிலை மாறி, கற்றதனாலாய பயன், உற்ற தொழில் மேற்கொள்ளல் என்ற கல்வியை நோக்கமுடையதாகச் செய்யும் பத்தும் இரண்டும் என்ற முறை, படிப்புக்கு உறுதியைக் கூட்டுகின்றது. இம்முறையின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஈண்டுக் காண்போம்.

**கல்வி அமைப்பு மாற்றம்**

பன்னெடும் ஆண்டுகளாகப் பல கல்விக் குழுக்களும், பள்ளிப் படிப்பைப் பயனுள்ள



தாக்கி, மாணாக்கர்களிடமும் பெற்றோர்களிடமும், கல்வியில் நம்பிக்கையையும் உறுதியையும் வளர்க்க வேண்டும் என்று பரிந்துரைத்தன. வளர்ந்து வரும் நாட்டில், கல்விக்காகப் பெருந்தொகை ஒதுக்கியும் அதில் பெரும்பங்கு கல்லூரி நிலையில் செலவிட்டு, அக்கல்லூரிகள் பயன்தரு பல் தொழில்களிலும் ஈடுபாடு கொள்ள முடியாத பட்டதாரிகளை மட்டும் சமூகத்துக்கு அளித்துக் கொண்ருந்தால், நாட்டின் பொருளாதார நலன் பாதிக்கும் என ஆராய்ந்து, 10+2+3 என்ற கல்வி அமைப்பு முறை மாற்றத்தைக் கோதாரி கல்வி ஆண்ணக்குழு (1964-66 )தெரிவித்தது. இக்குழுவின் அறிக்கையின் முக்கிய கருத்து, எண்ணளவில் கல்வி ஆண்டுகளை மாற்றுவது அன்று; சமூகத்திற்குப் பயனளிக்கக் கூடிய வகையில், கல்வியை மாற்றி, பல்லாயிரக் கணக்கான மாணாக்கர்களை, பல்வேறு தொழில் சார் படிப்பினை மேற்கொண்டு கல்வி அமைப்பு, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது ஆகும்.

கல்வித்துறையில் தமிழகம் தன்னிகரில்லா முன்னோடியாகப் பல திட்டங்களைக் கொணர்ந்துள்ளது. பசி வந்திடப் பத்தும் பறந்திடும் எனில், கல்வி மட்டும் கற்க இயலுமா என்ற கேள்விக்குப் பதிலாக விளங்கிய நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் போன்ற புதுத் திட்டங்கள் இந்தியாவின் முன்னோடியாகத் தமிழகத்தை ஆக்கியது. இவ்வகையில், பல்வேறு மாநிலங்களும் 10+2+3 என்ற கல்வி அமைப்பு முறையை அமல்படுத்துவதில், இம்முறையமைப்பின்

அடிப்படைக் காரணங்களையும், நோக்கங்களையும் அதிகமாகக் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், தமிழகக் கல்வித்துறை, முதலிலிருந்தே பல வகையிலும் திட்டமிட்டு, ஆராய்ந்து, எண்ணித்துணிந்து, ஏற்றமுறு மேனிலைக் கல்வி முறையை, அறுதியிட்ட நோக்கங்களை நிறைவேற்றும் உறுதியுடன் அமல்படுத்தி வருகின்றது; பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்து வருகின்றது.

மத்திய அமைச்சர், ''சிறந்த மேனிலைக் கல்வி முறையையும், தொழில்சார் கல்வியையும் காணவேண்டுமானால் தமிழகத்திற்குச் சென்று பாருங்கள்'' என்று கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் பரிந்துரைக்குமளவிற்குத் தமிழகம் மேனிலைக் கல்வித் திட்டத்தை அமல் நடத்துவதில் சிறந்துள்ளது.

**நலிந்தவர்க்கு நல்லுயர் கல்வி**

தமிழகக் கல்வி வரலாற்றிலேயே, கோதாரி கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரையின் கருத்து நடைமுறைப்படுத்தும் வகையில், மேல்நிலைக் கல்வியை மாபெரும் அளவில் அமல்படுத்தியது ஒரு மைல் கல்லாகும்.

1978-79ல் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே 912 பள்ளிகளில் 1.16 இலட்சம் மாணவர்கள் பயிலத் தொடங்கினர். புகுமுக வகுப்புகளில் 78,000 மாணவர்களே உயர் கல்வி பெற வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் மேல் நிலைக் கல்வியைப் பள்ளிகளில் ஏற்படுத்தியதால் கிராமங்களுக்கு உயர் கல்விப் பயன் கிடைத்து $1\frac{1}{4}$ (ஒன்றேகால்) இலட்சம் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் படித்து வருகின்றார்கள். உயர்கல்வி பட்டிதொட்டிகளில் பரவவும், நலிந்த பிரிவினர் பெறவும் வழி ஏற்பட்டது. இப்போது, இரண்டு ஆண்டு படிப்பிலும் 2,75 இலட்சம் மாணவர்கள் (30.9.81 கணக்குப்படி) படிக்கின்றனர். இதில் 38.06 சதவீதம் பெண்கள் ஆகும்.

**தொழில்சார் கல்வி**

மேல்நிலைக் கல்வியின் மையக் கருத்தாக தொழில் சார்ந்த கல்வி, மிகச் சிறப்பான முறையில் பலவகையிலும் திட்டமிடப்பட்டு, அனைவரும் பாராட்டும் வகையில் அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த திரு பேராசிரியர் கோவிந்தராவ் அவர்கள் மேற்கொண்ட ஓர் ஆராய்ச்சியில், குஜராத், கர்நாடகம், மேற்கு வங்காளம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் பயிலும் தொழில் சார்ந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைவிட, நம் தமிழகத்தில் அதிக மாணவர்கள் படிக்கின்றார்கள் என்ற அரும் பெரும் உண்மையை-சாதனையைக் கண்டுரைத்தார். அவ்வாராய்ச்சியின் போது கண்ட மாநில வாரியாகத் தொழிலோடுகூடிய கல்வி பயின்றவர்கள் விவரம் வருமாறு:—

| மாநிலம் | தொழிலோடு கூடியகல்வி பயின்றவர்கள் |
|---|---|
| தமிழ்நாடு | 24,000 |
| குஜராத் | 3,516 |
| கர்நாடகம் | 2,412 |
| மேற்கு வங்காளம் | 2,300 |
| மகாராட்டிரம் | 2,400 |
| தில்லி | 1,180 |

இப்போது தொழிற்கல்வியில் மட்டும் சுமார் 58,000 மாணவ, மாணவியர் படிக்கின்றார்கள். இவர்களில் 31 சதவீதம் மாணவியர், தொழில் சார்ந்த கல்வியின் வெற்றிக்கு வழி வகுத்த பலவற்றுள் பின்வருபவை முக்கியமான செயல்கள்:

அ. தலைமை ஆசிரியர்களுக்கு, முடிவெடுக்கும் உரிமை வழங்கியது.

ஆ. எல்லாத் துறையினர்களும் தங்கள் அலுவலர்களைப் பகுதிநேர ஆசிரியர்களாகப் பள்ளிகளுக்கு அனுப்பப் பொது அனுமதி.

இ. மாணவர் பயிலும்போதே ஊதியம் பெறும் சட்டாம் பிள்ளைத் திட்டம்.

ஈ. தொழிற்சாலைகளுடன் தொடர்பு.

சமூகநலத் தொண்டில் மாணவியர்



உ. மாவட்ட தொழில் கல்விக்கும் விளக்கமான ஆசிரியர் துணைப் புத்தகங்கள் வெளியிட்டது. இப்புத்தகங்கள் பிற மாநிலக் கல்வியாளர்கள் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

ஊ. மாவட்ட அளவில் தொழில் சார்ந்த கல்விக் குழு அமைத்தல்.

**ஓர் ஆராய்ச்சி**

தொழில் சார்ந்த கல்வியுடன் கூடிய மேல்நிலைக் கல்வியின் பயன் எவ்வாறு உள்ளது என்று திட்டவட்டமாகக் காணுமாறு, வடஆர்க்காடு மாவட்டத்தில் ஓர் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் கண்ட உண்மை, இத்திட்டத்தின் வெற்றியைத் தெளிவாக்குகின்றது.

இம்மாவட்டத்தில் மேல்நிலைக் கல்வி பயின்ற மாணவர்களில் 47 சதவீதத்தினர்,




சமூகநலத் தொண்டில் மாணவியர்

உயர்கல்வியை மேற்கொண்டு தொடர்ந்து படித்து வருகிறார்கள்.

49 சதவீதத்தினர், பயன்தரு தொழில் தானாகவோ, பிற அலுவலகங்களிலோ, செய்து வருகின்றனர்.

உயர்கல்வி தொடரும் 47 சதவீத மாணவர்களில் 32% தொழில் கல்வியில் உயர் படிப்பு தொடர்ந்துள்ளனர் என்பது பாராட்டத்தக்கது. மீதமுள்ள 15 சதவீதத்தினரே, பொதுப் படிப்புக்காகக் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.

**மேனிலைக் கல்வி சிறக்க மேற்கொண்ட திட்டங்கள்**

மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணி இடங்களுக்கான பணிவிதிகள் ஏப்ரல் 1981ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளியிலிருந்து உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையாக நியமனம் பெறுவதற்கு 1.7.1978 லிருந்து ஐந்தாண்டுக்குள் பட்ட மேற்படிப்புத் தகுதியடைய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் பெற்று வந்த சிறப்பூதியம் 1.9.1981 முதல் ரூ. 25-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டது.

இவ்வாசிரியர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்று முழுமையான தகுதி பெற உதவும் வகையில் அரசு சிறப்புப் பாடமுறைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. அவர்களுடைய (பட்ட மேற்படிப்பிற்கான) படிப்புக் கட்டணத்தில் ஒரு பகுதியை அரசே ஏற்றுக் கொள்கிறது. மேலும், பள்ளி விடுமுறைக் காலங்களில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் கலந்து கொள்ள இந்த உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் தம் குடும்பங்களை விட்டு அயலிடத்தில் தங்குவதற்கு ஏற்பாட்டுச் செலவை ஈடுகட்ட இவர்களுக்கு ஆளுக்கு ரூ. 1,000 கடனாகவும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

உயர்நிலை-மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கல்வி விஷயங்களை நன்கு கவனிக்க வகை செய்து அன்றாட நிருவாக விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மாணவர் எண்ணிக்கை 750 அல்லது அதற்கு மேலுள்ள உயர்நிலைப் பள்ளி-மேல் நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு பணி மூப்புள்ள ஆசிரியரை உதவித் தலைமை ஆசிரியராக நியமித்து அவருக்கு மாதம் ரூ. 25 படிதர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஷிப்டு முறைப்படி செயல்படும் பள்ளிகள் இரண்டாவதாக ஓர் உதவித் தலைமை ஆசிரியரையும் நியமித்துக் கொள்ளலாம்.

இத்திட்டம் மேலும் வெற்றி பெற மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள், பட்ட மேற்படிப்புப் பெறச் சிறப்புப் பயிற்சி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப நிறுவனங்களில், மேல் நிலைக்கல்வி படித்து வருபவர்களுக்காக 10% இடம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஏற்கனவே ஆய்வுக்கூட உதவியாளர்கள் இல்லாத (அரசு மற்றும் அரசில்லாத) மேல்நிலைப் பள்ளிகளில் 400க்கு 1980 மார்ச் மாதம் பள்ளிக்கு ஓர் ஆய்வுக்கூட உதவியாளர் பதவி ஏற்படுத்தப்பட்டது. 1981-82 கல்வியாண்டில் 500 பணியிடங்கள் வழங்கப்பட்டன.

கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல் நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்து 'கல்லூரி இணையங்களும்' 'பாலி டெக்னிக் இணையங்களும்' அமைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. மொத்தம் 661 மேல்நிலைப் பள்ளிகள் 176 கல்லூரிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. பிற மேல் நிலைப்பள்ளிகள் பள்ளித் தொகுப்புகளாக (school clusters) இணைக்கப்பட்டுள்ளன.

மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்க அரசு மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 6000 செலவுக்கும் அரசல்லாத மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் (ரூ. 2,400 என்னும் வரம்புக்குட்பட்டு) 40 விழுக்காடு இணை மான்யத்துக்கும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் தரமான புத்

தகங்களைத் தேர்ந்தெடுக்கவும், விரைவில் அவற்றை வாங்கவும் உதவி செய்யும் வகையில் இத்திட்டத்தின் கீழ் வாங்கக்கூடிய பொருத்தமான புத்தகங்களின் பட்டியல் ஒன்று, வல்லுநர் குழு ஒன்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டு,பள்ளிகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டது. இதுவரையில் ரூ. 43 இலட்சம் செலவில் இத்திட்டம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் பலநோக்கு (Multi Purpose) ஆய்வுக் கூடங்கள் கட்ட அரசு ஒரு பள்ளிக்கு ரூ. 2.5 இலட்சம் வீதம் 630 அரசு பள்ளிகளுக்கு மொத்தம் ரூ. 1675 இலட்சம் செலவிட ஆணை வழங்கியுள்ளது.

தனியார் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 40% மானியத் திட்டத்தின் கீழ் 450 மேல்நிலைப் பள்ளிகள் பயனடையும் வகையில் ரூ. 320 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிலோடு கூடிய கல்வியினை நடத்தப் பகுதிநேர ஆசிரி யர்கள் சுமார் 5,000 பேர் நியமிக்கப்பட்டுள் ளார்கள்.

மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 13,000 முழு நேர முதுகலை ஆசிரியர்கள் மேல்நிலை வகுப்புகளை நடத்த என நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடத் திற்கு நவீன விஞ்ஞானக் கருவிகளை வழங்க ஒரு பள்ளிக்கு ரூ. 1 லட்சம் அனுமதிக்கப்பட் டுள்ளது.

மேல் நிலைப்பள்ளிக்குத் தொழிற்கல் விக்கு மானியமாக, பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000 வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி யின் சட்டாம் பிள்ளைகள் நியமிக்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் 2,000 மாணவர்கள் இதனால் பயனடைகின்றனர்.

மேல்நிலைப் பள்ளிகள் பகுதிநேர நூல கர் நியமனம் செய்யப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் 10 மாதங்களுக்கு வழங்க ஆணை யிடப்பட்டுள்ளது.

மேல்நிலைக் கல்வி வரை இலவசக் கல்வி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேல்நிலைக் கல்விக்கெனத் தனியாக உடற்கல்வி இயக்குநர்கள் 400 பேர் நியமிக் பட்டுள்ளனர்.

இந்தியக் கல்வி வரலாற்றில் முக்கியக் கல்வி மறுமலர்ச்சித் திட்டமாகிய 10+2+3 கல்வி முறையைப் பிற மாநிலங்களுக்கு எடுத் துக்காட்டாகத் தமிழகம் செயல்படுத்தி வரு கின்றது. இதில் நாம் பெருமுயற்சி செய்து வெற்றி கண்டவை பல; என்றாலும், நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டுமென நிரம்ப உள்ளன என்று கருத்தில் கொண்டு, அவற் றைச் செம்மையாகச் செய்ய முயல்வோமாக!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற் றாண்டு விழா, தரணியே புகழத் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. பாவ லர்க்கு மட்டுமே புரியும்படி இருந்த பாட்டுத் தமிழைப் பாமரர்க்கும் விளங்கும்படிச் செய்த பாரதியாரின் பெயர், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பலவற்றிற்கும் உயர்வளிக்கும் விதத்தில் சூட்டப்பட்டது.

1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் நாளன்று தொடங்கிய பாரதி நூற் றாண்டைத் 'தேசிய ஒருமைப்பாடு நாள்' எனத் தமிழக அரசு அறிவித்தது.

பாரதியாரின் பணியையும், வாழ்வுச் சிறப்பையும் விளக்கும் வகையில், எட்டய புரத்தில் நூற்றாண்டு விழாக் கண்காட்சி அமைக்கப்பட்டது, ஏறத்தாழ ஒரு மாத காலம் நடைபெற்ற அக் கண்காட்சி காண் போரைக் கவர்ச்சிப்பதாக அமைந்திருந்தது.

எட்டயபுரத்தில் உள்ள பாரதி மணி மண்டபத்தை அரசு ஏற்றுக் கொண்டு அதை 2.5 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்து எட்டயபுரத்தில் உள்ள மணிமண்டபத்தின் முன்னாலே மகாகவி பாரதியாரின் முழுஉருவச் சிலை நிறுவி, 1981 டிசம்பர் 11-ஆம் நாளன்று திறந்து வைக்கப்பட்டது.

பாரதி பற்றிய கலைக்கூடம் அம் மண்ட பத்தினருகே அமைக்க 10 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படுகிறது.

பாரதி நூற்றாண்டு நிறைவையொட்டி, முழு நீளத் திரைப்பட மொன்று தயாரிப்ப தென அரசு முடிவெடுத்துள்ளது.



பாரதியார் நூற்றாண்டு விழா!

# பசுமைப் புரட்சி

தமிழகத்தில் வேளாண்மைக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, வேளாண்மையின் அபிவிருத்தியே முக்கிய காரணமாக உள்ளது. தமிழ்நாட்டின் அரிசித் தேவைக்கு, வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த நிலமை மாறி, தன்னிறைவு அடைந்ததோடு மட்டுமல்லாது 1979-80-ஆம் ஆண்டு சுமார் 50,000 டன்கள் அரிசி ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு முன்னேற்றம் அடைந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழக வேளாண்மைத் துறையின் அயராத உழைப்பினாலும் வேளாண் பெருமக்களின் பெருமுயற்சியாலும் 1981-82ஆம் ஆண்டு கீழ்க்கண்ட முன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அளவு உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| அரிசி | 55.73 இலட்சம் டன்கள். |
| சிறுதானியங்கள் | 20.80 ,, |
| பயறு வகைகள் | 2.80 ,, |
| கரும்பு(வெல்லம்) | 19.18 ,, |
| பருத்தி | 3.50 இலட்சம் பேல்கள் |

உயர்விளைச்சல் தரும் புதிய ரகங்கள் கண்டுபிடிப்பினாலும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி நுணுக்கங்களைக் கையாண்டதாலும் உற்பத்தி உயர்வினை அடைய முடிந்தது.

1950-51-ஆம் ஆண்டு 19.31 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, கடந்த ஆண்டு 55.73 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

சிறுதானிய உற்பத்தி 1950-51-ஆம் ஆண்டு 8.33 இலட்சம் டன்களேயாகும். இது, 1981-82-ஆம் ஆண்டு 20.8 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

இதே போன்று 1950-51-ஆம் ஆண்டில் 0.70 இலட்சம் டன்களாக இருந்த பயறு உற்பத்தியானது கடந்த ஆண்டு 2.80 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

பருத்தி உற்பத்தி, 2.26 இலட்சம் பேல்களிலிருந்து 3.50 இலட்சம் பேல்களாக உயர்ந்துள்ளது.

1950-51-ஆம் ஆண்டு 54,000 டன்கள் மட்டுமே இருந்த கரும்பு (வெல்லம்) உற்பத்தி, 1980-82-ஆம் ஆண்டில் 19.18 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

உற்பத்தியினை மேலும் அதிகரித்திட 1982-83-ஆம் ஆண்டில் பயிர் உற்பத்தி கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அரிசி | 68.00 இலட்சம் டன்கள் |
| சிறுதானியங்கள் | 23.05 ,, |
| பயறு வகைகள் | 4.80 ,, |
| கரும்பு(வெல்லம்) | 23.52 ,, |
| பருத்தி | 5.00 இலட்சம் பேல்கள் |

பயறு உற்பத்தி நமது தேவைக்குக் குறைவாகவே உள்ளது. கடந்த ஆண்டு முதல், பயறு உற்பத்தியில் உயர்வு காண 6 ஆண்டுத் தீவிரத் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 1985-86ஆம் ஆண்டு இறுதியில் 6.4 இலட்சம் டன்கள் பயறு உற்பத்தி செய்யப்படும்.

வேளாண்மைக்குத் தேவையான இடுபொருள்கள் விநியோகம் வேளாண்மைத் துறையின் கிடங்குகள் மற்றும் தனியார் விற்பனை மையங்கள் மூலமும் செயல்படுத்தப்படுகிறது. இடுபொருள்களின் தரம், தரக் கட்டுப்பாட்டுச் சட்டங்களின் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

**1982–83-க்கான புதிய திட்டங்கள்:**

நடைமுறையில் உள்ள திட்டங்கள் தவிர, கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

1. ஆதார மற்றும் சான்றிதழ் பெற்ற விதைகளின் அதிகப்படியான தேவையைக் கருதி 80 எக்டேர் பரப்பளவுள்ள இரண்டு அரசாங்க விதைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படும்.
2. தற்போதுள்ள விதை சுத்திகரிப்பு நிலையங்





படித்தவன் உழ வேண்டும்-உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க-உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்னும் நிலை ஏற்பட வேண்டும்.

இந்தியப் பொருளாதாரமே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் கட்டப்பட்டிருக்கிறது.

—பேரறிஞர் அண்ணா



களை மேம்படுத்துவதோடு, மேலும் புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூன்று அமைக்கப்படும்.

3. பயறு விதைகளைப் பூச்சி தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டங்களில்மாவட்ட மையக் கிடங்குகள் கட்டப்படும்.

4. தற்போது செயல்பட்டு வரும் 41 தர நிர்ணயப் பரிசோதனைச் சாலைகளுக்கு உதவும் பொருட்டு குடுமியான் மலையில் மையத் தர நிர்ணயப் பரிசோதனைச் சாலை அமைக்கப்படும்.

வேளாண்மை விரிவாக்கப் பணியினை மேலும் சிறப்புறச் செயல்படுத்திட உலக வங்கியின் உதவியோடு ''பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம்'' 1.9.1981 முதல் 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மற்றைய ஏழு மாவட்டங்களிலும் 1.7.1982 முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் புதிய தொழில் நுணுக்கங்கள் வேளாண் பெருமக்களுக்குத் துரிதமாகவும் தொடர்ச்சியாகவும் தெரிவிக்கப்படும். மேலும் விவசாயிகளின் பயிர்ச் சாகுபடி பற்றிய பிரச்சினைகள், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த நிபுணர்களுக்குத் தெரிவிக்கப் பட்டுப் பிரச்சினைகள் தீர வழிவகைகள் கண்டறியப்படும்.

தமிழக அரசின் உதவியினாலும், வேளாண் பெருமக்களின் ஒத்துழைப்பினாலும் வேளாண்மைத் துறை விரிவாக்க அலுவலர்களின் அயராத உழைப்பின் மூலமும் 1982-83ஆம் ஆண்டு உற்பத்திக் குறியீட்டினை அடைந்து வேளாண்மைத் துறை மேலும் பெருமையுறும்.



# எண்ணெய் வித்துக்கள் பெருக்கத் திட்டம்

மனிதனின் உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது ''உணவு எண்ணெய்'' என்பதை யாரும் மறுக்க முடியாது. உணவு ஆராய்ச்சியாளர்களின் கணக்குப்படி ஒரு மனிதனுக்கு உணவு எண்ணெயின் மூலம் கிடைக்கும் கொழுப்புச் சத்து, நாள் ஒன்றுக்கு 30 கிராம் தேவைப்படுகிறது. ஆனால், நம் நாட்டில் ஒருவருக்குக் கிடைப்பதோ சராசரி 11 கிராம் கொழுப்புச் சத்துதான். எனவே, இத்தகைய நிலை மாறி, நாட்டு மக்கள் அனைவரின் உடல் நலத்திற்குத் தேவையான கொழுப்புப் பொருட்களினைப் பெற எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், அதன் மூலம் அதிக அளவில் தாவர எண்ணெய் உற்பத்தி அதிகரிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க மத்திய, மாநில அரசுகள் பெரு முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. இந்தியத் துணைக் கண்டத்திலேயே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி மேம்பாட்டிற்காகத் தனி இயக்கத்தினை 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலேயே துவக்கிய பெருமை தமிழ்நாடு அரசைச் சாரும்.

உணவுஎண்ணெய் உற்பத்தியல் தன்னிறைவு காணவும், தற்போது ஆண்டொன்றிற்கு உணவு எண்ணெய் இறக்குமதிக்கென ரூ. 800 கோடிக்கும் அதிகமாக ஆகும் அந்நியச் செலாவணிச் செலவினை நாளடைவில் முழுமையாக நீக்கவும், நமது இந்தியப் பிரதமர் இந்த ஆண்டு (1982) பொங்கல் திருநாளில் அறிவித்துள்ள புதிய 20 அம்சத் திட்டத்தில், இதற்கு முக்கியமான இடம் அளித்துள்ளார்கள். 1982-ஆம் ஆண்டு ''உற்பத்தி ஆண்டு'' என ஏற்றுக் கொள்ளப்பட்டதால், எண்ணெய் வித்து உற்பத்தியில் மிகுந்த முன்னேற்றம் குறுகிய காலத்திலேயே அடைய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எண்ணெய்வித்துப் பயிர்களிலேயே ஒரு முக்கிய பயிரான நிலக்கடலைச் சாகுபடியில் உலகிலேயே முதல் இடம் வகிப்பது நமது இந்திய நாடுதான். உலகின் நிலக்கடலைப் பயிரில் 40 சதவிகிதப் பரப்பும் 31.7 சதவிகித உற்பத்தியும் நம் நாட்டில்தான் உள்ளது. எனினும் உற்பத்தித் திறனில் நம்நாடு பத்தாவது இடம்தான் வகிக்கிறது. சராசரியாக எக்டேருக்குக் கிடைக்கும் நம் நாட்டின் விளைச்சலான 830 கிலோ, உலக சராசரி விளைச்சலை (900 கிலோ) விடக் குறைவானது.

இந்தியத் துணைக் கண்டத்தில், குஜராத் மாநிலத்திற்கு அடுத்து, தமிழகம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கிறது. நமது நாட்டின் மொத்த உற்பத்தியான 114 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் மட்டும் 16 லட்சம் டன் உற்பத்தி செய்கிறது. தமிழகத்தில் உள்ள சாகுபடிப் பரப்பில் நெல்லுக்கு அடுத்த படியாக நிலக்கடலைதான் அதிகமாக, சுமார் 15 சதம் பரப்பில் பயிரிடப்படுகிறது. நிலக்கடலையில் வழக்கமாக 8.85 லட்சம் எக்டேர் மானாவாரியிலும் 2.50 லட்சம் எக்டேர் பாசனத்தின் கீழும் பயிரிடப்படும். எள் சுமார் 1.40 லட்சம் எக்டேரிலும் ஆமணக்கு 0.13 லட்சம் எக்டேரிலும், சூரியகாந்தி 0.80 லட்சம் எக்டேரிலும், தென்னை 1.40 லட்சம் எக்டேரிலும் பயிரிடப்படுகின்றன.

நிலக்கடலையில் தமிழ்நாட்டின் சராசரி மகசூல் எக்டேருக்கு 1,000 கிலோவுக்கு மேலாகக் கிடைக்கிறது. இது நம் நாட்டின் சராசரி விளைச்சலைவிட அதிகம். இருப்பினும், இதைவிட மேலும் அதிக அளவு விளைச்சல் பெற வாய்ப்பு உள்ளது.



எண்ணெய்வித்துப் பெருக்கத்தின் முக்கியத்துவம் குறித்து, தமிழ்நாடு அரசு எண்ணெய்வித்துப் பெருக்கத்துக்காக ஒரு தனித் துறையை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முறையாக நிறுவியுள்ளது என முன்னரே குறிப்பிடப்பட்டது. எண்ணெய் வித்துப் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படும் தென்னார்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலக்கடலை உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி 3-1-81 முதல் தமிழ்நாடு எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களின் கூட்டுறவு இணையம் ஒன்றையும் இந்நாட்டிலே குஜராத் மாநிலத்திற்கு அடுத்த படியாக தேசிய பால் வள அபிவிருத்தி வாரியத்தின் (தேசிய பால் வள வளர்ச்சி நிறுவனம்) உதவியோடு நமது மாநிலத்தில் நிறுவிய பெருமை அரசையே சாரும்.

1981-ஆம் ஆண்டு முதல் நிலக்கடலைச் சாகுபடியைப் புதிய பரப்புகளில் பாசனத் தின் கீழ் கொண்டு வர இத்துறை முயற்சிகள் எடுத்து வருகிறது. வழக்கமான பாசனப் பரப்பான 2.66 லட்சம் எக்டேருக்குப் பதில் 1980-81 ஆம் ஆண்டு 3.40 லட்சம் எக்டேர் நிலக்கடலைப் பயிரைப் பாசனத்தின் கீழ் கொண்டு வந்தது. 1981-82ஆம் ஆண்டில் 2.82 லட்சம் எக்டேர் குறியீட்டிற்கு, 4.75 லட்சம் எக்டேர் நிலக்கடலை பாசனப் பரப் பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் நிலக்கடலை சாகுபடியாகும் பரப்பில் 2 சதம் பரப்பிற்குத் துறையினால் தரமானவிதை வழங்கப்பட்டு வருவது 1982-83-ஆம் ஆண்டில் 3 சதம் பரப்பளவிற்கு உயர்த்தப்படும். இது படிப்படியாக அதி கரித்து ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவிற்குள், மத்திய அரசின் பரிந்துரைப்படி 5 சதம் பரப்பிற்கு உயர்த்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

மேலும் இந்த 1981-82 ரபி பருவத்தில் புதிய பரப்பில் பாசனத்தின் கீழ் மேட்டூர் கால்வாய்ப்பகுதியில் இருந்து சுமார் 70 நாட்களுக்குப் பொது மராமத்துத் துறையின் உதவியுடன் தண்ணீர் விடப்பட்டு, 6,000 எக்டேர் எள், பெரியார், சேலம் மாவட்டங் களில் பயிரிடப்பட்டது.

**நிதி ஒதுக்கீடு :**

எண்ணெய் வித்துப் பயிர்களுக்காக ஐந் தாண்டுகளுக்கு முன்னர் நம் மாநில அரசால் செலவிடப்பட்ட தொகையைக் காட்டிலும் இன்று அதிக அளவில் இவ்வரசு செலவிட்டு நம் மாநிலத்து எண்ணெய்வித்துக்களை விளை விக்கும் வேளாண் பெருங்குடி மக்களுக்குப் பேருதவி ஆற்றி வருகிறது. 1977-78-ல் எண்ணெய்வித்து மற்றும் தென்னைப் பயிர் களுக்காக மொத்தம் ரூ. 221.90 இலட்சங்கள் செலவிடப்பட்டது. இந்தத் தொகை 1980-81-ல் ரூ. 358.96 இலட்சங்கள் ஆக உயர்ந்து 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 547.57 இலட் சங்கள் என்ற அளவை எட்டியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் எண்ணெய்வித்துத்துறை மொத்தம் ரூ. 673.19 இலட்சங்கள் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இம்மாநிலத்திற்கு, நிலக்கடலை மற்றும் சூரியகாந்தித் திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவியுடன் 1980-81-ல் ரூ. 50.61 இலட்சம் செலவிடப்பட்டது. 1981-82-ல் ரூ. 87.39 இலட்சம் செலவு செய்யப்பட்டது. 1982-83-ல் ரூ. 147.54 இலட்சம் செலவிடத் திட்ட மிடப்பட்டுள்ளது.

**பொருள் இலக்குகள் :**

1980-81 ஆம் ஆண்டில் பருவ மழை தவறியதால், மாநிலமெங்கும் பயிர்கள் முழுமையாகவும், நல்ல விளைச்சலுடனும் சாகுபடி செய்ய இயலவில்லை. எனவே 9.50 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மட் டுமே நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. மேற்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்காகத் தமிழ்நாடு அரசு, நடப்பு ஆண்டில் ரூ. 160.87 இலட்சம் செலவில் வறட்சி நிவாரணத் திட்டம் ஒன்று செயல் படுத்தி, எண்ணெய்வித்துச் சாகுபடிக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்து மற்றும் தென்னை நாற்றுகள் ஆகியவற்றை மானிய விலையில் சிறு மற்றும் குறு விவசாயி களுக்கு விநியோகம் செய்தது.

மேலும் ஆதி திராவிட வேளாண் மக்க ளுக்காகச் சிறப்புப் பகுதித் திட்டமொன்று இவ்வாண்டு முதன் முறையாகச் செயலில் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிலக்கடலை, சூரியகாந்தி விதை மற்றும் தென்னை நாற்றுப் போன்ற இடு பொருள்கள் 25 சதம் மானிய விலையில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதற்காக 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 2.75 இலட்சம் செலவிடப்பட்டு 4705 ஆதி திராவிட விவ சாயிகள் பயனடைய வழி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் ஆதி



திராவிட விவசாயிகள் பயன் பெறுவதற்கென ரூ. 7.10 இலட்சம் செலவிடத் திட்டம் வகுக் கப்பட்டுள்ளது.

இதைத் தவிர எண்ணெய்வித்து பெருக்கத் திட்டங்களின் சாதனைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டு போவதைப் பின்வரும் புள்ளி விவரங்களினால் அறியலாம். எண் ணெய்வித்து உற்பத்திக்கு உதவும் முக்கிய மான இனங்களில், தரமான விதைகளைப் பயன்படுத்துவது சிறந்ததாகும். இந்திய நாட்டிலேயே, தமிழ்நாட்டில் மட்டும்தான் அரசுத் துறையே விதைப் பண்ணைகள் அமைத்து, விதைகள் அதிக அளவில் கொள் முதல் செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்கிறது. எண்ணெய்வித்து விதைகள் விநி யோகத்தில் 1980-81-ல் அடைந்த சாதனை 3859 டன்கள், 1981-82-ஆம் ஆண்டில் 6704 டன்கள். நடப்பு ஆண்டில் 7615 டன்கள் விநியோகிக்கப்படவுள்ளன. மேலும் விளைச் சலைப் பெருக்குவதற்காக, பயிருக்கு ஜிப்சம் இடுதல், நுண்ணுயிர்ச் சத்து இடுதல், பெரு

மளவுப் பயிர்ப் பாதுகாப்புச் செய்தல்போன்ற சில இனங்களில் 1980-81 மற்றும் 1981-82-ல் அடைந்த சாதனை 1982-83-ல் திட்டமிட்டுள்ள இலக்குகள் ஆகியன வருமாறு:

| | 80-81 | 81-82 | 82-83 |
|---|---|---|---|
| ஜிப்சம் விநியோகம் (டன்கள்) ... | 17053 | 19462 | 25000 |
| நுண்ணூட்டச்சத்து விநியோகம் (டன்கள்) | 372 | 341 | 500 |
| மானியத்துடன் கூடிய பயிர்ப் பாதுகாப்பு (எக்டேர்) | 28932 | 49714 | 60000 |
| எண்ணெய்வித்து உற்பத்தி (லட்சம்) (மெ. டன்) | 8.95 | 15.85 | 16.38 |

## தென்னை அபிவிருத்தி :

1979-80 வரை தென்னை அபிவிருத்திக்காக நமது மாநிலத்தில் தென்னை பயிரிட, பல சிறிய நாற்றுப் பண்ணைகள் மட்டுமே இயங்கி வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது திட்டப்படி தென்னை அபிவிருத்திக்கு அதிவிரைவுத் திட்டம் (Crash Programme) ஒன்று 1980-81-ல் துவக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்குச் சுமார் 15.50 லட்சம் தென்னங்கன்றுகள் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய நிலை, ஆண்டுக்கு 35 லட்சமாக உயர்ந்தது. சுமார் 1.5 லட்சம் நெட்டை, குட்டைக் கன்றுகளின் உற்பத்தி இன்று 5 லட்சமாக உயர்ந்துள்ளது. தமிழக அரசு இதுவரை புதிதாக ஒப்புதலளித்த அதிவிரைவுத் தென்னைத் திட்டங்களின் வாயிலாக மேலும் பல லட்சம் தென்னங்கன்றுகளின் உற்பத்திக்கு வழி செய்து, இன்னும் 10 ஆண்டுகளில் ஆண்டுக்குச் சுமார் 60 லட்சம் தரமான தென்னங்கன்றுகளுக்கு மேல் உற்பத்தி செய்து விநியோகிக்கும் நிலையில் உள்ளது. இவ்விதம் அதிக அளவில் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதால், ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரத்திற்கு 1.6 தேங்காய் மட்டுமே கிடைத்து வருகின்ற இன்றுள்ள நிலை மாறி, அடுத்த 20 ஆண்டுகளில் 4.6 தேங்காய்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படவுள்ளது.

1980-81-ல் 15.58 லட்சம் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 1981-82-ஆம் ஆண்டில் 26.21 லட்சம் தரமான



நாற்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் 35 இலட்சம் தரமான தென்னங்கன்றுகள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தியில் கன்றுகள் விநியோகம் தவிர, பூச்சியால் பாதிக்கப்பட்ட மரங்களில் ஒட்டுண்ணியை விட்டுப் பாதுகாப்பு அளிப்பதற்கும், தென்னைச் சாகுபடியாளர்கள் தென்னையில் அதிக விளைச்சல் பெறத் தேவையான சாகுபடி முறைகளை மேற்கொள்ளச் செய்வதற்கும் திட்டங்கள் இயங்கி வருகின்றன. 1980-81-ல் 3678 எக்டேர் பரப்பு தென்னந்தோப்புகளில் 1164 இலட்சங்கள் ஒட்டுண்ணிகள் விடப்பட்டன. 1981-82-ல் 3,000 எக்டேர் பரப்பில் 1520 இலட்சம், ஒட்டுண்ணிகள் விடப்பட்டன.

தென்னை மரங்களைத் தாக்கும் கேரள வேரழுகல் நோய், தஞ்சாவூர் குருந்தழுகல் வாடல் நோய் போன்றவற்றிற்கும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளுக்கும் நோயுள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி, புது ரகக் கன்றுகளைப் பயிரிடுவதற்கு மானியமும் வழங்கும் திட்டங்கள் இந்த இண்டு இரண்டாம் பகுதித் திட்டங்களாகச் செயல்பட உள்ளன. சென்னை, திருச்சி, சேலம், மதுரை கோவை ஆகிய நகரங்களில் தென்னை மரங்களின் உற்பத்தியினைப் பெருக்கவும் நோய்களைத் தவிர்க்கவும் தரமான தென்னங்கன்றுகளை விநியோகிக்கவும் மாநில முழுமையில் தற்போது விஸ்தரிப்புப் பணியாளர்கள் இல்லாத இடங்களில் விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் இரண்டாம் பகுதித் திட்டங்கள் அரசினால் இந்த ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

3-1-1981 முதல் துவக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்து உற்பத்தியாளர் இணையம் தேசிய பால்வள வாரியத்தின் துணையோடு ரூ. 11.45 கோடியில் 7 ஆண்டுகளில் எண்ணெய் வளம் பெருக்கும் திட்டம் ஒன்றை நிறைவேற்றவுள்ளது. வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் மானாவாரிக் கடலை அதிகம் விளையும் 12 வட்டங்களில் 500ஆனந்தபாணி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவி 1.75 லட்சம் எக்டேரில் சாகுபடியாகும் நிலக்கடலையில் 1.36 லட்சம் டன்கள் கொள்முதல் செய்யவுள்ளது. இவ்வாண்டு கூட்டுறவுச் சங்கங்கள் திருவண்ணாமலைப் பகுதியில் 33 அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் 116 கிராமங்களில் 2427 எக்டேர் கடலை விளையும் பரப்பளவையும் 1839 உறுப்பினர்களையும் கொண்டு செயல்படுகின்றன. 21 விளக்கப்பண்ணைகள் அமைத்தும், 1000 எக்டேரில் மானிய உதவியோடு பூச்சி மருந்து தெளித்தும், மற்றும் விதை வழங்கியும் இணையம் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுத்துள்ளது. விவசாயிகளின் விளைபொருளுக்கு அங்காடி விலையினில் கிராமத்திலேயே கொள்முதல் செய்து வழங்குவதோடு, சங்கத்தின் இலாபத்தில் 50 சதம் வரை ஊக்கத்தொகையாக வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. தலைமைச் செயலரின் விழுமிய தலைமையில் இயங்கும் இவ்விணையம் விரைவில் திட்டப் பகுதிகளில் வரவேற்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்நோக்கலாம்.



# கூட்டுறவுக் கடன் வசதி

குறுகிய காலக் கடன் வசதி அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் 16 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில் சுமார் 4,700 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களையும் கொண்ட மூன்றடுக்குகளைக் கொண்டுள்ளது. ஓராண்டிற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய குறுகிய காலக் கடன்களைச் சாகுபடி செலவிற்காகவும், மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய மத்தியக் காலக் கடன்களை வேளாண்மையைச் சார்ந்த துணைத் தொழில்களுக்காகவும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. விவசாய உற்பத்திக்கான குறுகிய காலக் கடன்கள் மற்றும் துணைத் தொழில்களுக்கான மத்தியக் காலக் கடன்களை வழங்குவதில் 1977-78ஆம் ஆண்டு வரையில் சீரான முன்னேற்றம் இருந்தது. அந்த ஆண்டில், குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களாக மொத்தம் 127.13 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இத்தொகை இது வரையில் வழங்கப்பட்ட அளவை விட அதிகமானதாகும். பின்னர், கடன் வழங்குவதில் கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு ஆண்டிலும் சுணக்கம் ஏற்பட்டது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 1980-81 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 16 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வசூலித்தன. தவணை தவறிய கடன்களை வெகுவாகக் குறைப்பதற்காக, வசதியான கடன்தாரர்களிடமிருந்து ஜப்தி நடவடிக்கை மூலம தவணை தவறிய கடன்களை வசூலிக்க, 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம்முதல் வாரத்தில் அரசு அனுமதி அளித்தது. தவணை தவறிய கடன்களை வசூலிக்க எடுத்த தீவிர முயற்சிகளாலும், மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் கொடுத்த பூரண ஒத்துழைப்பினாலும் ஏப்ரல் 81 முதல் ஜூன் 81 வரையான மூன்று மாதக் குறுகிய காலத்தில், மத்திய கூட்டுறவு வங்கிகள் 62 கோடி ரூபாயை வசூலிக்க முடிந்தது. 30.6.79ல் 42.7 ஆகவும் 30.6.80ல் 70.5 ஆகவும் இருந்த, மத்திய கூட்டுறவு வங்கிகள் அளவிலான தவணை தவறிய கடன்களின் சதவீதம் 30.6.81ல் 31.8 அளவிற்குக் குறைக்கப்பட்டது. இவ்வாறாக, இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் அளவுகளைப் பெறுவதற்கான தகுதியை அடைந்ததோடு, அவ்வகை அளவுகளின் பணத்தைப்பெறுவதற்கும் மத்திய கூட்டுறவு வங்கிகள் தகுதி பெற்றன. இதன் விளைவாக 1981-82ஆம் ஆண்டில், '77.20 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய காலக் கடன்களையும், 9.79 கோடி ரூபாய் அளவிற்கு நடுத்தரக் காலக் கடன்களையும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்க முடிந்தது.

**ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரம் போன்றது கூட்டுறவு இயக்கம். ஒரு ஆணி கழன்றுவிட்டாலும் மொத்தத்தில் பாழ்பட்டுப் போய்விடும்.**

**— பேரறிஞர் அண்ணா**

**நீண்ட காலக் கடன்கள்:**

தமிழக விவசாயிகளின் விவசாயக் காரியங்களுக்கான நீண்ட காலக் கடன் தேவைகள் இம்மாநிலத்திலுள்ள வட்டம் அல்லது ஒன்றிய அளவிலான 182 பிரதம

நிலவள வங்கிகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இந்த வங்கிகள் சிறுபாசன, சிறுபாசனமில்லாத மற்றும் பலதரப்பட்ட காரியங்களுக்குக் கடன்களை வழங்குகின்றன. 1981-82ஆம் ஆண்டில் இந்த வங்கிகள் மூலம் 5.52 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டன.

**நகைக் கடன்கள்:**

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு, நகைகளின் ஈட்டின் பேரில், நுகர்வுக் கடன்களை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த வகைப் பிரிவினர், தேவையான கடன்களைப் பெறத்தக்க வகையில், சவரன் ஒன்றுக்கு 800 ரூபாய் வரையில் கடனின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வகைக் கடன்களின் மீதான வட்டி வீதம், ஆண்டொன்றுக்கு 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1981-82க்கான குறியீடு 130.00 கோடி ரூபாயாக இருக்க, 179.86 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்களை வழங்கியுள்ளன. இது மாநிலத்திலுள்ள கடன் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை செய்யாத சாதனையாகும்.

**நலிந்த பிரிவினருக்குத் தொழில் கடன்கள்:**

நலிந்த பிரிவினரின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக, இவ்வகைப் பிரிவினர், ரிசர்வ வங்கி குறித்துள்ள விரிவான 22 சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களைச் செய்வதற்காகக் கடன்கள் வழங்குகின்ற இன்னொரு திட்டம் குறிப்பிடத்தக்கதாகும். கிராமப் புறத்தில் 2,500 ரூபாய்க்கும், நகர்ப்புறத்தில் 3,000 ரூபாய்க்கும் அதிகப்படாமல் வருமானம் உள்ளவர்களுக்கு இவ்வகைக் கடன்கள் வழங்கப்படுகின்றன. நடைமுறை மூலதனத்திற்கு 2,000 ரூபாயும், நிரந்தர (Block) மூலதனத்திற்கு 5,000 ரூபாயும் அதிகப் பட்சக் கடனாக வழங்கப்படுகிறது. இக்கடன்கள் 5 ஆண்டிற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை. இவற்றின் மீதான வட்டிவீதம் 4% இந்தச் சிறப்பு வகைக் கடன்களால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படுகின்ற வட்டிக் குறைவை ஈடுகட்ட, மாநில அரசு மான்யம் வழங்க இசைந்துள்ளது. நலிந்த பிரிவினருக்கான இத்தொழிற் கடன்களை தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 64 நகரக் கூட்டுறவு வங்கிகள், மற்றும் 26 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. 1981-82ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 83 இலட்ச ரூபாய்க்கு இவ்வகைக் கடன்களை வழங்கியுள்ளன.

**மலைவாழ் பழங்குடியினருக்குக் கடன்கள்:**

மாநிலத்திலுள்ள 12 மலைவாழ் பழங்குடியினர் 'லேம்ப்' (LAMP) கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயத்திற்கான குறுகிய காலக் கடன்களையும், கறவை மாடுகள் வளர்த்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் முதலிய துணைத் தொழில்களைச் செய்வதற்கான நடுத்தரக் காலக் கடன்களையும், நுகர்வுக் கடன்களையும் பழங்குடி உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்றன. இந்தக் கடன்கள் சலுகை வட்டியில் அதாவது ஆண்டிற்கு 4 சத வீதத்தில் கொடுக்கப்படுகின்றன. 1981-82ஆம் ஆண்டில், 48.46 இலட்சரூபாய்க்கு இவ்வகைக் கடன்கள் கொடுக்கப்பட்டன.

**பயிர் ஈட்டுறுதித் திட்டம்**

வெள்ளம், வறட்சி, பூச்சிகள் முதலிய இயற்கையின் சீற்றங்களினால் பயிர் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டு விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படுவதைத் தடுக்க, விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை முன்னோடி அடிப்படையில் செயற்படுத்துகின்றன. 1979-80ஆம் ஆண்டு நெல் 2-ஆம் பயிருக்கு இத்திட்டம் முதன் முதலில் துவங்கப்பட்டு, 1980-ஆம் ஆண்டு நெல் முதல் பயிருக்கும், 1980-81-ஆம் ஆண்டு நெல் 2-ஆம் பயிருக்கும், 1981-ஆம் ஆண்டு நெல் முதல் பயிருக்கும் 1981-82ஆம் ஆண்டு நெல் 2-ஆம் பயிருக்கும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. பொது ஈட்டுறுதிக் கழகமும் (General Insurance Corporation) தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதியும், பிரிமியத் தொகை மற்றும் ஈட்டுத் தொகையை 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. 1980-81 மற்றும் 1981-82ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்ச ரூபாய் வீதம், தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதிக்கு ஈட்டுத் தொகையை வழங்க மாநில அரசு மான்யம் வழங்கியுள்ளது

**விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

விவசாயிகளின் சில பிரச்சினைகளை ஆராய, மாநில அளவிலான உயர்மட்டக் குழு ஒன்றை அரசு நியமித்தது. கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில், இக்குழுவின் பரிந்துரைகளின் பேரில், 1979 மே மாதத்தில், விவசாயிகளுக்குச் சில நிவாரணங்களை அரசு அளித்தது. 30-6-78ல் நிலுவையுள்ள அனைத்துக் கடன்களின் மீதான அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தும், 1977-78ல் அளிக்கப்பட்ட அபராத வட்டியைத் திருப்பிக் கொடுத்தும், மாற்றியமைக்கப்பட்ட/தவணை நீட்டிக்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்களின் மீதான சாதாரண வட்டியைத் தள்ளுபடி செய்தும் சலுகைகள் வழங்கப்பட்டன. இந்தச் சலுகைகளின் மூலமாக 4.85 கோடி ரூபாய் அளவிற்கு 5.21 இலட்ச நபர்கள் பயனடைந்தனர். இதைத் தவிர, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றியமைக்கப்பட்டு



தவணை நீட்டிக்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்கள் 3 முதல் 6 ஆண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டன. 2.35 இலட்சக் கடன்தாரர்களின் 52.72 கோடி ரூபாய்க்கான கடன்கள் இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும், இக்கடன்களின் மீதான வட்டி, சிறு விவசாயிகளுக்கு 10.5 % ஆகவும், இதர விவசாயிகளுக்கு 12 % ஆகவும் குறைக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த வறட்சி முதலிய வற்றால் பாதிக்கப்பட்ட, 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலமுடைய -நிலத்தில் பயிரிடுகின்ற சிறு விவசாயிகளின் கடன் சுமை அதிகமாக இருப்பதாக அரசு கருதியது. இந்த வகைச் சிறு விவசாயிகளுக்கு மேலும் நிதியுதவி வழங்க 1980ல் அரசு முடிவு செய்து, 31-3-80ல் நிலுவையுள்ள மாற்றப்பட்ட கடன்களை, வட்டி, அபராத வட்டி முதலியவை உட்பட, திருப்பிச் செலுத்தியது. இவ்வாறாக 4.52 இலட்ச உறுப்பினர்களின் 49,64 கோடி ரூபாயை அரசு திருப்பிச் செலுத்தியுள்ளது. 1.7.75 முதல் 31.3.80 வரையில், இவ்வகைக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு அத்தொகைகளை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்க, 1981-82ல் அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. இவ்வாறாக, 9.29 இலட்ச சிறு விவசாயிகளுக்கு, 23.59 கோடி ரூபாய் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகளின் பிரச்சினைகளை மேலும் தீர்க்க எண்ணி 1981ல் அரசு மேலும் ஒரு சலுகையை அளித்தது. இதன் வழியாக, 31-12-80ல் நிலுவையுள்ள குறுகிய காலக் கடன்களை முழுவதுமாக 30.6.81க்குள் திருப்பிச் செலுத்துகின்ற சிறு விவசாயிகளுக்குச் சாதாரண மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யவும், 1-4-80க்குப் பிறகு செலுத்தியிருந்த சாதாரண மற்றும் அபராத வட்டியைத் திருப்பிக் கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. இதர விவசாயிகளைப் பொறுத்த மட்டில், குறுகியகாலக் கடன்களைச் சாதாரண வட்டியுடன் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு அபராத வட்டி மட்டும் தள்ளுபடி செய்யவும் திருப்பிக் கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. வட்டிச் சலுகையைப் பெறுவதற்கான கடைசி நாள் 31-12-81 வரை நீட்டிக்கப்பட்டது. இது 1-7-81 முதல் கடனைப் பைசல் செய்கின்ற தேதி வரையான சாதாரண வட்டி அல்லது சாதாரண வட்டி மற்றும் அபராத வட்டியையும் செலுத்துவதைப் பொறுத்ததாகும். வட்டிச் சலுகையை 8.46 இலட்சக் கடன்தாரர்கள் 14.60 கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றனர்.

கடன்களைக் குறித்த தினத்தில் சிறுவிவசாயிகள் செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக, 1981-82ல் குறுகிய காலக்கடன்களையும், நடுத்தரக் காலக் கடன் தவணைகளையும் குறித்த தினம் அல்லது அதற்கு முன் திருப்பிச் செலுத்துகின்ற சிறு விவசாயிகளுக்கு 2 % வட்டித் தள்ளுபடி என்ற சலுகையை அரசு அளித்துள்ளது. வட்டித் தள்ளுபடிச் சலுகையை 7,155 சிறு விவசாயிகள் 95,309 ரூபாய் அளவிற்குப் பெற்றுள்ளனர். வட்டித் தள்ளுபடி, நடப்பு ஆண்டு 1982-83க்கும் நீட்டிக்கப்படுகிறது.

வறட்சி நிவாரணப் பணிகளுள் ஒன்றாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு நெல், பருப்பு வகைகள், தானிய வகைகள், குளிர்காலப் பருத்தி, நிலக்கடலை மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர் வகைகளுக்கான உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளைக் குறைந்த விலையில் விற்பதற்கான மான்யத்தை அரசு அளித்துள்ளது. சிபாரிசு செய்யப்பட்ட அளவிற்குட்பட்டும், நபர் ஒன்றுக்கு அரசு நிர்ணயித்துள்ள உச்ச அளவிற்குட்பட்டும், உரம், பூச்சி கொல்லி மருந்தின் விலையில் 25% சிறு விவசாயிகளுக்கும் 33 1/3 % மிகச்சிறிய விவசாயிகளுக்கும் மான்யமாகக் கொடுக்கப்பட்டது. இச் சலுகை 31.12.81 வரை நீட்டிக்கப்பட்டு 304 இலட்ச ரூபாய் மான்யமாக அளிக்கப்பட்டது.

1974-78 ஆண்டுகளில், இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட கடன்தாரர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, பாதிக்கப்பட்ட கடன்தாரர்களின் கடன் தவணைகளைத் தள்ளி வைக்கவும்-நீட்டிக்கவும், இந்திய ரிசர்வ் வங்கி மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிக்கு அனுமதியளித்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கடன்தாரர்கள் தங்களது சாதாரணக் கடன் தவணையுடன் நீட்டிக்கப்பட்ட கடன் தவணைகளையும் கட்டுவதில் சிரமப்பட்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கடன்தாரர்களுக்கு மேலும் நிவாரணம் அளிப்பதற்காக, விவசாய மறுநிதிக் கழகம்-இந்திய ரிசர்வ் வங்கி, 1974-78ல் நீட்டிக்கப்பட்ட கடன் தவணைகளின் நிலுவையை முடக்கி, சுலபமாகத் திருப்பிச் செலுத்துவதற்காக ஏற்றவாறு கால அவகாசம் கொடுத்துள்ளது. 75.84 கோடி ரூபாய் அளவிற்கு, 1.39 இலட்சக் கடன்தாரர்கள் இந்த வகையில் பயனடைந்துள்ளனர்.

நிலவள வங்கிகளின் கடன்தாரர்களின் கிணறுகள் பொய்த்த நிலையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க 'பொய்த்த கிணறுகள் நிதி' மாநில நிலவள வங்கி அளவில் ஏற்படுத்தப்பட்டது. பொய்த்த கிணறுகள் நிதியைப் பராமரிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின்படி, 1-4-68க்குப் பின்னர் நிலவள வங்கிகளிலிருந்து புதிய கிணறுகளுக்கான கடன்பெற்று, அக்கிணறுகள் பொய்த்த கடன்தாரர்களுக்கு இந்நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுகிறது. 1981-82 ல், 23.57 இலட்ச ரூபாய் அளவிற்கு 771 பொய்த்த கிணறுகளுக்காக நிதியுதவி அளிக்கப்பட்டது.

நிலவள வங்கிகளின் கடன்தாரர்களில் சிறு விவசாயிகளுக்குப் புதுக்கிணறு தோண்டும் செலவில் 25 சதவீதம் 500 ரூபாய்க்குட்பட்டு மான்யமாக அளிக்கப்படுகிறது. 14-7-81க்குப் பின்னர் வழங்கப்பட்ட கடன்களுக்கு, இந்த மான்யத் தொகை 1,000 ரூபாயாகத் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. 1981-82ல், 551 புதியக் கிணறுகளுக்காக மூன்று இலட்ச ரூபாய் மான்யமாக அளிக்கப்பட்டது. மலைவாழ் பழங்குடியினருக்குப் புதுக்கிணறுக்கான செலவில் 50 சதவீதம், 3,500 ரூபாய்க்கு உட்பட்டு மான்யமாக அளிக்கப்படுகிறது. 1981-82ல் திருச்சி மாவட்டத்தில் இரண்டு மலைவாழ் உறுப்பினர்களுக்கு 4,800 ரூபாய் மான்யமாகக் கொடுக்கப்பட்டது.




# தனிப்பெரும் தன்னிறைவுத் திட்டம்!

சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கி 30 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும், ஊராட்சி நிர்வாக முறை 1959-ஆம் ஆண்டிலேயே தொடங்கப் பெற்று, செயல்பட்டு வந்த போதிலும் தமிழக ஊர்ப்புறங்களின் நிலை, கட்டுக்கோப்பாக வளர்ச்சியடையவில்லை என்பது அனைவரும் அறிந்த ஓர் உண்மையாகும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கிய அங்கம் வகிக்கின்ற குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய வேண்டியது அரசின் தலையாய பொறுப்பு என்பதுடன் மக்களின் நல்வாழ்வைப் பேணும் ஓர் அடிப்படைத் திட்டமாகவும் இது அமைகிறது.

தவிர, மக்களின் முக்கியத் தேவைகளான நல்ல சாலை வசதிகள், சிறுபாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், தாய்-சேய் நல நிலையங்கள், ஊரக மருந்தகங்கள், சிறு பாசன மேம்பாடுகள் மற்றும் ஆதி திராவிட மக்களுக்கான மயானச் சாலைகள், அவர்களுக்கான வீட்டு வசதிகள் ஆகியவை இதுகாறும் ஒரு காலக் கட்டத்திற்குள் நிறைவேற்றப்படாமலேயே விடப்பட்டுவிட்டன.

எனவே, கிராம மக்கள் அனைவருக்கும் அடிப்படை வசதிகளை அளித்து அவர்களின் சமூக வாழ்விலும் பொருளாதார நிலையிலும் ஓர் உன்னத நிலையை அவர்கள் எய்த வேண்டும் என்ற பெரும் நோக்கங்களைக் கொண்டு மூன்றாண்டுக் கால அளவிற்குள், ஒன்பது பணிகளையும் ஒருமித்து முடிக்க வேண்டுமென்று உருவாக்கப்பட்டதே தன்னிறைவுத் திட்டமாகும்.

தமிழகத்தில் 378 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அவை அனைத்திலும் தன்னிறைவுத் திட்டத்தை ஒரே காலத்தில் நிறைவேற்ற வேண்டுமென்பது தான் அரசின் ஆர்வமாக அமைந்தது.

ஆனால், தளவாடப் பொருள்கள், சிமெண்ட், எஃகு போன்ற அடிப்படை கட்டடப் பொருள்கள் போதுமான எண்ணிக்கையில் அனுபவம் வாய்ந்த பொறியாளர்கள், அலுவலர்களின் தேவை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது, தன்னிறைவுத் திட்டத்தை மூன்றாண்டுகளில் படிப்படியாக நிறைவேற்றுவதே சாலச் சிறந்தது என்று நல்லதொரு முடிவெடுக்கப்பட்டது. இதற்கு நிதி வசதியும் ஒரு காரணமாக அமையக் கூடும்.

தொடக்கக் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்களும், இரண்டாம் கட்டமாக 150 ஒன்றியங்களும் இறுதி நிலையில் 159 ஒன்றியங்களும் திட்ட நிறைவேற்றத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

தன்னிறைவுத் திட்டம் 1980-81 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட 69 வட்டாரங்கள் ஊரக வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்ட வட்டாரங்களாகும்.



1981-82இல் இரண்டாம் நிலை தொடங்கப்பட்டு, 150 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு 219 ஒன்றியங்களில் மக்கள் திட்டத்தின் பயன்களை நுகரத் தொடங்கிவிட்டனர்.

1983ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில் தமிழக கிராமங்கள் தன்னிறைவு பெற்று அனைத்து நல்வாழ்வு, பொருதார அடிப்படை வசதிகளைப் பெற்று சிறுசிறு நகரங்கள் போல் சிறப்புடன் காட்சியளிக்கும்.

இத்திட்டத்தை இத்துணை சிறப்புடன் உருவாக்கி, மூல தளவாடப் பொருள்கள் பெறுவதில் உள்ள சிக்கல்களைக் களையத் தனிப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டு, போதுமான அலுவலர்களைத் தந்து கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கித் தந்த பெருமைகள் அனைத்தும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையே சாரும்.

தன்னிறைவுத் திட்டத் தொடர்பான உயர்மட்ட ஆய்வுக் குழுக் கூட்டங்கள் பல வற்றிற்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே தலைமைப் பொறுப்பேற்று அறிவுரைகளும் ஆலோசனைகளும் நல்கினார்கள்.

இவற்றையெல்லாம் ஒருமித்து நோக்குகையில் தமிழகக் கிராம மக்கள் மீது அரசு கொண்டுள்ள பொறுப்பு நன்கு தெரியும்.

தன்னிறைவுத் திட்டத்தைப் போன்ற மிகப்பெரிய திட்டம் மூன்றாண்டுகளுக்குள் தமிழகமெங்கும் நிறைவேற்றி முடிக்கப்பட வேண்டுமென்ற அரிய திட்டம்- நம் நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் உருவாக்கப்படவேயில்லை. இத்தகைய நன்மைகள் இலட்சம் பயக்கும் திட்டங்கள் நம் மாநிலத்தில் தான் செயலாகும் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மற்ற மாநிலங்கள் -மற்றவர்கள் புருவங்களை உயர்த்தி வியப்படைகின்றனர்.

இறுதி நிலையிலுள்ள 159 ஒன்றியங்களில் 32 கோடி செலவிட்டு 4,000 குடியிருப்புகளில் குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. ஏனைய பணிகளுக்கென 5620.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5495.06 கி.மீ. இணைப்புச் சாலைகளும், மயானப்பாதைகளும் அமைக்கப்படும். மற்ற வேலைகளின் எண்ணிக்கை 16,517 ஆவன.

தற்போது தன்னிறைவை நோக்கி நடைபோடும் தமிழகம் வெகு விரைவில் நம் நாடே வியக்கும் முறையில் தன்னிறைவைப் பெற்ற தமிழகமாகி விடும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமேயில்லை!



தமிழுக்கு ஏற்படுகிற ஆபத்தைத் தடுத்து அதை உலக மொழிகளில் தலை சிறந்த ஒன்றாக ஆக்கும் கடமையில் மாணவர்களுக்கு நிரம்பப் பங்கு உண்டு.

—பேரறிஞர் அண்ணா





# கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி

கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் கிராம மக்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் வழங்குவதற்கென 1976-'77-ஆம் ஆண்டிலிருந்து கிராமிய வீட்டு வசதித் திட்டம் தாலுக்கா மற்றும் கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலமாக அமல்படுத்தப்பட்டது. அரசாணையின்படி 110 தாலுக்கா மற்றும் கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் துவக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுத் தமிழகம் அனைத்தும் அச் சங்கங்கள் செயல்படத் தொடங்கின.

## இரண்டு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான திட்டம்

கிராமப்புறங்களில் அதிக வீடுகள் கட்டும் பொருட்டு, 80 சதவிகிதத்திற்கும் அதிகமாக மக்கள் வாழும் பகுதியில் வீடுகள் கட்டுவதற்காக அரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் வீடுகள் 1978-1979 முதல் ஆரம்பித்து வீடுகள் கட்டி முடிக்க, பின்வருமாறு திட்டமிடப்பட்டது.

| ஆண்டு | கட்டி முடிக்கப்பட்ட முடிககபபட வேண்டிய வீடுகள் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1978—'79 | 10,000 | 300.00 |
| 1979—'80 | 20,000 | 600.00 |
| 1980—'81 | 20,000 | 600.00 |
| 1981—'82 | 25,000 | 750.00 |
| 1982—'83 | 25,000 | 750.00 |

மத்திய திட்டக்குழு தீர்மானித்தபடி, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான காலம் 1978-1983 என்பதனை 1980-1985 என்று மாற்றப்பட்டது. அதன்படி 1980-81 முதல் 1984-'85 வரை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான காலம் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மாற்றப்பட்ட காலத்தைக் கணக்கில்கொண்டும் கிராமப்புறங்களிலிருந்து கிடைக்கும் அதிகப்படியான வரவேற்பினைக் கருத்தில் கொண்டும் இரண்டு இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க மீண்டும் ஒரு திருத்தப்பட்ட திட்டம் ஒன்று பின்வருமாறு வரையறுக்கப்பட்டது.

| ஆண்டு | கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகள் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆதிதிராவிடர் | இதரர் | மொத்தம் |
| 1980—81 | 40,000 | 1200.00 | 34510 | 6321 | 40831 |
| 1981—82 (30-4-82) முடிய | 40,000 | 1200.00 | 18576 | 2227 | 20803 |
| 1982—83 | 40,000 | 1200.00 | | | |
| 1983—84 | 40,000 | 1200.00 | | | |
| 1984—85 | 40,000 | 1200.00 | | | |



இது தொடர்பாக ரூ. 3750-க்குட்பட்ட ஒரே மாதிரி வரை படம் கொண்ட வீடுகளைத்தான் கட்ட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. இதற்கான கடன் ஒரு வீட்டிற்கு ரூ. 3,000 எனக் கட்டுப்படுத்தப் பட்டது.

எல்லாப் பிரதமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்யும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இதற்கான நிதியை அரசுக் கடன்களிலிருந்தும், இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும், பொதுக் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும், மாநில அரசின் பங்கு மூலதனத்திலிருந்தும் மற்றும் உறுப்பினர் சங்கங்களின் இட்டு வைப்பு மூலமாகவும் பெறுகிறது.

**சாதனைகள்**

1980-81-ம் ஆண்டிற்கு இந்தக் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 40,000 வீடுகள் கட்டுவதற்குக் குறியீடு நிர்ணயிக்கப் பட்டது. 1980-81-ஆம் ஆண்டில் சுமார் 1,67,978 கடன் மனுக்கள் பிரதமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிடமிருந்து பெறப் பட்டன. அவைகளின் மதிப்பு ரூ. 4955.92 இலட்சமும் ரூ. 2,942.17 இலட்சம் மதிப்புடைய 96,929 கடன் மனுக்கள் பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களால் அனுமதிக்கப்பட்டு, 40,831 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. (இவைகளில் 34510 வீடுகள் ஆதி திராவிடர்களாலும், 6321 வீடுகள் இதர இனத்தவர்களாலும் கட்டப்பட்டன).

1981-'82-ஆம் ஆண்டிற்கும் 40,000 வீடுகள் கட்டி முடிக்க குறியீடு நிர்ணயிக்கப் பட்டு, 30-4-1982 முடிய ரூ. 2460 இலட்சம் மதிப்பீட்டில் 79801 கடன் மனுக்கள் தன்னிறைவுத் திட்டங்கள் செயல்படும் இடங்களிலிருந்து பெறப்பட்டன. ரூ. 589.73 இலட்சம் மதிப்புடைய 19076 கடன் மனுக்கள் பிரதமக்கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களால் அனுமதிக்கப்பட்டு, ரூ. 674.62 இலட்சம் கடனாகப் பட்டுவாடா செய்யப்பட்டது. இது வரை 20,803 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(இவைகளில் ஆதி திராவிடர்களால் 18576 வீடுகளும், இதரர்களால் 2227 வீடுகளும் கட்டப்பட்டன).

**தன்னிறைவுத் திட்டம்**

1980-'81-ஆம் ஆண்டில் 69 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப் பட்டு, இந்த ஒன்றியங்களில் 11948 வீடுகள் ரூ. 357.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1981-'82-ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் 150 ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 100 வீடுகள் வீதம் கட்டி முடிக்க குறியீடு நிர்ணயிக்கப் பட்டு 1981-'82-ல் 17969 வீடுகள் (மதிப்பு ரூ. 630.95 இலட்சம்) கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் 15876 வீடுகள் ஆதி திராவிடர்களாலும், 2093 வீடுகள் இதரர்களாலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.





# குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அப்போது எடுத்த சமூகப் பொருளாதாரக் கணக்கின்படி சென்னை மாநகரில் 1202 குடிசைப் பகுதிகளிலுள்ள, 87210 குடிசைகளில் 1,63,804 குடும்பங்கள் சுகாதார வசதிகளின்றி வசித்து வந்தன. ஆண்டுதோறும் குடிசை வாழ் மக்கட்தொகை 2.5 சதவீதம் பெருகி வருகிறது. குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான அண்ணாவின் அரசு அமைந்த பிறகுதான், புது வேகமும் புதுப்பொலிவும்பெற்று, திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குடிசைவாழ் மக்களின் துயர்துடைக்க தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

1. குறித்த காலத்திற்குள் சென்னை மாநகரத்தில் உள்ள குடிசைப் பகுதிகளை இயன்றவரை அகற்றி அங்கு வசிப்பவர்களுக்குச் சுகாதார வசதியுடன் கூடிய குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பது.

2. புதிதாக குடிசைப் பகுதிகள் உருவாவதைத் தடுப்பது அல்லது அப்படி உருவான குடிசைப் பகுதிகளை அகற்றுவது மற்றும் நில ஆக்கிரமிப்புகளைத் தடுப்பது.

3. தனியார் நிலங்களில் வசிக்கும் குடிசைவாழ் மக்களை நிலச் சொந்தக்காரர்களால் வெளியேற்றப்படாமல் தடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது.

4. அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு மின்விளக்கு, மழைநீர் வடிகால், பாதாளச்சாக்கடை, பொதுக் கழிப்பறை, குளியலறை, சாலைகள் போன்ற வசதிகளை எல்லாக்குடிசைப் பகுதிகளிலும் அமைப்பது.

## குடிசை மாற்றுத் திட்டம்

குடிசைப் பகுதிகளை அகற்றி அங்கு வாழும் மக்களை அவ்விடத்திலேயோ அல்லது அவ்விடத்திற்கு அருகிலேயோ குடியிருப்புகள் கட்டி, குடியமர்த்துவதே இத் திட்டத்தின் அடிப்படை நோக்கம். இக்குடியிருப்புகளுக்குத் தற்போது ரூ. 20 சலுகை வாடகையாக வசூலிக்கப்பட்டு வருகின்றது.

இதுகாறும் கட்டிமுடிக்கப்பட்ட குடியிருப்புகளின் விவரம் கீழ்வருமாறு:

| ஆண்டு | கட்டப்பட்ட குடியிருப்புகள் | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சங்கள்) |
|---|---|---|
| 1980வரை | 39,578 | 3,714.92 |
| 1980-81 | 3,212 | 330.06 |
| 1981-82 | 2,584 | 271.91 |
| மொத்தம் | 45,374 | 4,316.89 |



1982-83 ஆண்டில் ரூ. 320 இலட்சங்கள் செலவில் 2200 குடியிருப்புகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

### தவணை முறையில் வீடு வழங்கும் திட்டம்

குடியிருப்புகளில் வசித்துவரும் குடும்பங்கள் விரும்பினால் இக்குடியிருப்புகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். மாதந்தோறும் ரூ. 30லிருந்து ரூ. 45 வரை செலுத்தி 20 ஆண்டுகளில் வீட்டு விற்பனைப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளலாம்.

### விரைவு படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் 1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் 10 குடும்பங்களுக்கு ஒரு கழிவுநீர் அறை, 20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய், 40மீ. நீளமுள்ள பாதைக்கு ஒரு மின் விளக்கு போன்ற வசதிகள் செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்த குடும்பங்களின் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | பயன் அடைந்த குடும்பங்கள் | திட்டத்தின் மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1980-ஆம் ஆண்டுவரை | 28,700 | 221.81 |
| 1980—81 | 6,000 | 49.38 |
| 1981—82 | 6,000 | 49,21 |
| | 40,700 | 320.40 |

1982-83ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ. 50 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 6000 குடும்பங்கள் பயன் பெறுவர்.

### உலகவங்கித் திட்டம்-பகுதி-1

அடிப்படை வசதிகள் மட்டுமில்லாமல் குடிசைவாழ் மக்களுக்கு அவர்கள் வாழும் இடத்தைச் சொந்தமாக்கிக் கொடுத்து அவர்களே சொந்தமாக வீடுகட்டிக் கொள்ள கடன் உதவியும் பெற வழிவகை செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தினால் பயன் அடைந்த குடும்பங்களின் விவரம் வருமாறு:

| ஆண்டு | பயன் அடைந்த குடும்பங்கள் | திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1980 ஆண்டுவரை | 18,338 | 282,60 |
| 1980-81 | 7,500 | 91.70 |
| 1981-82 | — | 53.95 |
| | 25,838 | 428.25 |

இத்திட்டம் 1981-82ஆம் ஆண்டோடு முடிவுபெற்றது.



### உலக வங்கித் திட்டம்-பகுதி-2

இத்திட்டம் 1981-ல் துவங்கப்பட்டது. 1981-82ஆம் ஆண்டில் 10,000 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 49 குடிசைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 101.28 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளன.

1982-83ஆம் ஆண்டு 10,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ. 2 கோடி செலவிடப்படும். அடுத்த மூன்று ஆண்டுகளில் ரூ. 17.1 கோடி செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டு இறுதிக்குள் 50,000 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடையும். உலக வங்கிப் பகுதி 1, 2 திட்டத்தின் கீழ் 118 பாலர்பள்ளிகளும், 3 உயர்நிலைப் பள்ளிகளும், 8 ஆரம்பப்பள்ளிகளும், 47 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன.

### நிலப்பட்டா மற்றும் வீடு கட்டுவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குக்கடனுதவி

உலக வங்கித் திட்டம் பகுதி 1 மற்றும் பகுதி 2,இன் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நில உரிமையும் மற்றும் தாங்களாகவே வீடுகள் கட்டுவதற்குக் கடனுதவியும் தரப்படும். கடனுதவி விவரம் வருமாறு:

| மாதவருமானம். | கடன்தொகை |
|---|---|
| ரூ. 201—250 | ரூ. 1500 |
| ரூ. 250—300 | ரூ. 2500 |
| ரூ. 300க்கு மேல் | ரூ. 3500 |

மாத வருமானம் ரூ.200க்குக்குறைவாக உள்ளவர்களுக்கு ரூ.600 மான்யமாக வழங்கப் படும். மேற்கண்டவாறு கடன் அளிப்பதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டு முடிய 1440 குடும்பங்களுக்கு ரூ. 42.14 இலட்சங்கள் கடனாக வழங்கப் பட்டது. 6600 குடும்பங்களுக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கித் திட்டத்தால் பயன்பெறும் 75,000க்கும் மேற்பட்ட குடும்பங்களிட மிருந்து மனைக்கான கிரயம், வீட்டுக்கடன் மேம்பாட்டுக் கடன் போன்றவைகள் எளிய தவணை முறையில் திருப்பிப் பெறப்படும். முழுமையாகக் கடனைத் திருப்பிக் கொடுப்ப வர்களுக்கு மனை விற்பனைப் பத்திரம் வழங் கப்படும்.

### வாரியத்தின் வேறு-சில பணிகள்

அ. பல பொதுத் தொண்டு நிறுவனங் களின் உதவிகளோடு குடிசைவாழ் மக்களுக்கு மருத்துவ வசதி, முதி யோர் கல்வி, தாய் சேய் நல வாழ்வுத் திட்டங்கள் செய்து கொடுக்கப்படு கின்றன.

ஆ. குடிசைவாழ் குடும்பங்கள் தங்கள் வருமானத்தை கணிசமாக உயர்த்திக் கொள்ள இளைஞர்களுக்கு அரசு, தனியார் நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 3866 பேர் தையல், பூ வேலை, தச்சு வேலை, ரேடியோ, தொலைக் காட்சிப் பெட்டி பழுது பார்த்தல் போன்ற வேலைகளில் தேர்ச்சி பெற் றுள்ளனர்.

இ. சிறு வியாபாரம் நடத்தவும், கைத் தொழில்கள் செய்யவும் தேவைப் படும் மூலதனங்கள் சுமார் ரூ. 200 லிருந்து 2000 வரை வங்கிகளிலிருந்து 4% வட்டியில் கடன் உதவி பெறுவ தற்கு ஏற்பாடுகள் செய்யப்படு கின்றன. இதுவரை 1153 பேர் இத் திட்டங்களின் மூலம் ரூ. 8.71 இலட்சங்கள் கடன்பெற்று சிறு தொழில் நடத்தி வருகின்றனர்.

ஈ. குடிசைவாழ் மக்களுக்கு சுகாதாரம், கல்வி, குடும்பக்கட்டுப்பாடு இவற் றின் அவசியத்தை வலியுறுத்தும் வண்ணம் திரைப்படங்கள் காண்பிக் கப்படுகின்றன.

உ. குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் 27 இடங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

ஊ. குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள குடி சைப் பகுதிகளுக்கு நான்கு லாரிகள் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வினியோகிக்கப்பட்டு வருகின்றது.

### ஒரு கண்ணோட்டம்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடி வில் 91,500 குடும்பங்கள் கீழ்க்கண்ட திட்டங் களால் பயன்பெறுவர்.

| | |
|---|---|
| 1. குடிசை மாற்றுத் திட்டம் | 11,500 |
| 2. விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத்திட்டம் | 30,000 |
| 3. உலக வங்கித் திட்டம் | 50,000 |
| | 91,500 |

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பக் காலத்தில் 48,100குடும்பங்கள் வாரி யத்தின் பணியை எதிர்நோக்கி இருப்பர். மேலும் மக்கட்தொகைப் பெருக்கத்தால் 67,800 குடும்பங்கள் அதிகரிக்கும் என மதிப் பிடப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் குடிசைமாற்றுப் பகுதிகளின் தற்போது உள்ள வேகத்தைச்சிறிது அதிகப் படுத்துவதன் மூலம் 1991ஆம்ஆண்டில் குடிசை மாற்று மற்றும் மேம்பாட்டுப் பணிகளின் பலன்கள், சென்னை மாநகர எல்லாக் குடிசை வாழ் மக்களுக்கும் கிட்டிவிடும் என எதிர் பார்க்கலாம்.





# குழந்தைகள் நோய்த்தடுப்பில் புதிய முன்னேற்றம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்னும் பழமொழி தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக வழக்கிலுள்ளது. நோய் வந்த பின் சிகிச்சை அளிப்பதைவிட நோய் வருமுன் காத்தல் சாலச் சிறந்தது. ஏனெனில் நோய் வராமல் காத்தல் எளிதானது மட்டுமன்றி சிக்கனமானதும்கூட.

*1981*-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 483 இலட்சம். ஆண்டொன்றுக்கு 13 இலட்சம் குழந்தைகள் தமிழ்நாட்டில் பிறக்கிறார்கள். இக்குழந்தைகள் நாட்டின் வருங்காலக் குடிமக்களாவர். இவர்களுக்கு சாதாரணமாக ஏற்படக் கூடிய உடல் நலிவுகளைப் போக்கிட அரசு எடுக்கும் நடவடிக்கைகள் அவர்கள் வருங்காலத்தில் நல்ல உடல் நலத்துடன் அறிவு வளர்ச்சி பெற்றவர்களாகவும் விளங்கி, தம்க்கும் தம் நாட்டிற்கும் பயனளிக்கக்கூடிய வகையிலே கடமையாற்ற இயலும். ஒரு நாட்டின் மக்களுடைய உடல் நிலை நல்ல தரத்தில் அமைந்திருந்தால் அது அந்நாடு பொருளாதாரத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு ஒரு சான்றாகும்.





ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை உழுது, நீர் பாய்ச்சி, விதை விதைத்து, களையெடுத்து, தானிட்ட பயிர் நன்கு வளர்ந்து இருப்பதைப் பார்க்கும்போது மட்டற்ற மகிழ்ச்சி அடைவான். அதே பயிர் கருகிவிட்டால் மனமுடைந்து வேதனையில் ஆழ்வான். அதேபோல், இந்நாட்டு மழலைச் செல்வங்கள் நல்ல உடல் நலத்துடன் வளர்ந்து தமக்கும் தம் குடும்பத்தார்க்கும் பின் நாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் கடமையாற்றினால் அவர்களைப் பெற்ற தாய் தந்தையர் மகிழ்ச்சிப் பெருங்கடலில் நீந்துவர். அதே குழந்தைகள் நோயினால் பீடிக்கப்பட்டு, உடல் ஊனமுற்று, கண் பார்வையிழந்து இருப்பதைப் பார்க்கும்போது அவர்களின் தாய், தந்தையர் மீளாத்துயரத்தில் ஆழ்ந்திடுவர். பொருளாதாரத் துறையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளின் காரணமாகவும் போதுமான கல்வியறிவு இல்லாமையாலும் சமூகத்திலுள்ள பின்தங்கிய நலிவுற்ற பிரிவினரைச் சேர்ந்த பெரும்பான்மையான தாய், தந்தையர் தங்கள் மழலைச் செல்வங்களுக்கு இளம் வயதில் ஏற்படக்கூடிய நலிவுகளிலிருந்து தக்க பாதுகாப்பு அளிக்க இயலாத நிலையில் உள்ளனர். இங்குதான் அரசு தன்னுடைய கடமையைச் செய்யவேண்டியுள்ளது.

பொதுவாக, காசநோய், தொண்டை அடைப்பான் ( DIPTHERIA ) கக்குவான், இளம்பிள்ளை வாதம், இரணசன்னி, தட்டம்மை போன்ற வியாதிகளால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வியாதிகளிலிருந்து அவர்களைக் காக்க, கீழ்க்கண்ட திட்டங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன :



| | |
|---|---|
| 1. குழந்தை பிறந்தது முதல் மூன்று மாதத்திற்குள் | பி. ஸி. ஜி. என்னும் காசநோய் தடுப்பு |
| 2. மூன்று மாதம் முதல் ஒரு வருடத்திற்குள்ளாக | மூன்று நோய் தடுப்பு மருந்து (D.P.T.) மூன்று தவணையில் |
| | (அ) இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து—மூன்றுதவணையில் |
| | (ஆ) மணல்வாரி அம்மை (Measles) தடுப்பு மருந்து (ஒருதவணை) |
| 3. 2.5 முதல் 3 வயது வரை | (அ) மூன்று நோய் தடுப்புக்கு வீரியம் ( Booster ) |
| | (ஆ) இளம்பிள்ளை தடுப்புமருந்து வீரிய தவணை. |
| 4. 5 வயது (பள்ளி) | (அ) D.T. (இரு நோய்) தடுப்பு மருந்து |
| | (ஆ) T.A. (டைபாய்டு) தடுப்பு மருந்து. |
| 5. 10 வயது (பள்ளி) | T. T. (இரணசன்னி தடுப்புமருந்து) ஒரு தவணை. |

தமிழ்நாட்டில் 1980-81, 1981-82-ஆம் ஆண்டுகளில் பல்வேறு வகையான தடுப்பு மருந்து அளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு :—



| | | 1980—81 | 1981—82 |
|---|---|---|---|
| 1. பி. ஸி. ஜி. | ... | 13,16,407 | 13,30,456 |
| 2. டி.பி.டி. | ... | 5,98,238 | 7,07,881 |
| 3. இளம்பிள்ளை வர்தத் தடுப்பு | ... | 1,39,912 | 2,19,012 |
| 4. டைபாய்டு தடுப்பு | ... | 91,395 | 3,13,563 |
| 5. கருவுற்றவர்களுக்கு சன்னித் தடுப்பு மருந்து | ... | 3,14,740 | 3,50,851 |
| 6. மணல்வாரி தடுப்பு மருந்து | | ... | 7,60,000 |

தாய்-சேய் நிலையங்களில் கருவுற்றுள்ள பெண்களுக்குத் தங்களுடைய உடல் நிலையை சரியாக வைத்துக் கொள்வதற்குத் தேவையான பரிசோதனைகள் செய்து, பிறகு அவர்களுக்குத் தேவையான மருந்துகள், உணவு வகைகளைப் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு, டேட்டனஸ் என்னும் இரணசன்னிக்குத் தடுப்பு மருந்தும் கொடுக்கப்படுகிறது. இத்தடுப்பு மருந்தின் மூலமாக தாய்க்கு மாத்திரம் அல்லாமல், கருவிலுள்ள சிசுவுக்கும், இரணசன்னியைத் தடுக்கக்கூடிய சக்தி அளிக்கப்படுகிறது. ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள தாய்-சேய் நல நிலையங்கள் நீங்கலாக, தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 932 தாய்-சேய் நல நிலையங்களைக் கிராமப் பகுதியில் அரசு நிறுவியுள்ளது.

இது தவிர, இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த ஒரு பெரிய குழந்தை நல மருத்துவமனையில் தடுப்பு ஊசிக்கென தனிச் சிறப்புப் பகுதி தொடங்கியதன் மூலம் தமிழக அரசு தன்னிகரில்லாத பெரும் சாதனை புரிந்துள்ளது. 1981-ஆம் ஆண்டு சனவரி மாதம் சோதனை முறையில் தொடங்கப் பெற்ற இப்பகுதிக்கு கடந்த 1-4-'82 முதல் தமிழக அரசு தனது பூர்ண ஒப்புதல் அளித்து, தேவையான அலுவலர்களையும் நியமித்துள்ளது. 1980-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 5,000 குழந்தைகள் தடுப்பு ஊசிபோடப்பட்ட நிலையிலேயிருந்து 1981-ல் 10,762 என்ற எண்ணிக்கை 1982 மே மாதம் வரை 12,181 என்று அதிகரித்துள்ளது. இக்குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து, முத்தடுப்பு ஊசி 60,000 டோஸ்களுக்கு மேல் கொடுக்கப்பட்டுள்ளது. நலக் கல்வி போதனை மூலம் மேலும் அதிகக் குழந்தைகள் தடுப்பு ஊசியின் நன்மைகளைப் பெறச் செய்யும் திட்டங்களும் ஆராயப்பட்டு வருகின்றன.

கனடா நாட்டு ரோட்டரி சங்கத்தினர் சென்னை நகர் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து தமிழக அரசின் ஒப்புதலோடும் ஒத்துழைப்போடும் தட்டம்மை தடுப்பு ஊசி தீவிர முகாம்கள் குழந்தைகள் நல மருத்துவ மனை இயக்குநர் அவர்கள் மேற்பார்வையில் நடைபெறுகின்றன.

குழந்தைகள் மருத்துவமனையில் மட்டும் மாதத்திற்கு ஏறத்தாழ 600 குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பு ஊசி போடப்படுகிறது. 1979 அக்டோபர் மாதம் முதல் 1982 மே மாதம் இறுதி வரை ஏறத்தாழ 1 இலட்சம் குழந்தைகள், குழந்தைகள் மருத்துவமனை மற்றும் அதன் மேற்பார்வையில் தட்டம்மை தடுப்பு ஊசி போடும் இதர மருத்துவ மனை களிலும் முகாம்களிலும் பயன் பெற்றுள்ளனர். அண்மையில் ஏப்ரல், மே '82 மாதங்களில் செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் சுமார் 15,000 குழந்தைகள் தட்டம்மை தடுப்பு ஊசி போடப்பட்டுப் பயன் பெற்றனர். இவர்கள் தவிர மாநிலம் முழுவதும் ஏறத்தாழ 5 இலட் சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயன் பெற் றுள்ளனர். 9 மாதம் முதல் 5 வயது வரை உள்ள தட்டம்மையால் பாதிக்கப்படாத குழந்தைகளுக்கு ஒரே ஒரு முறை போட்டால் வாழ்நாள் முழுவதும் தட்டம்மையிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.



தமிழக அரசின் சாதனைப் பட்டியலில் மருத்துவத் துறையிலே பொன்னேடுகளில் பதிக்கத் தக்க-மாண்புமிகு தமிழக முதல்வர், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் சமூக நலத் துறை அமைச்சர், மருத்துவக் கல்வித்துறை மற்றும் சமூக நலத்துறை இயக்குநர்கள், திருச்சி மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர். இணைந்து திட்டமிட்டு சிறப்புற நிறைவேற்றி ஏறத்தாழ 3 லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் பயன் பெற்ற - திட்டம் 1982 -ஆம் ஆண்டு ஜனவரி பிப்ரவரி, மார்ச் திங்களில் திருச்சி மாவட்டம் முழுவதும் நடைபெற்ற உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு மற்றும் தடுப்பு ஊசி முகாம்கள் ஆகும். இந்தியாவிலேயே முதன் முதலாக நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்தின் குழந் தைகள் நல மருத்துவமனையைச் சார்ந்த 150க்கும் மேற்பட்ட குழந்தை மருத்துவ நிபு ணர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவ, மாணவியர் அடங்கிய குழு பங்கேற்கும் நல் வாய்ப்பினைப் பெற்றது.



இந்தியாவிலேயே முதன் முதலாகச் சிறப் பாகத்திட்டமிடப்பட்டுத் தொடர்ந்து நடை பெற்ற இந்த முகாம்கள் உலக நலக் கழகத்தின் கவனத்தை ஈர்த்து அதன் அதிகாரிகள் இத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களை மதிப்பீடு செய்ய அனுப்பப்படுகிறார்கள் என்றால், அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அவருடன் இத்திட்டத்தின் பங்கு பெற்ற இதர அலுவல ருக்கும் கிடைத்த மிகப் பெரும்பேறு என்றால், அது மிகையாகாது. திருச்சி மாவட்டம் நடந்த வெற்றிப் பாதையில் இதர மாவட்டங் களும் அடியெடுத்து வைக்கும் நல்வாய்ப் பினை இத்திட்டத்தின் வெற்றி அளித்துள்ளது.

மேற்கூறிய வகையில் பல சிறப்புத் திட் டங்களை நிறைவேற்றி, குழந்தைகளைக் காத்து அவர்கள் நல்வாழ்வு வாழ அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இப் பணிகள் ஒரு காலக் கட்டத்தில் முடிவடையக் கூடியதல்ல. இப்பணிகள் என்றும் எந்தவிதத் தடையோ தயக்கமோ இல்லாமல் தொடர வேண்டிய பணிகளாகும். இதற்குத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்களின் ஒத்துழைப்ப இன்றியமையாததாகும்.



# பெருகிடும் பாசன வசதிகள்

மண்ணும் நீரும் நமது நாட்டின் செல்வங்கள். அதனால் நீர்ப்பாசனம் நாட்டிற் முக்கிய அங்கம் வகிக்கிறது.

1981-82ஆம் ஆண்டில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்கள்) மற்றும் பெரியாறு வைகை நவீனப்படுத்தும்திட்டம் (மதுரை மாவட்டம்) ஆகிய இவ்விரண்டு பெரிய திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வந்தன. 1.01 இலட்சம் எக்டேர் (2.50 இலட்சம் ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் எல்லா வகையிலும் முடிவு பெற்று ஏற்கனவே பயனளித்து வருகிறது. இத்திட்டத்தின் ஆயக்கட்டை விரிவாக்கி கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் வட்டங்களில் 0.466 இலட்சம் எக்டேர் 1.15 இலட்சம் ஏக்கர்) கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கான திட்டம் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டு, திட்டவேலைகள் நடைபெறுகின்றன. ஆயக்கட்டு விரிவாக்க வேலைகளின் மதிப்பீடு ரூ.14 கோடியாகும். இந்த வேலை 1985ல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் பதிவுபெற்ற ஆயக்கட்டுகளால் சூழப்பட்ட நிலங்களையும் மற்றும் பதிவுபெற்ற ஆயக்கட்டுகளுக்கு இடைப்பட்ட நிலங்களையும் அத்திட்டத்தின் முறைப்படுத்தப்பட்ட ஆயக்கட்டுகளில் சேர்க்க வேண்டும் என்ற விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, அரசு சமீபத்தில் ரூ 400 இலட்சம் செலவில் அத்தகைய 10,125 எக்டேர் (25,000 ஏக்கர்) நிலங்களை பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் அளித்துள்ளது.

பெரியாறு-வைகை நவீனப்படுத்தும் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டிற்கு இத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் உலக வங்கியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மூலத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள 10305 எக்டேர் (25,000 ஏக்கர் புதிய) நிலங்கள் பாசன வசதி பெறும் திட்ட வேலைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. இத்திட்டம் டிசம்பர் திங்கள் 1984ஆம் ஆண்டு முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு ரூ 10 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்தின் பிரதானக் கால்வாய்கள், மற்றும் கிளைக் கால்வாய்களில் ''சிமெண்ட் லைனிங்'' வேலை அநேகமாக முடிந்து விட்டதால் போதுமான அளவு தண்ணீர் சேமிப்பு இருக்கும் என்றும் இந்த சேமிப்பு நீரைப் பயன்படுத்தித் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 10,305 எக்டேர் புதிய நிலங்கள் தவிர மேலும் கூடுதலான நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியும் என்றும் உலக வங்கி கணக்கிட்டுள்ளது. எனவே இறுதியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் சேமிப்பு நீரைப் பயன்படுத்தி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை வட்டம், மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் ஆகிய வட்டங்களில் ஏற்கனவே 1978ல் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சுமார் 7,270 எக்டேர் 18,000 ஏக்கர் மறைமுக ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி அளிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நடுத்தரப்பாசனத் திட்டங்கள்:**

முந்தைய ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 13 நடுத்தரப் பாசனத் திட்டங்களில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருச்சி மாவட்டத்தில் ஒன்றும் தருமபுரி மாவட்டத்தில் ஒன்றும், கன்னியாகுமரி



மாவட்டத்தில் ஒன்றும் ஆக மூன்று நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. அவை யாவன:

(அ) பெரியாறு மாவட்டத்தில் நொய்யல் ஆற்றில் ரூபாய் 713 இலட்சம் செலவில் அணை ஒன்று கட்டுதல். இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் 3,900 எக்டேர் (9,625 ஏக்கர்) புன்செய் நிலங்களுக்குப் பயனளிக்கும்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு வட்டத்தில் கேசரிகுலிஹல்லாவில் ரூ279 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் கட்டுதல். இத்திட்டத்தினால் 1620 எக்டேர் (4,000 ஏக்கர்) புன்செய் நிலங்கள் பாசன வசதிபெறும்.

(இ) ரூபாய் 46.70 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருப்பரப்பு அணைக்கட்டின் வலப்புறக் கால்வாயை விரிவுபடுத்துதல். இதனால் 97 எக்டேர் (238 ஏக்கர்) புதிய நன்செய் நிலங்கள் இருபோக பாசன வசதி பெறுவதோடு மற்றைய நிலங்களுக்குப் பாசன உறுதி செய்யப்படும்.

நொய்யல் அணைக்கட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தி அதிக, நிலங்களுக்குப் பாசன் வசதி அளிக்கமுடியுமா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1982-83ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நடுத்தர புதியபாசனத் திட்டங்களுக்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11 புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 50.79 கோடியாகும். இத்திட்டங்களினால் 20,800 எக்டேர் (51,321 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும்.

**பாசனத் திட்டங்கள் ஆய்வு:**

பொதுப்பணித்துறையின் ஆய்வுப் பிரிவில் இருபத்தி எட்டு திட்டங்கள் விரிவான ஆய்வின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இத்திட்டங்கள் ரூ.63 கோடி செலவில் 21600 எக்டேர் (52000 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாகப் பாசனமும், 7290 எக்டேர் (18,000 ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன உறுதியும் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆய்வுப் பணிகளை விரிவுபடுத்தவும், வருங்காலத்தில் செயல்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரித்துத் தொகுத்து அளிக்கவும் பொதுப்பணித்துறையின் ஆய்வுப் பிரிவைப் பலப்படுத்த அரசு முடிவு செய்து ஒரு வட்டம் மற்றும் நான்கு கோட்டங்கள் அமைக்க சமீபத்தில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**பாசன வளம்:**

1981-82ம் ஆண்டில் (1) குண்டாறு நீர்த் தேக்கத் திட்டம் (40 எக்டேர்கள்) (2) தும்பலஹல்லி நீர்த்தேக்கத்திட்டம் (920 எக்டேர்கள்) (3) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டப்பணியில் ஒரு பகுதி (7300 எக்டேர்கள்) மற்றும் வறட்சிப் பகுதிகளுக்கான திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு வரும் பாம்பாறு நீர்த்தேக்கத்திட்டம் (1620 எக்டேர்கள்) ஆகிய பெரியமற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலம் மொத்தமாக 9880 எக்டேர் (24410 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1982-83ம் ஆண்டில் உப்பாறு நீர்த்தேக்கத்திட்டம் (720 எக்டேர்கள்) மற்றும் பரம்பிக்குளம் ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதி (9040 எக்டேர்கள்) ஆகியவற்றை நிறைவேற்றுவதன் மூலம் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் கூடுதலாக 9760 எக்டேர்கள் (24120 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சிறு பாசனம்:**

1981-82ஆம் ஆண்டில் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்திற்காக ரூ.199.57 இலட்சமும், தூர் வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்காக ரூ.4.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1.4.1981ல் நிலுவையில் இருந்த 110 வேலைகளில் 1981-82 ஆம் ஆண்டில் 40 வேலைகள் முடிக்கப்படவிருக்கின்றன. இந்த வேலைகள் முடிவுறும்போது கூடுதலாக 2040 எக்டேர் (5100 ஏக்கர்) நிலங்கள் பாசனவசதி பெறும்.

1981-82ஆம் ஆண்டில் ரூ 356.07 இலட்ச மதிப்பீட்டில் 24 புதிய திட்டங்களுக்கு இதுவரை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1982-83ஆம் ஆண்டில் சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 255 இலட்சமும் தூர்வாரி புனரமைக்கும் திட்டங்களுக்காக ரூ.3.41 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம்ஆண்டில் 30 வேலைகள் முடிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் 2530 எக்டேர் (6325 ஏக்கர்) நிலங்கள் பயனடையும்.

நாட்டின் நீர்வளத்தைப் பயனுள்ள முறையில் உபயோகிப்பது பற்றிய ஆய்வுகள் மற்றும் அளவைப் பணிகள் மேற்கொள்ளுவதற்காக மத்திய அரசு. சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக "தேசிய நீர்வள அமைப்பு" ஒன்றை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது.

பாசனத் திட்டங்களை நிறைவேற்றும்போது, விலைவாசி ஏற்றத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினைத் தவிர்ப்பதற்காகத் திட்டங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது.




# கிராமப்புறங்களில் பேருந்து வசதி!

இந்தியா கிராமங்களில் வசிக்கிறது. இந்திய மக்களில் 76 சதவீதம் கிராமங்களில் வசிக்கின்றனர். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழ்நாட்டிலுள்ள 4.83 கோடி மக்கள் தொகையில் 3.24 கோடி மக்கள் கிராமப் புறங்களில் வசிக்கின்றார்கள். தமிழ்நாட்டில் மாநகரங்கள், நகரங்களின் எண்ணிக்கை தற்பொழுது 434 ஆகும். கிராமப்புறங்களில் குடியிருப்போர் அதிகமாக அண்டை நகரங்களுக்கு கல்வி, மருத்துவம், தொழில், வியாபாரம் முதலிய அத்யாவசியத் தேவைகளுக்கு அன்றாடம் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். கிராமப்புறங்களின் பொருளாதார வளர்ச்சிக்குப் போக்குவரத்து இன்றியமையாததாகும். இருப்புப்பாதை, நீர்வழி, ஆகாய வழி போக்குவரத்தைவிட சாலை போக்குவரத்து வீட்டுக்கு வீடு கொண்டு செல்ல வாய்ப்புள்ளதாகவும், சிக்கனமாகவும், நகர்ப்புற, கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு மிக்க வசதியாகவும் உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கிராமப்புறங்களில் சாலைப்போக்குவரத்தை அபிவிருத்தி செய்து, நகர்ப்புறங்களில் நெரிசலைத் தவிர்ப்பது என்பது ஒரு முக்கிய கொள்கையாகும்.

கிராமப்புறங்களுக்கு போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்த வேண்டுமானால், கிராமச்சாலைகளைச் சீர்படுத்தவேண்டியது மிக அவசியமாகிறது. சாலைப் பராமரிப்புத் துறையும், சாலைப் போக்குவரத்துத் துறையும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தேசிய நெடுஞ்சாலை, நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்து ஆகிய மூன்று துறைகளும் திட்ட நிலையிலும் செயல்படுத்தும் நிலையிலும் தலைமையகத்தில் ஒரே துறையின் கீழ்இயங்க அரசு கட்டளை பிறப்பித்தது.

ஆட்சிப் பொறுப்பில் அமருவதற்கு முன்பே பஸ் தொழிலை நாட்டுடமையாக்குவோம் என்பதை மக்கள் மூன் எடுத்துரைத்து வந்திருக்கிறோம். ஆட்சிக்கு வந்த பின்னர் சட்ட மன்றத்தில் எடுத்துக் கூறி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அரசின் புதிய முயற்சிகள் யாரையும் எந்தத் தொழிலில் உள்ளவர்களையும் நிலை குலையச் செய்வதற்காக அல்ல, அடிப்படைத் தொழில்கள் நாட்டுடைமையாக இருக்க வேண்டும் என்ற பொதுக் கருத்துக்கு ஒப்பவே இவை செய்யப்படுகின்றன.

— பேறிஞர் அண்ணா





கிராமப்புறப் பகுதிகளுக்கு, போக்குவரத்து வசதியளிப்பதில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணி குறிப்பிடத் தக்கதாகும். 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாளன்றுள்ளவாறு, இம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 12,902பேருந்து களில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் 7829 பேருந்துகளை இயக்கின. இது மொத்தத்தில் 51 சதவீதமாகும்.

தற்பொழுது தமிழ்நாட்டில், மற்ற மாநிலங்களைப் போலல்லாமல், 'இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்' கீழ் பதிவு செய்யப்பட்டு எட்டு பயணிப் போக்குவரத்துக் கழகங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துப் பணிகளை மேற்கொண்டுள்ளன. இவை நாள்தோறும் சுமார் 23 இலட்சம் கிலோ மீட்டர்கள், ஏறத்தாழ 66 இலட்சம் மக்களை நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்கின்றன. விரைவுப் பேருந்துகள் இயக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர மற்ற 7 போக்குவரத்துக் கழகங்களும் உள்ளடக்கிய கிராமப்புறப் பகுதிகளுக்குப்பேருந்து வசதியளித்து வருகின்றன. இப்பணியை மேலும் நல்ல முறையில் செவ்வனே செய்யும் பொருட்டு, மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசு முடிவெடுத்திருக்கிறது.

சனவரி 1979-ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பெரும் அளவில் சாலைப் போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. போக்குவரத்துத்துறை, போக்குவரத்துக் கழகங்கள், நெடுஞ்சாலைத்துறை, அனைத்தும் இந்த மாபெரும் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டன. அதன் விளைவாக இன்று இத்தகைய கிராமச் சாலை வசதியின்றி உள்ளன. எவ்வளவு மக்கள் இவ்வாறு சாலை வசதியின்றி அவதியுறுகின்றனர்? சாலைகளிலிருந்து இந்தக் கிராமங்கள் எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதை கண்டறியப்பட்டது.அதுபோலவே எத்தனை கிராமங்கள் போக்குவரத்து வசதியில்லாமல் உள்ளன, அதில் உள்ள மக்கள் தொகை முதலியவையும் கண்டறியப்பட்டன. ஆய்வு முடிவுகள் கணக்கீட்டுப்பொறி (Computer) உதவியுடன் வகைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதனால் கிராமப்புறங்களுக்கு பேருந்துகள் விடுவதற்கு முக்கியத் திட்டம் தற்போது கைவசம் கிடைத்திருக்கிறது. ஆய்வின் முக்கிய முடிவுகள் பின் வருமாறு:

மாநிலத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள்—12,239

ஏற்கனவே பேருந்து வசதி அளிக்கப்பட்டவை— 8,034

மீதமுள்ளவை— 4,205

சாலை சீராக இருப்பதால் உடனடியாகப் பேருந்து வசதி அளிக்கப்படக்கூடியகிராமப் பஞ்சாயத்துக்கள்—969

13936 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்தால்தான் பேருந்து வசதியளிக்க முடியும் என்ற நிலையிலுள்ள கிராம பஞ்சாயத்துக்கள்—3,237

சாலை மேம்பாட்டிற்கு ஆகும் செலவு—ரூ. 91 கோடி.

முதற்கட்டமாக கிராமப்புறப் போக்குவரத்திற்குக் கண்டறியப்பட்ட 968 கிராமப் பஞ்சாயத்துக்கு பேருந்து வசதி அளிக்கும் வகையில் 476 பேருந்து வழித் தடங்கள் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலிருக்கின்றன. சாலை மேம்பாட்டிற்கு ஆகும் செலவுக்கான தொகையும் வெவ்வேறு வழிகளில் ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு போக்குவரத்துக்கழகங்கள் சென்ற நான்காண்டுகளில் மீட்டும் ஏறத்தாழ ரூ. 163 கோடி மதிப்பில் சுமார் 6,000-க்கும் மேல் புதிய பேருந்துகள் வாங்கி, அதில் 3,400 பழைய பேருந்துகளுக்குப்பதில் மாற்றியமைக்கப்பட்டும், மீதம் 2,600 பேருந்துகளில் சில ஏற்கனவே உள்ள வழித் தடங்களில் கூடுதலாகவும், சில புதிய வழித் தடங்களிலும் இயக்கப்பட்டன. 2243 புதிய வழித் தடங்கள் உருவாக்கி இதுவரை 4,410 கிராமங்களுக்கு முதல் முறையாக பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் பயனடைந்த கிராமப்புற மக்கள் தொகை சுமார் 80இலட்சமாகும். மலைப்பாங்கான கிராமங்களுக்கும், உள்ளடக்கிய கிராமப் புறப் பகுதிகளுக்குச் செல்ல ஏற்ற வகையில் 49 சிறு பேருந்துகள் (Mini buses) இயக்கப்பட்டு வருகின்றன. இராமேஸ்வரத்தீவு போன்ற இடங்களிலும், நீலகிரி மாவட்டத்திலும் 70-க்கும் மேற்பட்ட குறுஞ் சக்கர அடிப் பகுதிகள் கொண்ட பேருந்துகளையும் (Short wheel base buses) அவை இயக்கி வருகின்றன. கிராமப்புறமக்கள் உணவு தானியங்கள், காய்கறி, பால் போன்ற விற்பனை செய்யத் தக்க பொருள்களை எடுத்துச் செல்ல உதவும் பொருட்டு இது வரை 11 'அங்காடிப் பேருந்துகளை' ஓடவிட்டிருக்கின்றன. நாளடைவில் கூடுதலாக விடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. உரிய காலத்திற்கு மேல் அதிகக் காலம் ஓடிய பழைய பேருந்துகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இயன்ற இனங்களில் அவை குறுஞ்சக்கர அடிப்பகுதி கொண்ட பேருந்துகளாக மாற்றப்பட்டு குறைந்த மக்கள் தொகை உள்ள, தொலைவான பகுதிகளில் இயக்கப்படுகின்றன.




கிராமப்புறப் பேருந்துகளின் அணிவகுப்பு

பேருந்துகளின் விலையேற்றம் டீசல் எண்ணெய்விலைஅதிகரிப்பு முதலியவற்றைக் கருத்திற் கொண்டு முறையான பேருந்துகளைக் கொண்டு அதிகமான கிராமங்களுக்குப் பேருந்து வசதிகளை அளிக்கும் பொருட்டு 585 புதிய வழித்தடங்களைக் கொண்ட 252 பலமுனை வழித்தடங்கள் (Multi pronged routes ) நடைமுறையிலிருக்கின்றன.

நகரங்களைச் சுற்றிலும், சிறிய சிறிய குடியிருப்புகள் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. கூடுதலான் கிராமங்களை நகரத்துடன் இணைக்கும் பொருட்டும், நகர எல்லைக்குள் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், மக்கள்,தொலைவிலிருந்து மலிவுச் செலவில் நகருக்கு வந்து போக வசதியளிக்கும் பொருட்டும், நகர்ப்புற வழித்தடங்களின் 25 கி.மீ.ஆக இருந்ததை 30 கிலோ மீட்டராக மாற்றியமைக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஒவ்வொரு கிராமத்திற்கும், பேருந்து வசதி செய்து தர மக்கள் குரலெழுப்புகிறார்கள். இவைகளை நன்கு ஆராய்ந்து, பேருந்து வழித்தடங்கள் அமைக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட இக்குழுவில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, போக்குவரத்து கழகத்தின் நிர்வாக இயக்குநர், நெடுஞ்சாலைக் கோட்டப் பொறியாளர், மாவட்ட ஆட்சியரின் ஊர் வளர்ச்சி உதவியாளர் முதலானோர் அங்கத்தினராவர்.

புதிய கிராமப்புற வழித் தடங்களில் பேருந்து விடுவதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு நட்டம் ஏற்பட்ட போதிலும், கிராம மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பொது நோக்கத்துடன், அரசு போக்குவரத்துக் கழகங்கள் இவற்றை நடத்தி வருகின்றன. ஆதாயம் சட்டிய போக்குவரத்துக் கழகங்கள் குறிப்பாக சேரன் போக்குவரத்துக் கழகமும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகமும் சென்ற ஆண்டின் ஆதாயத்திலிருந்து ரூ. 30 இலட்சம் கிராமப்புற மேம்பாட்டிற்காக தமிழ்நாடு ஊரகச் சீரமைப்புச் சங்கத்திற்கு உதவித் தொகையாக அளித்திருக்கிறது.

கிராமப்புறச் சாலைப் போக்குவரத்து நாட்டிற்கு இன்றியமையாதது என்று கருத்தில் கொண்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ. 378 இலட்சம் இவ்வாண்டில் கடனாக அளிக்க முன்வந்துள்ளது. உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களுக்குச் சாலைகள் அமைக்கவும், பேருந்து வசதிகள் செய்யவும் ஆய்வுசெய்து அதை நிறைவேற்ற உண்டாகும் செலவுக்கு நிதி திரட்டுவதற்கு 'கிராமப்புறச் சாலை மற்றும் போக்குவரத்து அதிகாரிச் குழு (Rural Road '& Transport Authority ) ஒன்று போக்குவரத்து ஆணையரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

'தமிழக அரசும், அரசு போக்குவரத்துக் கழகங்களும் , அரசு போக்குவரத்துத் துறையும், கிராமங்களை நகரங்களுடன் போக்குவரத்து வசதிகள் மூலம் இணைப்பதை ஒரு முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பதை இதிலிருந்து அறியலாம்.



**த**மிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்தமொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும்.

—பேரறிஞர் அண்ணா

# தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி



வேலை வாய்ப்பினைப் பெருமளவில் உருவாக்கவும் நமது மாநிலத்தில் ஒரு பகுதியில் தொழில்கள் பெருகியும், மற்றொரு பகுதியில் குறைந்தும் இருப்பதைப் போக்கி, எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் சீராக அமைந்திடவும் நடவடிக்கை எடுப்பதுதான் தமிழ்நாடு அரசு பின்பற்றிவரும் தொழில் துறைக் கொள்கையின் இரு நோக்கங்கள் ஆகும்.

அதே நேரத்தில் சிறு தொழில்கள் துறையோடு தொடர்பை ஏற்படுத்தவும் இன்றியமையாத் துறைகளின் உற்பத்திக்கும், முக்கியத் துறைகளின் உற்பத்திக்கும் உதவி செய்யவும் இம்மாநிலத்தில் தொழிலுக்கான அடிப்படை வசதிகளை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் பெரிய, நடுத்தரத் தொழில்களும் இணைந்து சீரான முறையில் வளர்ச்சி பெறச் செய்வதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. திட்டமிட்ட வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்த்தால், பெருந்தொழில்களும், சிறு தொழில்களும் ஒன்றுக்கொன்று துணையாக இயங்கும் வகையில் மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய அளவிற்கு அவற்றை முடுக்கி விடுவதிலும் பெருந்தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தனியார் தொழில் முனைவர்களின் திறனை ஊக்குவிப்பதில் அரசு அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. ஆனால், சமூக நீதியை நிலை நாட்டவும், தொழில் நுட்ப உத்திகளைப் புதிதாகக் கண்டு பிடிக்கவும், நலம் பயக்கும் அளவிற்கு வருமான வாய்ப்புக்களைப் பகிர்ந்தளிக்கவும் அவசியமாயிருக்கிற உற்பத்திப் பிரிவுகளில் மட்டுமே அரசு நேரடியாகத் தலையிடும். அரசு உள்ளூர் வள வாயில்கள், மூலப் பொருள்கள், மனித ஆற்றல் போன்ற வகையில் இம்மாநிலத்தில் கிடைக்கக் கூடிய இயற்கை வள வாயில்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும். தனித்தியங்க வல்ல திட்டங்கள் எவை எவை என்பதைக் கண்டறிந்து கூட்டுபடியாகும் திட்டங்களைத் தீட்டி அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது, செயலூக்கம் அளித்தல், கடன் வசதி, ஏனைய இடுபொருட்கள் வழங்குதல், பயிற்சி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல், சிறு தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்றவற்றில் உதவி செய்வதன் வாயிலாக அவற்றை உற்பத்தியைப் பெருக்கும் வளங்களாக மாற்றிட வேண்டும்.

ஒரு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, மத்திய அரசுத் துறை திட்டங்களில் செயல்படும் முதலீடுகளின் அளவைப் பொறுத்து அமைகிறது. தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்துள்ள முதலீடு கடந்த சில ஆண்டுகளில் பெரிதும் குறைந்துள்ளது. அதிகமான பொதுத்துறைத் திட்டங்களை நம் மாநிலத்தில் ஏற்படுத்த மாநில அரசு தீவிரமாக முயன்று வருகிறது. 'பெல்' நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்றை இராணிப்பேட்டையில் தொடங்குவதற்கு மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர சோதனைப் பிரிவு ஒன்றையும் நிறுவ மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. இனி வரும் ஆண்டுகளில் இம்மாநிலத்திற்கு இப்படிப்பட்ட திட்டங்கள் பலவற்றிற்கு அனுமதி வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது.

பெரிய, நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டிலும், வளர்ச்சியிலும் மாநில அரசுக்குள்ள பெரும் பொறுப்பு, தனியார் துறையில் முறையான வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள், நிதி உதவி, ஏனைய உதவிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதேயாகும். இக் குறிக்கோளை எய்துவதற்காகப் பல கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள் அரசிடமிருந்து, தேவையான நிதி உதவியும் நிருவாக உதவியும் பெறுவதுடன் இப்பணிகளுக்காக நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து பெருமளவிற்கு நிதி உதவியும் பெறுகின்றன. போர்த்திற நோக்கங் கொண்ட காரணங்கள் சிலவற்றிற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட

சில பகுதிகளில் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடும்படி சில கழகங்களுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது.

பொதுத்துறையில் பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகள் சிலவற்றை அமைத்தும் நிருவகிக்கும் பணியும் தனியார் தொழில் முனைவோர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழிற் பிரிவுகளை உருவாக்கும் பணியும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகத்திடம் (டிட்கோ) ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது அரக்கோணத்தில் உருக்காலை ஒன்றையும் ஆலங்குளம், அரியலூர் ஆகிய இடங்களில் சிமெண்ட் தொழிற்சாலைகளையும் டிட்கோ நிறுவனம் நிருவகித்து வருகிறது. இப்பிரிவுகளை விரிவுபடுத்துவதோடு வெடி மருந்து தயாரிக்கும் திட்டம் உட்பட பொதுத்துறையில் புதிய திட்டங்கள் சிலவற்றை நிறுவி 'டிட்கோ' நிறுவனம் செம்மையாகச் செயல்பட இருக்கிறது. அரக்கோணத்தில் உள்ள உருக்கு உருளை ஆலையில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் உருக்குத் தகடுகள், கம்பிகள் தயாரிக்கும் ஆலையும் நிறுவுவதும் மேற்படி பணியில் அடங்கும்.

தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகத்திற்கு (சிப்காட்) தனியார் துறையில் பெரிய நடுத்தரத் தொழில்களை மேம்படுத்துதல், நமது மாநிலத்தில் போதிய அளவு வளர்ச்சி அடையாத பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைக்கும் பணியை விரைவுபடுத்துதல் ஆகிய இரு பொறுப்புகள உள்ளன. இக்கழகம் ஊக்கத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்துகிறது.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிப்பதோடு, தொழில் முனைவோருக்குப் பல்வேறு துணைப் பணிகளையும் செய்து தருகிறது. மாநிலத்தில் பல இடங்களில் தொழில் மையங்களை உருவாக்கி எளிய நிபந்தனைகளின் பேரில் தொழிற்சாலைகளும் மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் கிடைக்க வகை செய்கிறது. இந்த ஊக்கத் திட்டங்களில் மத்திய அரசின் உதவித் தொகையும் மாநில அரசு வழங்கும் வட்டி இல்லா விற்பனை வரிக்கடனும் அடங்கும். மாநிலத்தில் தொழில்கள் விரைந்து வளர்ச்சி பெற மேலும் பல புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குத் தொழில் முனைவோரைக் கவரும் வகையில் தனித் திட்டங்களும், ஊக்கத் திட்டங்களும் அண்மையில் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழில் வளர்ச்சிக்குத் தனிச் சலுகைகள் பலவற்றையும் அரசு அறிவித்துள்ளது. தொழிற்சாலைகளுக்குத் தற்போது அனுமதித்துள்ள வட்டியில்லா விற்பனை வரிக் கடனுக்காக உச்சவரம்பினை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக உயர்த்தியுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் உருவாகி வருகின்றன. தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் உள்ள புதிய தொழிற் பிரிவுகள் முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்குப் பெறும். மின் அணுவியல், மருந்துகள்,



மோட்டார் வண்டி துறைத் தொழில்கள் ஆகிய துறைகளில் புதிய தொழிற்களை உருவாக்க உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

1949-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி.) தமிழ்நாட்டில் மாநில நிதி உதவி கழகமாகச் செயல்பட்டு வருகிறது. நடுத்தரக்காலக் கடன்கள் வழங்குதல், இயந்திரங்கள் வாங்கிய தற்கான தொகையைக் காலந் தாழ்த்திச் செலுத்த உத்தரவாதம் அளித்தல், பொதுமக்கள் வாங்காத மூலதனப் பங்குகளையும், முன்னுரிமைப் பங்குகளையும் வாங்குதல் ஆகிய வழிகளில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தவும், ஏற்கெனவே உள்ள தொழிற் பிரிவுகளை விரிவுபடுத்தி, நவீனப்படுத்தவும் இது உதவுகிறது. மேலும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கிராமப்புற மருத்துவர்கள், போக்குவரத்துப் பணியை நடத்துபவர்கள் ஆகியோருக்கும், ஓட்டல்களுக்கும் குறைந்த வட்டிக் கடன் திட்டங்கள் மூலம் நிதி உதவி வழங்குதல், தொழில்நுட்பவினைஞர், தொழில் முனைவோருக்கான திட்டங்கள் முதலியவற்றின் கீழ் கடனுதவி அளித்தல் போன்ற தனித் திட்டங்களையும் இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடியனவும், குறிப்பாக பின் தங்கிய, கிராமப்புறப் பகுதிகளில் அமைக்கப்படுவனவும் சிறப்பாகச் சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் நலிந்துள்ளவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப் பட்டவையுமான தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து, வருங்காலத்தில் இவற்றிற்கு அதிக உதவியளிக்க இக்கழகம் கருதியுள்ளது.

நீண்ட கடற்கரையையும், கதிரவனின் ஒளியையும் பெருமளவில் பெறும் பேறு பெற்றுள்ள தமிழ்நாடு, உப்பு உற்பத்தியில் நாட்டிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கிறது. உப்புத் தொழில் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்களில் ஒன்றாகும். இதனால் கடற்கரையிலோ மாவட்டங்களிலோ உள்ள உழவுத் தொழிலாளர்களுக்கும் அந்தந்தக் காலங்களில் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. உப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை நிறுவுவதற்கு ஊக்கமளிப்பதிலும் மாநில அரசுக்குத் தமிழ்நாடு உப்பு - உப்பு சார்ந்த இரசாயனங்கள் வாரியம் ஆலோசனை வழங்குகிறது. அண்மை




யில் பொதுத்துறை நிறுவனமாக அமைக்கப்பட்ட உப்புக் கழகத்திடம், புதுப்புது இடங்களில் உப்பளங்கள் தொடங்குதல், உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை ஏற்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது இக்கழகம், இராமநாதபுர மாவட்டத்தில் மறையூர், வாலிநோக்கம் என்னுமிடத்தில் ஒன்றுமாக இரு பெரும் உப்பளத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. இக்கழகம் புதிய இடங்களில் உப்பு உற்பத்தியைத் தொடங்கி சிறுஉற்பத்தியாளர்களுக்கு நிதி உதவியும், விற்பனை வசதியும் செய்து கொடுக்கும். கடல் இரசாயனங்கள் தயாரிப்புக்கான தொழிற்சாலைகளை நிறுவவும் நடவடிக்கை எடுக்கும்.

சர்க்கரைத்தொழில், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும். கிராமப் பொருளாதாரத்தில் இது முக்கிய அங்கம் வகிக்கிறது. சர்க்கரைத் துறை இயக்ககமும் பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காக 1974-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சர்க்கரைக் கழகமும் 1982-83-ஆம் ஆண்டிலும் அடுத்து வரும் ஆண்டுகளிலும் பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்புகளும் உள்ளன. பொதுத் துறையும் கூட்டுறவுத் துறையும் சர்க்கரை ஆலைகளை அமைக்க முன் வராவிட்டால் கரும்பு கிடைக்கக்கூடிய பகுதிகளில் தற்போது சர்க்கரை ஆலைகள் இருப்பின் அவற்றின் நலனுக்குக்குந்தகம் விளைவிக்காமல் சர்க்கரைஆலைகளைப் புதிதாக அமைக்கத் தனியார்துறையினருக்கு ஊக்கமளிக்கலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இந்த வகையில் சர்க்கரை ஆலை நிறுவ அனுமதி கேட்டு மூன்று விண்ணப்பங்கள் வந்தன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் (டேசல்) திருமழிசையில் இயந்திரச் செங்கற்சூளை ஒன்றையும், சென்னையிலும், விருத்தாச்சலத்திலும் மட்பாண்டப் பிரிவுகளையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் தனது தொழிற் பிரிவுகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களில் கவனம் செலுத்தி கிராமப் புறங்களில் குயவர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் உதவுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

தமிழ்நாடு மின்னணுத்தொழில் நிறுவனம் - இம்மாநிலத்தில் மின்னணுத் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் அரசானது தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தை அமைத்தது. பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும் நவீன மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்கும் பொறுப்பு இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் தொலைக்காட்சிப் பெட்டிகள், எலெக்ராலிட்டிக் கெப்பாசிட்டர்கள் முதலியன தயாரிக்க தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரெசிஸ்டர்கள் உற்பத்தி செய்தல், கதிர் மின் கருவிகளை உற்பத்தி செய்தல் முதலான கூட்டுத்துறை திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மேலும் பல மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்க, ஊக்கமளிக்கும் வகையில் இம்மாநிலம் முழுவதும் அமைக்கப்படும் புதிய மின்னணுத் தொழிற்சாலைகளுக்கு ''மாநில மானியத் திட்டத்தை'' அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புகலூரில் ஆண்டுக்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதங்களையும், 40,000 டன் எழுது தாள்களையும், அச்சிடுவதற்கான தாள்களையும் உற்பத்தி செய்ய ரூ.50 கோடி அனுமதி பெற்ற பங்கு மூலதனத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் 190 கோடி ரூபாய் (நடைமூலதனத்தையும் சேர்த்து) செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு, இந்திய நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள், உலக வங்கி ஆகியவை நிதி உதவி செய்யும். இத்திட்டத்திற்கு 100 மில்லியன் டாலர் கடன் வழங்க உலக வங்கி ஒப்புக் கொண்டுள்ளது. இதற்காக உலக வங்கியுடனும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடனும் இந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டு அதற்கான பத்திரங்களில் கையெழுத்திட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகலூரில் அமைய இருக்கும் இத்திட்டம், நாட்டில் ஒரு புதுவகையான தொழில் நுட்பவியலுக்கு முன்னோடியாக அமையும். இது தற்போது சர்க்கரை ஆலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுத்தும்.

மாநிலத்தில் கனிமத் தொழில் வளர்ச்சியில் அரசு தனிக் கவனம் செலுத்தும். சேலத்தில் உள்ள மாக்னசைட் கனிமங்கள் சில வற்றை நடத்துவதற்கான 1979 இல் நிறுவப்பட்ட தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் கனிம வேலைகளை விரிவாக்கியும், கரிந்த மாக்னசைட் உற்பத்திக்கான ஒரு தொழிற் பிரிவு ஒன்றை ரூ. 4.93 கோடி செலவில் ஏற்படுத்தியும் தனது பணியை விரிவுபடுத்தும். தற்போது கரும்பாறைகள்ளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யும் தமிழ்நாடு கனிம நிறுவனம், கரும்பாறைகளை மெருகேற்றும் நவீன தொழிற்சாலை ஒன்றை நிறுவும். இம்மாநிலத்தில் உள்ள கிராபைட் படிவங்களை வெட்டி, சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றையும் இந்நிறுவனம் நிறுவ உத்தேசித்துள்ளது.

# வளரும் கதர்த் திட்டம்



தமிழகத்தில் துவக்க காலத்தில் கைராட்டைகள் அதிக அளவில் புகுத்தப்பட்டன. கை ராட்டை நூலின் தரத்தை உயர்த்தவும், நூற்போரின் வருவாயைப் பெருக்கவும்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக நான்கு கதிர், ஆறு கதிர் அம்பர் இராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் மூலம் நூற்போர் நாளொன்றுக்கு ஒன்றரை ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் வரை ஊதியம் பெற்றனர். மேலும், நூற்போரின் உற்பத்தித் திறனை அதிகரித்து நூற்போரின் வருவாயை அதிகரிக்க முற்றிலும் உலோகத்தால் அமைக்கப்பட்ட ஆறு கதிர், 12 கதிர் ராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாக, ஒரு நூற்போர் நாளொன்றுக்கு ஐந்து ரூபாயிலிருந்துஏழு ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றனர்.

இத்தகைய ராட்டைகள் 30ஐக் கொண்ட கிராமிய நூற்புக் கூடங்கள் 411 வாரியத்தின் நேரடிப் பார்வையின்கீழ் இயங்கி வருகின்றன. இந்நிலையம் ஒன்று நிறுவிட ரூ. 90,000 தேவைப்படுகிறது. இவை ஒவ்வொன்றிலும் முப்பது நபர்களுக்கு, பெரும்பாலும் பெண்களுக்கு நிலையான பணி கிடைக்கின்றது. இந்தக் குறைந்த மூலதனத்தில் இத்தகையோருக்கு, வேறு எந்தத் தொழிலும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது. திக்கற்ற பெண்களும், விதவைகளும் கிராமிய நூற்புக்கூடத்தில் சேர்க்கப்பட்டு வாழ்வளிக்கப்படுகிறது. இவ்வாரியத்தின் கீழ் 26,345 நூற்பாளர்கள் உள்ளனர். இவர்கள் கடந்த ஆண்டில் 355.72 இலட்சம் சிட்ட நூலை உற்பத்தி செய்து ரூ. 119.25 இலட்சம் ஊதியமாகப் பெற்றனர். இவ்வாண்டில்மேலும் 186 கிராமிய நூற்புக் கூடங்கள் புதியதாகத் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5880 பேருக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைத்திடும்.

## நெசவு

நூல் உற்பத்திக்கு ஏற்றவாறு துணி உற்பத்தி செய்வதற்கும், நெசவாளர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், கிராமப் புறங்களில் படித்த, வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்களை நெசவு தொழிலை எளிதில் ஏற்று நடத்தவும் வசதியாக உள்ள நேபாள மாதிரி தறிகளைத் தமிழ்நாட்டில் புகுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி வரும் ஆண்டில் 640 நேபாளத் தறிகள் இயக்கி வைக்கப்படும். 1980-81-ஆம் ஆண்டு 5832 நெசவாளர்கள் மூலம் 657.78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 51 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது. நெசவாளர்கள் ரூ. 137.45 இலட்சம் ஊதியமாகப் பெற்றனர். 1980-81ஐவிட 1981-82-ல் 11 இலட்சம் மீட்டர் துணி கூடுதலாக உற்பத்தியாகியுள்ளது. நடப்பாண்டில் ரூ. 700 இலட்சம் மதிப்புள்ள கதர்த்துணி உற்பத்திசெய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.




வாரியத்தின் கீழ் உள்ள சாயச் சலவை அச்சுக் கூடங்களில் ரூ. 76 இலட்சம் மதிப்புள்ள துணி சாயமிடப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளன. 1981-82-ல் ரூ. 36 கோடி மதிப்புள்ள துணி சாயமிடவும், அச்சிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆயத்த ஆடைகள் :**

வாரியத்தின் ஆயத்த ஆடைகளுக்கு என்றும் நம் நாட்டில் ஒரு நல்ல வரவேற்பு உண்டு. வாரியத்தின் கீழ் மூன்று தையல் அலகுகள் இயங்கி வருகின்றன. இவற்றைத் தவிர பல்வேறு தனியார் துறை மூலம் வாரியம் தனது ஆயத்த ஆடைகளைத் தயாரித்து வருகிறது. 1981-82-ல் ஆயத்த ஆடைகள் மட்டும் ரூ. 40 இலட்சத்திற்கு விற்பனையாயிற்று.

**கதர்ப்பட்டு :**

வாரியம் தனது 15 உற்பத்தி அலகுகள் மூலம் ரூ. 257 இலட்சம் மதிப்புள்ள கதர்ப் பட்டு சென்ற ஆண்டு உற்பத்தி செய்தது. கதர்ப் பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு என்றுமே உள்ளது. இதனால் வரும் ஆண்டில் மேற்கொண்டு அதிகமாகப் பட்டுத்துணி உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 60 இலட்சம்கதர்ப் பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

வாரியத்தின் கீழ் குறளகத்திலுள்ள பேரங்காடி உட்பட 155 காதி கிராப்டுகள் இயங்கி வருகின்றன. இவைகள் மூலம் கதர் கிராமக் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கதர் பருத்திரகத்திற்குச் சாதாரணக் காலத்தில் 10 விழுக்காடு தள்ளுபடி உண்டு. காந்தி பிறந்தநாள், தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்காலங்களில் மாநில அரசு, கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு நிதி உதவி பெற்று சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. 1981-82-ல் ரூ. 786 இலட்சம் துணி விற்பனையாயிற்று. நடப்பு ஆண்டில் ரூ. 1000 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணி விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான மற்றும் சமமான நூல் உற்பத்திக்குச் சரியான முறையில் பஞ்சை அடித்துப் பட்டை போட வேண்டும். இது காறும் இது கையினாலேயே பெரும்பாலும் செய்து வரப்பட்டது. இயந்திரத்தினால் பஞ்சை உடைத்து பட்டை போடும் 48 அலகுகள் நிறுவப்பட்டுச் செயல்படுகிறது. மேற்கொண்டு 56 அலகுகள் நிறுவிடும் பணி நடைபெற்று வருகிறது.




கதரின் தரத்தையும் ஆராயும் வடிவமைப்புச் செய்யவும் ஒரு ஆராய்ச்சிக்கூடம் பவானிசாகரில் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் அது செயல்படத் துவங்கும்.

**ஆதி திராவிடர் முன்னேற்றத் திட்டம் :**

கதர் தொழிலில் பல்லாயிரக் கணக்கான நபர்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வாய்ப்புள்ளது. ஆதி திராவிட மக்களை இத்தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கருதி, அவர்களுக்காக 20 கிராமிய நூற்புக் கூடங்களும், 8 நேபாள மாதிரித் தறிகளும் துவக்கிட 198182-ல் சிறப்புத் திட்டத்தின் கீழ் அரசு ரூபாய் 84.84 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 1,000 நபர்கள் பயனடையும் மேற்கொண்டு 20கிராமிய நூற்பு கூடங்களும், 8 நேபாள மாதிரித் தறி அலகுகளும், 2 பட்டு நூல் முறுக்காலை, 3 மெத்தை, தலையணை தயாரிக்க வேண்டிய இலவம் பஞ்சு உடைக்கும் அலகு, 3 சாயச் சலவை அச்சுக் கூடம், ஜெக்காடு துணி நெசவியல் கூடம் ஒன்றும் ரூ. 147.05 இலட்சம் மதிப்பில் அமைத்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் 1365 பேர்கள் பயனடைவர். ஏழை எளிய ஆதி திராவிட மக்களின் வருவாயைப் பெருக்க, செயல்படும் இத்திட்டங்கள் இவர்களது வாழ்க்கையில் மலர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பான்மையோர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறது இத்திட்டம்.



கதர் உற்பத்தியிலும், விற்பனையிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையில் இருப்பது பெருமிதத்திற்குரியதாகும். இதில் வாரியத்தின் பணி அரும் பணியாகும். மேலும், இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. வாரியம் பருவ காலத்திலும் கதர் உற்பத்தியில் முன்னின்று பல்லாயிரக் கணக்கோருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

# ஆதிதிராவிடர் நலத்துறையின் அரும்பணிகள்



சாதிக் கொடுமையினை அகற்ற வேண்டும் எனச் சீரிய குறிக்கோளுடன் புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நல்லரசு பல முற்போக்குத் திட்டங்களைத் தீட்டி அவற்றினைச் செம்மையான பாங்கில் செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிட மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டினைச் செம்மையான வகையில் தீவிரப்படுத்துவதற்கு புதியதாகக் கொண்டு வரப்பட்ட சிறப்பு உட்பகுதித் திட்டமானது 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுத் துறையிலிருந்து குறைந்தது 18 சதவீத நன்மையினை ஆதி திராவிடர்கள் பயன் பெற அரசு வழி வகுத்துள்ளது.

ஆதி திராவிடர் மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு உட்பகுத்த் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இம்மா நிலத்தில் உள்ள மொத்த ஆதி திராவிடர் குடும்பங்களில் 50 குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டுவர வகை செய்யப்படும். இந்த இலக்கினை அடைய ஒருங்கிணைந்த முறையில் எல்லாத் துறைகளும் செயல்பட்டு, ஆதி திராவிடர்களுக்கு அதிகப் பயனை நல்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரே குடும்பத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட திட்ட நலனை அளித்து மேம்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மக்கள் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களாக உளர். இவர்கள் நலனுக்கு விவசாய இடுபொருள்கள் 25./. மானியத்தில் வழங்கப்படுகின்றன. நவீன வேளாண்மை முறைகள் இம்மக்களுக்குப் ''பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின்'' கீழ் நல்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பயிர் செய்யப் பாசனக் கிணறுகள் தோண்டப்படுகின்றன. 1982-83 ஆம் ஆண்டில் 2,000 குழாய்க் கிணறுகள், ரூ. 4 கோடி செலவில் தமிழ்நாடு குழாய்க் கிணறு கழகத்தின் மூலம் ஏற்படுத்தித் தரப்படும். நில உச்ச வரம்புச் சட்டத்தினால் எடுக்கப்பட்ட நிலங்களைப் பெற்றவர்களில் ஏறக்குறைய 40./. ஆதி திராவிட மக்கள் ஆவர். அவர்களுக்கு 1 எக்டேருக்கு ரூ.1000 மானியமாக அந்நிலங்களிலிருந்து பயன் துய்க்க உதவியளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தேசிய



கலப்புத் திருமண விழாவில் மாண்புமிகு முதல்வர்

ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், ஆதி திராவிடர்கள் அதிகப் பயன் பெற வகை செய்யப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்களில் 50% ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் நலனில் 60% ஆதி திராவிடர்களுக்குக் கிடைக்கிறது. இத்திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள், குடிநீர் வழங்கல், வீடுகட்டுதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கால்நடைப் பராமரிப்பின் கீழ் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதி திராவிட மக்களின் உறுப்பினர் அளவினை 16 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. சரியாக இயங்காத பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நிதியுதவி வழங்குவதன் மூலம் மேம்பாடு பெறுமாறு செய்யப்படுகின்றன. ஆதி திராவிட மக்கள் கறவை மாடுகள் வாங்க இதுகாறும் பெற்று வந்த 33 சதவிகித உதவித் தொகை 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட இவர்கள் வாழும் குடியிருப்புகளுக்கு எல்லா அடிப்படை வசதிகளையும் செய்துதர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இவர்களின் குடியிருப்புகளுக்கும், இடுகாடுகளுக்கும் பாதை வசதி செய்து தரப்படுகிறது. எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி மாணவ,-மாணவியர்களுக்கான விடுதிகளில் உணவுக்காகச் செலவிடப்படும் தொகை 1981-82ம் ஆண்டிலிருந்து கணிசமாக உயர்த்தப்பட்டு திங்கள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.95 வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது போன்ற இதர இடங்களில் உள்ள இத்தகைய விடுதிகளில் திங்கள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

புதியதாக 90 அரசு விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

ரூ. 20 இலட்சம் செலவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பள்ளிகளுக்கு 5 நல்ல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ. 112 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்பட்டு வரும் 32 பள்ளிக் கட்டடங்கள் பல நிலைகளில் கட்டுமானப் பணியில் வெகுவான முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூ. 291.32 இலட்சம் செலவில் அரசு விடுதிகள் 51 கட்டப்பட்டன. 408.90 லட்சம் மதிப்பீட்டில் 139 கட்டடங்களுக்கான கட்டுமானம் பல் நிலைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

1976-77ல் கடன் உபகாரச் சம்பளமாக வழங்கப்பட்ட தொகை ரூ. 11.21 இலட்சம் மட்டுமே. 1981-82ல் இத்தொகை ரூ. 55.65 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1977-78 முதல் 1981-'82 வரை 26,248 மாணவ மாணவியர்களுக்குக் கடன் உபகாரச் சம்பளமாக ரூ. 204 இலட்சம் வழங்கப்பட்டது.

சட்ட பட்டதாரிகள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு உதவியாகவும், புத்தகங்கள், மேஜை, நாற்காலிகள் முதலியவை வாங்குவதற்கும் மானியமாக ரூ. 500ம் பதிவுக் கட்டணம் மற்றும் அறை வாடகை போன்றவைகளுக்கு ரூ. 750 கடனாகவும் வழங்கப்பட்டு வந்தது. 1980-81 முதல், மேற்படி மானியத்தொகை ரூ. 500ல் இருந்து ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நபர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் வழங்கப்பட்ட உதவித் தொகை 1.8.'80 முதல் ரூ. 55 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குடிதண்ணீர்க் கிணறு தோண்ட 1977-78ல் ரூ. 5000லிருந்து ரூ. 6000 ஆக உயர்த்தி அனுமதிக்கப்பட்ட அளவு உச்சவரம்பு 1980-81ல் ரூ. 6000லிருந்து ரூ. 7,500 ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் அவர்களது ஈமக்கடனைச் செய்ய ரூ. 50 நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் 1978-79ஆம் ஆண்டு கொணரப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கலப்பு மணம் புரிந்துகொண்ட தம்பதியர்களுக்கு வழங்கப்படும் சலுகையைப் பன்மடங்கு அதிகரிக்க ஆணையிடப்பட்டுள்ளது. ரூ. 4000 அவர்கள் பெயரில் வைப்புத் தொகையாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் போடப்படுவதுடன் ரொக்கமாக ரூ. 300, தங்கப் பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றன.

ஆதிதிராவிட நலத் துறை மூலம் 150 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுச் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1980-81ம் ஆண்டு 50 குழந்தைகள் காப்பகங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1981-82ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் நலனுக்காக, சிறப்பு உட் பகுதித் திட்டத்தின்கீழ் ரூ. 53 கோடி செலவிடப்பட்டது. 1982-83ல் இவர்களது நலனுக்காக ரூ. 114 கோடி செலவிடப்படும்.

ஒரு குழந்தையின் வளர்ச்சிப் பருவங்களில் 2½ முதல் 5 வயது வரையிலான முன்பள்ளிப் பருவம் மிக முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் அப்பருவம் தான் அக்குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு அடிகோலும் பருவம். இப்பிரச்சினையில் குழந்தைகள் நலத்தில் அக்கறை கொண்ட வல்லுநர்களுக்கோ அல்லது மனோதத்துவ நிபுணர்களுக்கோ மாற்றுக் கருத்து இல்லை என்பதை ஆணித்தரமாகக் கூற முடியும். ஆனால் எல்லோருக்கும் ஆதாரக் கல்வி வசதி செய்ய வேண்டுமென்ற கொள்கையுடைய நம் நாட்டில், ஆதாரக் கல்விக்குப் பாலமாகவும் அஸ்திவாரமாகவும் கருதப்படும் முன்னாதாரக் கல்வி புறக்கணிக்கப்பட்டுள்ளது ஒரு துரதிருஷ்டமே.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முன்னாதாரக் கல்வி அரசின் திட்டங்களில் ஒன்றாகவும் சமூக நலத்துறையின் முக்கிய திட்டமாகவும் இருந்து வருகிறது. ஆதாரக் கல்விக்கு அடிப்படையான மனோ நிலையையும் நல்ல பழக்க வழக்கங்களையும் உருவாக்கித்தரும் முன்னாதாரப் பள்ளியினை அமைப்பது ஆதாரப் பள்ளிகளை அமைப்பதற்கு ஈடான செயலாகும் என்பதை அரசு உணர்ந்துள்ளது.

2½ முதல் 5 வயது வரையுள்ள முன்பள்ளிப்பருவம்தான் குழந்தைகளிடையே நல்ல பழக்க வழக்கங்கள், குண நலன்கள்,





அறிவு வளர்ச்சி முதலியன உருவாக்கத் தகுதியான பருவமாகும். இப்பருவத்தில் அதைச் செய்யத் தவறினால் அக்குழந்தையின் வளர்ச்சியில் மிகப் பெரிய இழப்பு ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய அடுத்தடுத்த பருவங்களில் எவ்வளவு முயன்றாலும் முடிவதில்லை. இந்த வகையில் பார்த்தால், முன்னாதாரப் பள்ளி மூலம் குழந்தைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல், நாட்டின் நீண்ட கால வளர்ச்சிப் பணிகளில் ஒன்றாகவே கொள்ளலாம். இதனை மற்ற தொழில் வளர்ச்சித் திட்டங்கள் போல் நாடு முழுவதற்குமான ஒரு பொருளாதாரத் திட்டம் என்று கூறினாலும் மிகையாகாது.

முன்னாதாரப் பள்ளிகளில் காணப்படும் சுற்றுப்புறச் சூழ்நிலை வளர்ச்சிக்கும் நல்ல பழக்க வழக்கங்களை அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு குழந்தைகள் வளரும் சாதகமான சூழ்நிலைக்கும், ஒரு மனிதனின் சிறந்த எதிர்காலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இச்சாதகமான சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் பிற்காலத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருமளவில் உதவுவார்கள். பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்கு இது போன்ற முன்னாதாரப் பள்ளிகளை அமைத்துக்கொடுப்பது, அவர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் பற்றிய கவலையை நீக்கி நிம்மதியைத் தருவதுடன், நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாக உதவுகிறது.

முன்னாதாரக் கல்வியின் பயனைப் பெற்ற குழந்தைகளுக்கு பள்ளிப்படிப்பில் ஆர்வமும், அக்கறையும் ஏற்படுகின்றன. அதன்மூலம் கல்வியில் சாதனை புரியவும் வாய்ப்பு ஏற்படுகிறது. முன்னாதாரப் பள்ளிகளில் காணப்படும் பாகுபாடற்ற சமத்துவ நிலையும், நல்ல சூழ்நிலையும் பள்ளிகளில் ஒழுக்கமிக்க மாணவ மணிகளை உருவாக்கவும் தற்போது பள்ளி மாணவ மாணவிகளிடையே காணப்படும் குறைபாடுகள் நீங்கவும் வழி வகுக்கும். பள்ளிக்குழந்தைகள் அரைகுறைப் படிப்புடன் நின்றுவிடும் பழக்கத்தை இது வெகுவாகக் குறைக்கிறது.

இம்முன்னாதாரப் பள்ளிகள் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இலவசக் கல்வித்திட்டம் வெற்றிபெற உதவுகிறது என்பது வெளிப்படையான உண்மை. ஆனால் இதே முன்னாதாரக் கல்விதான் பெண்கள் கல்விக்



கும் ஊக்கமளிக்கிறது என்பதையும் மறுக்க முடியாது. ஏனெனில் தம்பி, தங்கைகளை நாள்முழுவதும் வீட்டில் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்புமிக்க பெண்குழந்தை, அத்தம்பி தங்கைகள் கல்விக்கூடம் சென்றால் தம் கல்வியையும் கவனிக்க அவகாசம் கிடைக்கிறதல்லவா?

முன்னாதாரப் பள்ளிகள் பெருமளவில் நடத்துவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மாநிலத்திலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏறத்தாழ 4343 குழந்தைகள் காப்பகங்கள் எனப்படும் முன்னாதாரப் பள்ளிகள் அரசால் நேரடியாக நடத்தப்பட்டு வருவதிலிருந்து, முன்னாதாரக் கல்வித் திட்டத்திற்கு அரசு அளித்துவரும் முக்கியத்துவம் தெள்ளத்தெளிவாக விளங்குகிறது. சிறு கிராமங்கள், மலைப்பகுதிகள், கால்நடையாக மட்டுமே சென்றடைய முடிகின்ற பகுதிகள் எனத் தமிழ்நாட்டிலுள்ள மூலைமுடுக்கெங்கும் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களிலுள்ள எல்லாக் குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தின் பலன் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதையும் பெருமளவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுவதன் நோக்கமாகும்.

இம் முன்னாதாரப் பள்ளிகள் பால்வாடி, குழந்தைகள் காப்பகம் என்ற பெயர்களில் மக்களுக்கு அறிமுகமாகியுள்ளன.

குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகள் விளையாடுவதற்கான விளையாட்டுக் கருவிகள் உள்ளன. அதுமட்டுமின்றிப் பற்பல விளையாட்டுக்கள், ஆடல் , பாடல், சுத்தம், சுகாதாரம் பற்றிய பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவை குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் மனவளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கின்றது. இக்குழந்தைகள் காப்பகங்களிலுள்ள விளையாட்டுக் கருவிகள், மற்றும் கற்றுத்தரப்படும் விளையாட்டுகள் மூலம் குழந்தைகளிடம் இயற்கையாகவே காணப்படும் சக்தியும் ஆற்றலும் திறமையும் வளர்ச்சியடைகின்றன. கூடிவாழ்தல், பகிர்ந்துண்ணுதல், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதல், ஒன்றுபட்டு உழைத்தல் போன்ற சமுதாய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நற்குணங்கள் உருவாகவும் வாய்ப்பளிக்கின்றன. உடற்பயிற்சி, விளையாட்டுக்கள், ஊட்டத்திட்டம் போன்றவற்றின் மூலம் குழந்தைகளின் உடல் வளர்ச்சி கவனிக்கப்படுகிறது.

குழந்தைகள் காப்பகங்களின் மூலம் முன்னாதாரக் கல்வியளிப்பது மட்டுமின்றி சத்துணவு அளிக்கவும், உடல் நலம் பேணவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளின் பல்வேறு தேவைகள் ஒருங்கிணைந்து கவனிக்கப்படுகின்றன. குழந்தைகளின் தேவைகளில் இன்ன தேவைதான் மிகவும் முக்கியமானது என்று அறுதியிட்டுச் சொல்ல இயலாது. எல்லாத் தேவைகளையும் ஒருங்கிணைந்த வகையில் பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகும்.



கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு மற்றும் நோய் நீக்கப் பணிகளைஅதிகவனம்செலுத்தும் முறையில் இம்மாநிலத்தைப் பல் வேறு மண்டலங்களாகப் பிரித்து அவ்வொவ்வொரு மண்டலத்திற்கும் தக்க அலுவலரை நியமித்துள்ளது. 1980-81-ஆம் ஆண்டில் 8 மண்டலங்கள் இருந்தன. ஆயின் 1981-82ல் மேலும் 2 மண்டலங்களை சேலம் மற்றும் திருச்சியில் நிறுவி. இம்மண்டலங்களிலும் அலுவலர்களை நியமித்துள்ளது. இம்மண்டலங்களின் கீழ், மாநிலம் முழுவதும் 61 கால்நடைப் பராமரிப்புக் கோட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால்நடைப் பராமரிப்புக் கோட்டத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர் கால்நடை மருத்துவ நிலையங்கள், கோழி விரிவாக்க நிலையம், ஆடு மற்றும் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலமாக ஆற்றப்படும் பணிகளையும், திட்டங்களையும் தம் தொழில் நுட்பப் பணியின் மூலம் திறம்பட நிருவகிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

மாடு, ஆடு, பன்றி மற்றும் கோழி ஆகியவற்றிடமிருந்து அதிகப்பட்ச உற்பத்தியைப் பெறும் பொருட்டு அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்த முயற்சிகள் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உள்ளூர் இன மாடுகளின் தரம் விஞ்ஞான ரீதியாக உயர்த்தும் பொருட்டு, பல்வேறு தொற்று நோய்த்தடுப்புச் சிகிச்சைகள் மற்றும் தீவனப் பயிர் உற்பத்தி அதிகரிக்கும் பொருட்டு தக்க வசதிகள் அளித்து, பால் உற்பத்தியைப் பெருக்குவதே தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும். ஏற்கெனவே 7 திட்டங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது 1981-82 ஆம் ஆண்டில் தமிழக அரசு மேலும் இரண்டு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை பண்ருட்டி மற்றும் தாம்பரத்தில் ஏற்படுத்தியுள்ளது.

தரமுள்ள இறைச்சி மற்றும் கம்பள உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகத்தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட ஆட்டினங்கள் தரம் உயர்த்துவதற்கான பண்ணைக கால்நடைப் பராமரிப்புத்துறை மேற்கொண்டுள்ளது. இவற்றிற்காக கிடாக்களை வேளாண்மை மறுநிதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 34 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் கால்நடைப் பராமரிப்புச் சிறப்புத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி



மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்தமேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் 455 ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும் வழங்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டுவருகின்றன. மேலும் 1981-82ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மேற்கூறப்பட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் 93 ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களைத் தமிழக அரசு நிறுவியுள்ளது.

கோழி இனவிருத்திக்கான தரமுள்ள பறவைகளும், குஞ்சு பொரிக்கும் முட்டைகளும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்றன. எளிய மக்களையும் கோழிவளர்ப்பு நிலையங்கள் அமைப்பதில் ஊக்குவிக்கும் பொருட்டு இத்துறையினரால் 29 கோழி நிருவாக நிலையங்களும், 2 குஞ்சு பொரிக்கும் நிலையங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் கடனுதவி மற்றும் தொழில் நுட்ப உதவி வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 5 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வந்தன. இவற்றைத் தவிர 1980-81ஆம் ஆண்டில் 2 சங்கங்களும் 1981-82 ஆம் ஆண்டில் 2சங்கங்களும் தமிழக அரசு இம்மாநிலத்தில் நிறுவியுள்ளது.

பன்றி வளர்ப்பினால், பின் தங்கிய மக்கள் போதிய பொருளுதவி பெறுகின்றனர். பொருளாதாரத் துறையில் இம்மக்கள் மேலும் வளம் பெற இக்கால்நடைப் பராமரிப்புத் துறையில் 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 1981-82ஆம் ஆண்டில் மேலும் பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்று இம்மாநிலத்தில் நிறுவப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அயலினப் பன்றியான வெள்ளை ஆர்க்ஷயர் பன்றிகள் இப்பிரிவில் வளர்க்கப்படுகின்றன. இனவிருத்திக்கேற்ற பன்றிகள் இப்பிரிவுகளிலிருந்து பன்றி வளர்ப்போர்க்கு வழங்கப்படுகின்றன.

1980-81ஆம் ஆண்டில் சிறிய மற்றும் குறுநில விவசாயிகளுக்கு 11,343 கறவை மாடுகள் வழங்கப்பட்டன, ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு 8.66 இலட்சம்நிதி உதவி877 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 364 உழவு மாடுகள் வழங்கப்பட்டன. 21 கோழி வளர்ப்புப் பிரிவுகளும், 11 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 15.34 இலட்சம் ரூபாய்செலவில் 13 நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களைத் தமிழக அரசு அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் நிரந்தர வசதிகளைச் செய்வதற்காக 1980-81ஆம் ஆண்டு 60.94 இலட்சம் ரூபாய் தமிழக அரசு அளித்துள்ளது. அவ்வசதிகளாவன:- இராமநாதபுரத்தில் 2351 கறவை மாடுகள் விநியோகித்தல், 179 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஆரம்பித்தல் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் 255 கறவை மாடுகள் விநியோகித்தல், 251 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் ஆகும். 1981-82ல் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு தமிழக அரசு இத்திட்டத்தின் கீழ்31.15 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது.

1980-81ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு ரூபாய் 6.76 இலட்சம் ஒதுக்கீடு அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ். உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைக்கும் குருத்துகுழி கோல் சிரேன் தீவனப்பயிர்ப் பண்ணைகளுக்கும் கூடுதல் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 4 ஆடுகள் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 415ஆடு வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உதகமண்டலத்தில் கால்நடை நோய்ப் புலனாய்வு நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 40 பன்றி வளர்ப்புநிலையங்கள் 0.32 இலட்சம் ரூபாய் செலவில் இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் நோக்கம், மேற்குத்தொடர்ச்சிமலைப்பகுதிகளில் உள்ள சிறு-குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கன்றுபராமரிப்பில் போதிய நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி அளித்து உதவுவதே ஆகும். 1980-81ஆம் ஆண்டில் இம்மலைப் பகுதிகளில் உள்ள 23 வட்டாரங்களில் 2000 கன்றுகள் பராமரிக்கப்படுகின்றன. இவ்வுதவிக்காக மத்திய அரசு 1981-82 மற்றும் 1982-83 ஆண்டுகளுக்கான 22. 85 இலட்சம் ரூபாய்வழங்கச் சம்மதித்துள்ளது.

ஆடு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 20 பெட்டை ஆடுகளும், ஒரு கிடாவும் கொண்ட பிரிவு 1981-82ஆம் ஆண்டில் 364 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளுக்கு இந்நிலையத்துக்கு ஆகும் செலவான ரூ. 4000-த்தில் ரூ. 1000-ரூபாய் மானியமாகவும் குறுநில மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ரூ. 1330- மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பொருளாதார ரீதியில் விவசாயிகள் பெரும் பயன் அடைந்திருப்பதால் இது விவசாயிகளால் பெரிதும் விரும்பப்படுகிறது.

கால்நடைப் பராமரிப்புத்துறையில் இயங்கும் 9 கால்நடைப் பண்ணைகளும் விதைப் பண்ணைகளாக இயங்குகின்றன. இத்துறையில் உள்ள 59 பொலிகாளை நிலையங்களுக்குத் தேவையான உயர் ரகப் பொலிகாளைகள் இப்பண்ணைகளிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன. இப்பண்ணைகளுக்காக 1981-82ஆம் ஆண்டில் 763.24 லட்சம் ரூபாய் தமிழகஅரசு செலவு செய்துள்ளது.

கால்நடைகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக இம்மாநிலத்தில் இத்துறையினரால் 671 கால்நடை மருத்துவ நிலையங்கள், 13பரிசோதனைக்கூடங்கள், 6 நடமாடும் நிலையங்கள், 8 கால்நடைநோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் 2227 கிளை நிலையங்கள் செயல்படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் 10புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 5 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக உயர்த்தப்பட்டன. 2 கால்நடை மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனைகளாக உயர்த்தப்பட்டன.



1981-82ஆம் ஆண்டில் 20 புதிய கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட்டன. 4மருந்தகங்கள் மருத்துவமனைகளாகவும்3 மருத்துவமனைகள் பிரதம மருத்துவ மனைகளாகவும் உயர்த்தப்பட்டன.

# ஆலய மணி ஓசை

சமயம், மனித வாழ்க்கைக்கு அடிப்படையானதொரு நெறி. இந்து மக்களின் மனத்திலும், வாழ்விலும் நிலைத்திருக்கும் எண்ணங்களோடு இந்து சமயம் இணைந்துள்ளது.

மனிதனை இயக்குகின்ற பொருளுக்கு 'உயிர்' என்ற பெயர் கொடுத்துள்ளோம். உயிர் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதற்கு உருவமில்லை. இருப்பினும் 'உயிர்' என்ற பெயரால் குறிப்பிடப்படும் பொருள் உண்மையானது. நம்மால் காணமுடியாத உருவமில்லாத, வடிவமில்லாத பொருள்கள் பல உலகின் கண் உள. அத்தகைய பொருள்களையும் பெயரிட்டுக் குறிப்பிடுகிறோம். உதாரணம்; காற்று, ஒலி, மணம், சுவை முதலியன, இதே போல் தான் உலகத்தையும் உலகத்தில் உள்ள உயிரினங்களையும் இதர பொருள்களையும் இயக்குகின்ற பொருளைக் 'கடவுள்' 'இறைவன்', 'ஆண்டவன்' என்று குறிப்பிடுகிறோம். பார்க்க முடியாத உயிர், காற்று, ஒலி, மணம், சுவை முதலியவைகள் இருப்பதை எவ்வாறு அனுபவத்தின் மூலம் தெரிந்து கொள்கின்றோமோ, அவ்வாறே 'கடவுள்', இறைவன்', 'சக்தி' எனப்-பெயரிட்டுக் குறிக்கப்படுகின்ற பொருளை அனுபவ மூலமாக உணரலாம். கடவுள் பற்றிய கொள்கையே சமயம். இந்து சமயக் கோட்பாடுகள், மனித வாழ்க்கை நலத்திற்கு வழிகாட்டியாகவும், இன் வாழ்வினை நல்குவதாயும், மனித வாழ்வை மேம்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

சமய வாழ்வில் தெய்வ வழிபாடு முக்கிய இடம் பெற்றுள்ளது. எங்கும் இறைவன் நிறைந்துள்ளான் என்பது நமது சமய தத்துவமானாலும், இறைவனை ஆர்வ மனத்தால் சிந்திக்கவும், மனமுருகிப் பாட்வும் அவனுக்குத் திருத்தொண்டு புரியவும் தேர்ந்த இடம் திருக்கோயில் என மக்கள் கொண்டனர். சமய அடிப்படையிலும் தத்துவ அடிப்படையிலும் உருவாக்கப்பெற்றன திருக்கோயில்கள். திருக்கோயில் ஊரின் மையமாக அமைந்துள்ளதைத் தமிழகத்தில் பல இடங்களில் காண்கின்றோம். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'', கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' எனப் பண்டு தொட்டு தமிழ்ப் பெருமக்கள் கூறி வருத

திருவேற்காடு கருமாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற சமபந்தி போஜனத்தில் மாண்புமிகு முதல்வர்.



லால் திருக்கோயிலைத் தம் வாழ்க்கையுடன் தமிழர்கள் பிணைத்துக் கொண்டார்கள் என்பது தெளிவு. பொன்னும் பொருளும் மட்டுமின்றி, கலை இலக்கியப் படைப்பாற்றல் ஆகியவை மூலம் ஆலயத்தின் அழகையும், சிறப்பையும் தமிழர்கள் கூட்டினர் என்பதற்குச் சான்றாக இன்று தமிழகத்தில் பல சைவ, வைணவ ஆலயங்கள் உள்ளன.



தெய்வம், பெயர் வகையில் பல இருந்தாலும், ''யாதொரு தெய்வங்கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே...தாம் வருவர்'' என்றவாறு, யார் எந்த முறையில் எப்படி வழிபட்டாலும், அந்த வழிபாடு பரம் பொருளை, முழுமுதற் பொருளை, மெய்ப் பொருளைச் சாரும் என்று உறுதியான நம்பிக்கையோடு, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற நமது சமய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கும் வகையில் தமிழர்களின் தொன்மையான பண்பாட்டினையும், ஆன்மீக நெறியையும், தல வளத்தையும் பெருக்குவதாயும் விளங்குகின்ற திருக்கோயில்களையும், இதர இந்துசமய நிலையங்களையும் நன்கு பாதுகாக்க வேண்டும், அவைகளின் நிருவாகம் சீராக இருக்க வேண்டும் என்ற கொள்கையைத் தமிழக அரசும், இத்துறையும் கடைப்பிடித்து ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

இத்துறையின் நிருவாகத்தின் கீழ் உள்ள சமய நிறுவனங்களாவன:

| | |
|---|---|
| ஆலயங்கள் | 31,612 |
| மடங்கள் | 55 |
| மடத்துக்கோயில்கள் | 55 |
| குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| அறக்கட்டளைகள் | 189 |
| சமண நிறுவனங்கள் | 17 |
| | 33,649 |

கடந்த இரண்டு ஆண்டுகளில் 8121 ஆலயங்கள் சேர்க்கப்பட்டன. 'சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிபட்டுத் தடுமாறாமல் ''வாய்த்தது நந்தமக்கு ஈதுஓர் பிறவி'' என மதித்து ''மண்ணில் நல்லவண்ணம் வாழ'' ''ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்று அவர்க்கு இன்னருள் சுரக்கும்'' தெய்வத்தை வழிபடும் மக்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு ஆலயங்களின் பூசைகளும், திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டுள்ளன.

**தங்க ரதம்**

சுவாமிமலை, சமயபுரம், மதுரை ஆகிய 3 ஆலயங்களில் தங்கரதம் செய்யப்பட்டுள்ளன.

**சமய நிறுவனங்களின் நிருவாகத்தை செம்மைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் மிக முக்கியமானவை.**

1. தணிக்கை செய்வதில் முன்பு உபயோகத்தில் இருந்த தணிக்கை அட்டவணைகளை மாற்றித் தேவையான விவரங்கள் அடங்கப்பெற்ற வினாப்படிவத்தின் மூலம் மாற்றி அமைத்து தீவிர திடீர் தணிக்கைச் சோதனைகளால் தணிக்கை மறுப்புகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கும் ஏதுவாக இருப்பதுடன் தணிக்கையின் தரமும் நன்கு உயர்ந்துள்ளது.

2. சமய நிறுவனங்களின் உண்டியல்களைத் திறப்பதற்கும், மற்றும் அதில் உள்ளவற்றை எண்ணுவதற்குமான முறைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

**ஆலயப் பணியாளர்கள்**

1.4.'81 முதல் பணியாளர்களின் சம்பளம், படி முதலிய செலவு ஆண்டு உதவித்தொகை நிர்ணய வருமானத்தில் 30 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும் என்ற வரம்பு 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், அவ்வப்போது பழனி, சுசீந்திரம், உதவி ஆணையர்-செயல் அலுவலர் உள்ள ஆலயங்கள் மற்றும் இதர ஆலயப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆலயப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப்படி, குடும்பநல நிதித்திட்டம், பண்டிகை முன்பணம், திருவிழா சிறப்பு ஊதியம் மற்றும் பணிக்காலத்தில் இறந்துவிடும் பணியாளர்களுக்கு இறுதிச் சடங்குகளுக்காக ரூ. 250





மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச உடை வழங்குகிறார்கள்

அனுமதித்தல் ஆகிய இதர சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு ரூ. 10,000 அல்லது அதற்கு மேலும் வருமானம் வரும் 345 திருக்கோயில்களில் பணியாற்றுபவர்களுக்குப்பணிக்காலிக் கொடை நிதித்திட்டம் நடைமுறையில் உள்ளது.

**தமிழ் இசை வளர்ச்சி**

நாதசுரம், தவுல் மேற்பயிற்சி பெற 5 மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 67,100 வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒதுவார்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 3 ஒதுவார்களுக்கு ரூ. 4,750 வழங்கப்பட்டுள்ளது:

**ஆலயங்களினால் வெளியிடப்பட்டுள்ள நூல்கள்**

- ஆதி சங்கீத மும்மூர்த்திகள்
- பகவத் கீதை (ஆங்கிலம்)
- தமிழ்நாட்டு ஆலயங்களில் சுற்றுப்பயணங்கள் (ஆங்கிலம்)
- அருணகிரிநாதர் அருளிய தலத்திருப்புகழ்
- ரெங்கநாதர் (ஆங்கிலம்)
- மயிலை உறை மகா சக்திகள்
- அருணகிரிநாதர் அடிச் சுவட்டில்
- முருகன் ஆயிரம்
- ஓம் சக்தி அன்னை கௌமாரி விஜயம்
- ஆண்டாள் திருப்பாவை (ஆங்கிலம்)
- திரு எழு கூற்றிருக்கை
- முருகன் மூவாயிரம்

**சிறப்பு வழிபாடு**

15.8.1981

| | |
|---|---|
| ஆலயங்களின் எண்ணிக்கை | 3,841 |
| கலந்துகொண்ட மக்கள் | 8 லட்சம் |

**சிறப்புத் திருமணங்கள்**

| | |
|---|---|
| நடைபெற்ற திருமணங்கள் | 711 |
| இதில் ஆதிதிராவிட மணமக்கள் | 455 |
| பிற்பட்டோர் | 183 |

**உலகத் தமிழ் மாநாடு மற்றும் பொருட்காட்சிகள்**

1981ம் ஆண்டு ஜனவரி திங்கள் உலகத்தமிழ் மாநாடு தொடர்பாக மதுரையில் நடைபெற்ற பொருட்காட்சியில் இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை கலந்து கொண்டு முதற் பரிசு பெற்றது.

மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்ற ஆறுஅரசுப் பொருட்காட்சிகளில் அறநிலையத்துறை கலந்து கொண்டு ஐந்து முதற் பரிசுகளையும் ஓர் இரண்டாம் பரிசையும் பெற்றது.

**வல்லுநர் குழு**

இந்துசமய நிறுவனங்களில் சாதி-இன உட்பிரிவு அல்லாது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமிக்க அரசினால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு தனது அறிக்கையை 3.2.82ல் அரசிடம் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள இந்து சமய நிறுவனங்களைப்பொறுத்து எழும் பொதுப் பிரச்சனைகளைப் பற்றிய கருத்துக்களை அரசுக்கு அவ்வப்போது எடுத்துக் கூறுவதற்காக மாண்புமிகு செய்தி-மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 37 பேர்கள் அடங்கிய உயர் மட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்களினால் ஆலய நிலங்களின் குத்தகைதாரர்களிடமிருந்து வரவேண்டிய குத்தகைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், சமீபத்தில் ஏற்படுத்திய சட்டதிருத்தத்தின் விளைவாக ஆலயங்களின் விளைபொருள் பங்கு 40 சதவீதத்திலிருந்து 25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆராய்ந்து அரக்குக்கருத்துக்களைத் தெரிவிக்க மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 13 பேர் கொண்ட உட்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

இக்குழுவின் முதற் கூட்டம் 30.3.'82 அன்று மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

- மேற்கண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட பல்வேறு முடிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.





**கடந்த இரண்டு ஆண்டுகளில்**

| | |
|---|---|
| குடமுழுக்கு | 166 ஆலயங்கள் |
| திருப்பணிக்கு நிருவாக அனுமதி | ரூ. 11.77 கோடி |
| மதிப்பீடுகள் 1168 | ரூ. 5.39 கோடி |
| அரசுமானியம் 161ஆலயங்கள் | ரூ. 26 லட்சம் |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு 19 | ரூ. 1.27 லட்சம் |
| புதிய இராஜகோபுரங்கள் | 5 ஆலயங்கள் முடிக்கப்பட்டன 8 ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. |
| திருமண மண்டபங்கள் | 8 முடிக்கப்பட்டன. |
| திருமண மண்டபங்கள் | 28 கட்டப்பட்டுவருகின்றன. |
| பெருமளவில் திருப்பணி | 14 ஆலயங்கள் (பழனி, திருவரங்கம், சிதம்பரம், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம், உத்தரகோச மங்கை, திருச்செந்தூர், சேலம், பாரியூர் இராமே சுவரம்.) |
| முடிவுபெற்ற திருப்பணி | 874 வேலைகள்-ரூ.2.10கோடி |
| பக்தர்களுக்கு வசதிகள் | 90 அறைகள் கட்டப்பட்டுள்ளது. 136 அறைகள் கட்டப்பட்டுவருகின்றன. 9 குடில்கள் முடிக்கப்பட்டன. 30 குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன. |
| வருமானப் பெருக்கம் | கூடுதல் வருமானம் |
| | ரூ. |
| 9,240 கட்டடங்கள் | 27.14 லட்சம் |
| 4,169 மனை | 4.69 லட்சம் |
| 13,719 ஏக்கர் சாகுபடி நிலம் | 2.26 லட்சம் |
| ஆக்ரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட நிலம்1532 ஏக்கர் | 0.32 லட்சம் |

**சிலைகள் பாதுகாப்பு :**

| | | |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட விக்கிரகங்கள் | | 4819 |
| உலோகத்திருமேனிகள். புகைப்படம் எடுக்கப்பட்ட ஆலயங்கள் | 1,085 | |
| அரசு மான்யம் வழங்கப்பட்ட ஆலயங்கள் | | 1,085-ரூ. 3.82 இலட்சம் |



திருத்தணித் தெப்பத் திருவிழா



சமயபுரம் ஆலயத்தின் சிறப்புத் திருமண விழாவில்...



## தமிழ்ப் புலவர்கள் நியமனம்

திருக்கோயில்களில் 88 தமிழ்ப்புலவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 165 வழங்கப்படுகிறது.

## சமூகப் பணிகள் விவரம்

| | |
|---|---|
| சுவாமிமலை, திருப்போரூர், அழகர் கோயில் ஆலயங்கள் | 3 சித்த வைத்தியசாலை திறக்கப்பட்டன. |
| திருச்செந்தூர் | —தேவாரப்பள்ளி துவக்கப்பட்டது. |
| பழனி | —பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கப்பட்டது. |

## பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள சமய நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட உதவி

| | |
|---|---|
| 1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், பிஜித்தீவு | ரூ. 1 லட்சம் |
| 2. அருள்மிகு திருக்கேதீஸ்வரர் ஆலயம், திருக்கேதீஸ்வரம், இலங்கை | ரூ. 2,37,000 |
| 3. அருள்மிகு மீனாட்சி சொசைட்டி, ஹுஸ்டன் அமெரிக்கா | 6,000 |
| 4. அருள்மிகு ஆதிசங்கர விமான மண்டபக்குழு, அலகாபாத், உத்தரப்பிரதேச மாநிலம் | 2,00,000 |
| 5. அருள்மிகு உத்திர சிதம்பர நடராஜர் மந்திர், சதாரா, மகாராட்டிர மாநிலம் | 3,90,000. |



திருச்செந்தூர் ஆலயம்



# உறுதிமொழிகள் நிறைவேறுகின்றன!

— மாண்புமிகு முதல்வர்

"எத்தனை தான் இடர்ப்பாடுகள் குறுக்கிட்டாலும், தடைகள் பல நேரிட்டாலும், நாங்கள் அரசுப் பொறுப்பேற்ற பொழுது மக்கள் மன்றத்தின் முன்னால் அளித்த உறுதிமொழியை, வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என்பதை உறுதியுடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். பணியாற்றும்பொழுது வேண்டுமானால், சிற்சில சமயங்களில். தாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால், நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வைப்பதுதான் எங்களுடைய இலட்சியம். அதற்காக முழுமூச்சுடன் தொடர்ந்து இந்த அரசு யாடுபடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு
1-7-1982

# தமிழக அரசின்
# இரண்டாண்டுப் பணிகள் தொகுப்பு மலர்



திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — ஆனி 17

# மாபெரும் சமுதாயப் புரட்சித் திட்டம்

தமிழரசு இலவச இணை
1-7-1982





# மாபெரும்
# சமுதாயப்
# புரட்சித்
# திட்டம்

# பதிப்புரை

தமிழக அரசு ஜூலை 1-ஆம் நாளில் அறிமுகம் செய்துள்ள 'ஏழைக் குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவுத் திட்டத்தின்' தொடக்க விழாவினை ஒட்டி மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் 30.6.1982-ல் சென்னை வானொலியிலும்,தொலைக் காட்சியிலும் ஆற்றிய சிறப்புரையைத் தொகுத்து 'தமிழரசு' வழங்கும் தமிழக அரசின் இரண்டாண்டுப் பணிகள் தொகுப்பு மலருடன் (1.7.'82) இலவச இணைப்பு நூலாக வெளியிடுகிறோம்.

இயக்குநர்,
செய்தி—மக்கள் தொடர்பு,
தமிழ்நாடு அரசு.



# இலவச சத்துணவுத் திட்டத்தால் சமுதாயம் பெறப்போகும் பலன்கள் !

* **சாதிமத வேறுபாடின்றி 60 இலட்சம் குழந்தைகள் இலவச சத்துணவுத் திட்டத்தால் பயனடைவர்.**

* முன்பிருந்த 4343 குழந்தைகள் காப்பகங்கள் தவிர, புதியதாக 15,501 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

* **புதிய திட்டத்தின்படி ஆண்டின் 365 நாட்களும் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படும்.**

* 15,500க்கு மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்களுக்குப் புதியதாக 15,500 மேற்பட்ட குழந்தைகள் நல அதிகாரிகள் நியமனம்.

* **குழந்தைகள் காப்பகங்கள் உதவியாளர், சமையல்காரர்கள் என்று ஏறத்தாழ இலட்சம் பேருக்கு ஏழைத் தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு - விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை.**

* கிராமப்புறங்கள் ஒவ்வொன்றிலும் ரூ. 38,000 செலவில் உணவுக்கூடம் அமைக்கப் படும்.

* **சத்துணவுத் திட்டத்தில் இயன்றளவு உதவிட, எல்லா மக்களும் பங்கேற்க வாய்ப்பு.**

# மாபெரும் சமுதாயப் புரட்சித் திட்டம்

எனது வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே, உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம்.

தமிழ்நாட்டில் வாழும் ஏழைக் குழந்தைகளின், மன்னிக்கவும், பட்டினியால் வாடும் ஏழைக் குழந்தைகளின் ஒருவேளைப் பசியைப் போக்கும் திட்டத்தைப் பற்றி உங்களிடையே நான் பேச வந்திருக்கிறேன்.

''அன்னக் குவளையில்தான் இறைவன் ஏழைக்குக் காட்சி அளிக்கிறான்'' என்று அமரர் அண்ணல் மகாத்மா காந்தி அடிகள் கூறியுள்ளார்கள்.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்'' என்று அமரர் அண்ணா சொன்னார்கள்.

''உறுபசியும், ஓவாப்பிணியும் செறு பகையும் சேராது இயல்வது நாடு'' என்பது வள்ளுவரின் வேதவாக்கு. 70 கோடி என்ற எண்ணிக்கை அளவை எட்டிக் கொண்டிருக்கும் இந்திய நாட்டின் மக்கள் பெருக்கம் ஒரு புறம், மீளமுடியாத வறுமையின் பயங்கரக் கொடுமை மறுபுறம், இவ்விரண்டு சூழலில் பிறந்துள்ள குழந்தைகள் ஒட்டிய வயிறோடும், உலர்ந்த உதடுகளோடும், இடுங்கிய கண்களோடும் இளைத்த மேனியோடும் இருக்கும் அவல நிலையை நமது நாட்டு மருத்துவர்கள் பல முறை வேதனையோடு சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

## தாய்க் குலத்தின் கண்ணீரைத் துடைத்திட...

''கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை'' ஆம்; பசித்தால் அழ மட்டுமே தெரிந்த வயதில் பசிக் கொடுமைக்காளாகும் அனுபவத்தை நான் இளமையில் அறிந்ததன் விளைவே இத் திட்டம். பக்கத்து வீட்டிலிருந்த ஒரு தாய் முறத்தில் அரிசியைத் தந்து கஞ்சிக் காய்ச்சிக் குடிக்க எங்களுக்கு உதவியிருக்காவிடில் மூன்று நாட்களாகப் பட்டினியாகக் கிடந்த எங்கள் தாயும் நாங்களும் என்றோ இந்த உலகை விட்டுப் போயிருப்போம். அத்தகைய தாய்க் குலம் முழு நம்பிக்கையோடு என்னை முதலமைச்சராக்கியுள்ளது.

அந்தத் தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்க எனக்குத் தெரிந்த வழியில் இப் பணியை மேற்கொண்டுள்ளேன்.

ஏழ்மை நிலையில் தவித்துக் கொண்





டிருக்கும் பல குடும்பங்களில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகட்குப் பிசைந்து ஊட்டுவதற்குச் சோறு இல்லாமல் கை பிசைந்து நிற்கும் அவல நிலையைப் போக்கச் சிறிதேனும் முயற்சி செய்வது எனது அவசர, அவசிய கடமை என்பதை உணர்ந்தேன். இந்த அடிப்படையில்தான், 2 முதல் 10வயது வரை ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதற்கு வகை செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. 1982 ஜூலைத் திங்கள் முதற் கொண்டு, தமிழ்நாடு முழுவதிலுமுள்ள, ஒருவேளை உணவிற்கும் வழியின்றித் தவிக்கும்-ஏழ்மையில் வாடும் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத்திட்டம் வகை செய்யும்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 4.82 கோடியாகும். இதில் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 42.10 இலட்சம். 5 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 63.73 இலட்சமாகும். ஆக 2 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மொத்தம் 105.83 இலட்சமாகும். ஏழ்மைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு இந்த இலவச உணவு அளிக்கப்பட வேண்டுமென்று திட்டத்தில் வரையுறுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் ஏறத்தாழ 60 இலட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த உணவுத் திட்டம், தற்போது சமூக நலத்துறை இயக்கி வரும் குழந்தைகள் காப்பகங்கள் மூலம் செயல்படுத்தப்படும். 5 முதல் 9 வயதுத் தொகுதியிலுள்ள குழந்தைகளைப் பொறுத்த வரை, இத்திட்டம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும்.

இந்த இரண்டு அம்சங்களுக்கும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களே முழுப் பொறுப்பையும் ஏற்பார்கள். அவர்களுடைய மேற்பார்வையில்தான், திட்டத்தின் இரு கூறுகளும் செயல்படும். மாநில அளவில், அமைச்சரவையில் இத்திட்டத்தை நேரடியாகக் கண்காணிக்கும் பொறுப்பை நானே ஏற்றுக் கொண்டுள்ளேன். இப்பொறுப்பில் எனக்கு உதவி செய்ய சில அமைச்சர்களையும், அதிகார சார்பற்ற வல்லுநர்கள் சிலரையும், அதிகாரிகள் சிலரையும் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு கிராமத்திலும்...

சமூக நலத்துறை ஏற்கெனவே 4343 குழந்

ளைதகள் காப்பகங்களை மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றது. இப்போது இப்புதிய திட்டத்தை மாநிலம் முழுவதும்செயல்படுத்து வதற்கு, ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் உணவு மையம் இயங்க வேண்டும் என்ற அடிப்படை யில், இதுவரை இயங்கி வந்த குழந்தைகள் காப்பகங்களுக்கு மேலாக 15,501 புதிய குழந் தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி புகட்டுவதற்கும் உண வோடு உணர்வையும், அறிவையும் ஊட்டு வதற்கும், குழந்தை நல அதிகாரி பொறுப்பில் ஒரு பெண் நியமிக்கப்பட்டுள்ளார். பத்தா வது வகுப்புப் படித்து அதில் தேர்ச்சி பெற்றி ருக்க வேண்டும் என்றும் உள்ளூரைச் சேர்ந்த வராக இப்பெண் இருக்க வேண்டும் என்றும், விதவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் தகுதிகள் நிர்ணயிக்கப் பட்டு இவர்கள் அதிகாரிகளாலும், அதிகாரச் சார்பற்ற உள்ளூர்ப் பிரமுகர்கள் சிலரின்—ஆலோசனையின் அடிப்படையிலும் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்வுப் பணி முடிந்து இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஜூலை முதல் தேதியில் இருந்து இந்தக் குழந்தைகள் காப்பகங்களில் பொறுப்பேற்க இவர்கள் ஆயத்த நிலையில் உள்ளனர்.

ஐந்துக்கு மேற்பட்டு பத்துக்கு உட்பட்ட வயதுத்தொகுதியைச்சேர்ந்தகுழந்தைகளைப் பொருத்தவரை, தமிழ்நாட்டிலுள்ள 36 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகளின் மூலம் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பழையதும் புதியதும்!

பள்ளிகளைப் பொறுத்த வரை, சென்ற சில ஆண்டுகளாக மதிய உணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

ஆனால், அத்திட்டம் செயல்பட்டு வந்த முறைக்கும், இப்போது செயல்படுத்தப்பட இருக்கும் மதிய உணவுத் திட்டத்தின் முறைக் கும் அடிப்படையிலேயே மிகப் பெரிய வேறு பாடு உள்ளது.

பழைய திட்டம் பள்ளியில் பயின்று வந்த மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்குத் தான் பயனளித்து வந்தது.

புதிய திட்டம் பள்ளியில் உள்ள ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் பயன்தரும்.

பழைய திட்டத்தின்படி ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மட்டும்தான் பள்ளியில் உணவு அளிக்கப்பட்டு வந்தது.

புதிய திட்டத்தின்படி ஆண்டின் 365 நாட்களிலும் மதிய உணவு வழங்கப்படும்.

பழைய திட்டத்துக்கு அரசு ஒவ்வொரு குழந்தைக்கு 10 காசு வீதம் செலவு செய்து வந்தது. ஒவ்வொரு ஒன்றியமும் ஒரு குழந்தைக்கு 5 காசு வழங்க வேண்டும் என்ற முறை இருந்தது.

ஆனால், பொருளாதார நெருக்கடியின் காரணமாக பல ஒன்றியங்கள் இந்தத் தொகையை வழங்க இயலவில்லை.

ஆகவே, அரசு அளித்த 10 காசுகளைக் கொண்டும், உள்ளூர்ப் பிரமுகர்களின் உதவியுடனும்தான் பழைய திட்டம் செயல்பட வேண்டி இருந்தது.

புதிய திட்டத்திலோ, மதிய உணவு ஒன்றுக்கு ஆகும் 45 காசு செலவு முழுவதையும் அரசே நேரடியாகத் தந்து விடுகிறது.

ஆகவே பொதுமக்களிடமிருந்து பணத்தை வசூலித்து இத்திட்டத்தை நடத்தும் நிர்ப்பந்தத்திற்கு இப்போது ஆசிரியர்கள் யாரும் ஆளாக வேண்டிய அவசியமில்லை. மேலும், பழைய திட்டத்தின்படி, பல பள்ளிகளில் ஆசிரியர்களே சமையல் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை இருந்தது. புதிய திட்டத்தின்படி, ஒவ்வொரு பள்ளியிலும் சமையல்காரர் ஒருவரும், அவருக்கு உதவியாகச் சிற்றாள் ஒருவரும் நியமிக்கப்பட திட்டத்திலேயே வசதி செய்யப்பட்டு, இச்செலவுகளையும் அரசே ஏற்க முன் வந்துள்ளது.

## இலட்சக்கணக்கான குழந்தைகள் பயன் பெற...

ஒரே வகையான உணவை தினந்தோறும் உட்கொள்வதால் குழந்தைகளுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிடக் கூடாதென்பதைக் கருதி, கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு 28 உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவ்வாறு தயாரித்து வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 20,000 குழந்தைகள் காப்பகங்கள் மூலமாக, 20 இலட்சத்திற்கும்மேற்பட்ட 2 முதல் 5 வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் 36,000 பள்ளிகள் மூலமாக, 5 முதல் 10 வயதுத் தொகுதியைச் சார்ந்த ஏறத்தாழ 40 இலட்சம் குழந்தைகளுக்கும் உணவு அளிக்கும் இந்த மாபெரும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு, ஆழ்ந்த ஆய்வுக்கும் ஆலோசனைக்கும் பின்பு அவசியமான ஆயத்தங்கள் எல்லாம் ஆற்றல் மிக்க வகையில் செய்யப்பட்டுள்ளன.

திட்டம் செயல்படுவத்தைக் கண்காணிப்பதற்கு அரசுக்கும், உள்ளூர் மட்டத்தில் அதிகாரிகளுக்கும் ஆக்கப் பூர்வமான ஆலோசனைகள் கூறுவதற்கும் உயர்மட்டக் குழுவைத் தவிர, உள்ளூர் குழுக்களை, பொதுச் சேவையில் ஆர்வமுள்ள பெரியவர்களையும், குறிப்பாகப் பெண்களையும் கொண்டு அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டு. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கவிருக்கும் குழுவில் பொதுமக்கள் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள்.

இத்திட்டத்தின் குறிக்கோள் உன்னதமானது. உயர்ந்தது, என்று அனைவரும் ஏற்றுக்கொண்ட போதிலும், திட்டம் செயல்படும் விதத்தில் கவனமாக இருக்கவேண்டுமென அரசு கருதுகிறது. ஆங்காங்கு உள்ள நிலைமையை ஆய்ந்து அறியவும், உடனுக்குடன் குறைகளைக் களைந்து, நிலைமையைச் சீர்செய்யவும் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள குழுவில் பொதுமக்களும், குறிப்பாக தாய்மார்களும் இடம் பெறுவார்கள்.

இத்திட்டத்தின் பயனாகப் பல இலட்சக் கணக்கான ஏழைக் குழைந்தைகளுக்கு ஒரு வேளையாகிலும் சத்துணவு கிடைப்பதை நாம் உறுதிப்படுத்துவதோடு, அந்தக் குழந்தைகளைச் சார்ந்த குடும்பங்களுக்கு இதன் மூலம் மிகப் பெரிய சுமை குறைக்கப்படுகிறது.

இது தவிர, இத்திட்டத்தின் கீழ் புதிதாக கிராமப் பகுதிகளில் 15,500க்கும் மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுள்ளதால், 15,500 குழந்தைகள் நல அதிகாரிகள் நியமிக்கப்படுவதுடன், புதிதாகத் திறக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காப்பகத்திலும் இரண்டு உதவியாளர்கள் வீதமும் ஏற்கெனவே இயங்கி வரும் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதலாக ஒரு உதவியாளர் வீதமும் ஏறத்தாழ 40 ஆயிரம் பெண் உதவியாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர 36 ஆயிரம் பள்ளிகளிலும், 36 ஆயிரம் சமையல்காரர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

அதிலும், குறிப்பாக ஏழைத் தாய்மார்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது சிறப்பான அம்சமாகும்.

### புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்திட...

இதை வெறும் உணவூட்டும் திட்டமாக மட்டும் நாம் வகுக்கவில்லை.

சாதி, சமய வேறுபாடின்றி இளமைப் பருவத்திலிருந்தே குழந்தைகள் பழகிப் படித்து

உண்டு வளரும் நிலையை உருவாக்குகிறோம்.

சமுதாயத்தில் முற்போக்கான மாறுதல் மலரக் கூடிய வாய்ப்பு இதனால் ஏற்படும்.

குழந்தைக்கள் காப்பகங்கள் மூலம் சுத்த, சுகாதாரப் பழக்கங்களும், நல்லொழுக்கமும், ஒருமைப்பாட்டுணர்வும், கட்டுப்பாட்டுணர்வும் அவர்களுக்குக்கிடையே வளர்க்கப்படும்.

கிராமப்புறங்களில் தாய்மார்களுக்கென கழிப்பிடங்கள் கட்ட தனியாக ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கழிப்பிடங்கள் இச்சிறு பிள்ளைகளுக்கும் பயன்பட வேண்டும் என்பது எங்கள் எண்ணம்.

கழிவுப் பொருள்களிலிருந்து எரிபொருளையும், எருவையும் உருவாக்குவதும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாகும்.

கழிப்பிடங்களைப் பயன்படுத்தும் சுகாதாரப் பழக்கத்தினை இளம் வயதிலேயே நிலை நாட்ட இது பயன்படும்.

இந்த உணவுக் கூடங்களில் ஒவ்வொரு குழந்தைக்கும் பயன்படுத்துவதற்காக, தனியாக தட்டு, குவளை போன்றவையும் அரசு செலவிலேயே வழங்கப்பட இருக்கின்றன. இதன் மூலம் தங்களுடைய தட்டு, குவளைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள குழந்தைகளுக்குக் கற்றுத் தரப்படும். இந்தக் கூடங்களில் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும், வசதியுள்ள இடங்களில் காய்கறி, கீரை முதலியவற்றை உற்பத்தி செய்யவும் குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

இவ்வாறு குழந்தைகளின் உடல் உறுதியையும் உள்ளச் செம்மையையும் பேணி, போற்றி, பாதுகாக்கும் வகையிலும், ஊருக்கு நல்லது செய்யும் உணர்வை இளம் வயதிலிருந்தே அவர்களுக்குப் போதிக்கும் வகையிலும் கிராமப்புறச் சமுதாயத்திலே ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தவும் இத்திட்டத்தினை ஒட்டிய நடவடிக்கைகள் அமைக் வேண்டும் என்பதே எங்கள் விருப்பமும் வேட்கையுமாகும்.

அனைவருக்கும் நன்றி !

இப்போது மதிப்பிட்டுள்ளபடி ரூ. 100 கோடிக்கு மேல் இத்திட்டத்தினால் அரசுக்கு நிதிப்பொறுப்பு ஏற்படும். போகப் போக இச்செலவு அதிகரிக்கவும் நேரிடலாம். நெருக்கடியான நிதி நிலைமையிலும் இவ்வளவு பெரும் பொறுப்பை மாநில அரசு தாமாகவே ஏற்றுக் கொள்ள முன் வந்துள்ளது என்றால், இத்திட்டத்தினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய மகத்

தான நன்மையில் அரசுக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையே காரணமாகும்.

இப்பெரும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும் நேரத்தில் இதை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பதில், பொதுமக்களும், சேவை உணர்வு கொண்டவர்களும், பண வசதி படைத்தவர்களும், அரசுக்கு உறுதுணையாக நின்று ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப் புறங்களில் இந்த உணவுக் கூடங்களைக் கட்டுவதற்கு ஒவ்வொன்றிற்கும் 38 ஆயிரம் ரூபாய் மதிப்பிடப்பட்டு அந்த அடிப்படையில் வரி வடிவப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பொதுநலனில் அக்கறை கொண்ட ஒரு சில பெரியோர்கள் தங்கள் சொந்தச் சார்பிலும். தங்கள் நிறுவனங்கள் .சார்பிலும் ஒவ்வொருவரும் நான்கு அல்லது ஐந்து கூடங்கள் கட்டுவதற்குத் தாமாகவே முன்வந்துள்ளது என்பது எங்களுக்குப் பெரிதும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறது.

குறிப்பாக, இப்போதைய சென்னை ஷெரீப் சிவந்தி ஆதித்தன் அவர்கள், செட்டிநாட்டரசர் அவர்கள், சேஷசாயிவிசுவநாதன் அவர்கள், எம்.ஏ. எம். ராமசாமி அவர்கள், எஸ்.எஸ்.எம்.சவுண்டப்பன் அவர்கள், ஏ.சி முத்தையா அவர்கள் போன்றவர்களும் பல்வேறு நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் உதவ முன் வந்துள்ளனர். இவர்களுக்கெல்லாம் தமிழக அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வகையில் இத்திட்டத்திற்கு உதவ விரும்பும் பெரியோர்களும், நிறுவனங்களும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு உதவ முன் வருபவர்கள் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் மாநில அளவில் இத்திட்டத்திற்கென பொதுத்துறையில் நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்குப் பெற வழியுண்டு. இவ்வாறு உணவுக்கூடம கட்ட நன்கொடை அளிப்பவர்கள் குறிப்பிடும் பெயர் அக்கூடங்களுக்குச் சூட்டப்படும். உதவவேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்து ஆனால் உணவுக்கூடம் கட்டித் தரும் அளவுக்குப் பணவசதியில்லாதவர்களும் இந்தத் திட்டத்தினைச் செயலாக்குவதில் பங்கு கொள்ளலாம். குழந்தைகளுக்குப் பயன்படுவதற்காகத் தட்டு, குவளை முதலியவற்றை வாங்கித் தரலாம். சமையல் கூடங்களுக்குப் பயன்படும் பாத்திரங்களை வாங்கித் தரலாம். நிதி உதவி செய்ய வசதியற்றவர்கள் தாங்கள் தங்கள் ஊரில் இத்திட்டம் நல்ல

முறையில் நடைபெறுகின்றதா என்பதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஏற்கலாம்.

**ஒளிமயமான நிகழ்ச்சியாக...**

இத்திட்டத்தைப் பற்றிய விவரங்களை அறிய நம் பாரதப் பிரதமர் ஆர்வம் தெரிவித்துள்ளார் என்ற செய்தி நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து மட்டுமல்லாது, பல அயல் நாட்டு நிறுவனங்களிலிருந்தும் இத்திட்டத்தில் அக்கறை காட்டியும் ஆதரவு அளித்தும் செய்திகள் வந்துள்ளன. நம்முடைய குழந்தைகள் நாட்டின் பொதுச்சொத்து. அக்குழந்தைகளின் வாழ்வை வளமாக்க நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் நாட்டின் எதிர்கால நலத்திற்கு நாம் செய்யும் முதலீடாகும்.

இந்த மாபெரும் திட்டத்தைச் செயலாக்க இரண்டொரு மாதங்களாக இரவும் பகலும் உழைத்த தலைமைச் செயலாளர் திரவியம் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாயிருந்த அனைத்து அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், இத்திட்டத்தின் பல்வேறு மட்டத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழரசு அச்சகம், சென்னை-600 002.

இத்திட்டத்தின் மூலம் இந்த மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான குக்கிராமங்களிலும் சிற்றூர்களிலும் இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகள் ஒன்று கூடி, ஊட்ட உணவு அருந்தும் காட்சி, அவர்கள் தங்கள் மழலைமொழியில் நமக்கு வாழ்த்துக் கூறும் ஒளிமயமான நிகழ்ச்சியாக அமையும் என்ற எதிர்பார்ப்பில் இத்திட்டத்தில் பங்கு கொள்ள உங்கள் அனைவரையும் உவகையோடும் உரிமையோடும் பரிவோடும் பாசத்தோடும் இரு கைகூப்பி அழைக்கிறேன்

**வாழ்க தமிழகம்!**

**வாழ்க தமிழகக் குழந்தைகள்!**

**அண்ணா நாமம் வாழ்க!**



தமிழரசு

-7-1982

இலவச
இணைப்பு



ஜெய்-...